வரலாற்றாய்வாளர்

செ. திவான் M.A., M.Phil

சுதந்திரப் போராட்ட வரலாற்று
நூல் வரிசை – 3



இந்திய சுதந்திரப் போரில் இரு சகோதரர்கள்

ILAKKIYACHOLAI
இலக்கியச்சோலை

சுதந்திரப் போராட்ட வரலாற்று
நூல் வரிசை – 3

இந்திய சுதந்திரப்போரில்
இரு சகோதரர்கள்

வரலாற்றாய்வாளர்
செ. திவான் M.A., M.Phil.,

இலக்கியச்சோலை
26, பேரக்ஸ் சாலை, பெரியமேடு
சென்னை – 600 003.

இந்திய சுதந்திரப்போரில்

இரு சகோதரர்கள்

செ. திவான் M.A., M.Phil.,

டிசம்பர் 2018 | 96 பக்கங்கள் | முதல் பதிப்பு

விலை ரூ. 90.00

இலக்கியச்சோலை

26, பேரக்ஸ் சாலை, பெரியமேடு, சென்னை - 600003

© ஆசிரியர்

Inthiya Suthanthira Poril
Iru Sagothararkal

Se. Thiwan M.A., M.Phil.,

December 2018 | 96 Pages | First Edition

Price Rs. 90

Ilakkiyacholai

26, Barracks Road, Periyamet, Chennai - 600 003
Phone: +91 44 25610969 Cell: 99629 18724
ilakkiyacholai@gmail.com

© Author

பொருளடக்கம்

பதிப்புரை	4
ராம்பூர் சமஸ்தானம்	6
'காம்ரேட்' பத்திரிகை	10
கராச்சி விசாரணை 1921	28
உலமாக்கள் தந்த பத்வா	33
கராச்சி விசாரணை	36
காக்கினாடாவில் அகில இந்தியக் காங்கிரஸ் தலைமை	44
சீதாரமசாமி கோவில்	54
பெல்காம் காங்கிரஸ் மாநாடு	58
ஒற்றுமைக்கு உழைத்த அலி சகோதரர்கள்	65
சைமன் கமிஷன்	76
நேரு திட்டம்	81
பர்மா பயணம்	85
பேகம் சாஹிபா	95

பதிப்புரை

இந்திய சுதந்திரப் போராட்டம் பல இலட்சக்கணக்கான மக்களின் தியாகங்களினால் எழுதப்பட்டது. விடுதலை போராட்டத்தில் ஈடுபட்ட அனைவரின் வரலாறும் முழுவதுமாக சொல்லப்படவில்லை என்றாலும் சிலரின் பங்களிப்புகள் திட்டமிட்டு மறைக்கப்படுகின்றன. குறிப்பாக, சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்ட முஸ்லிம்களின் தியாகங்கள், அவர்களின் வீர வரலாறுகள் முற்றிலுமாக மறைக்கப்படுகின்றன. இதை யாராலும் மறுக்க முடியாது. இவ்வாறு மறைக்கப்பட்ட வரலாற்றிற்கு சொந்தக்காரர்கள்தான் அலி சகோதரர்கள் என்றழைக்கப்படும் மௌலானா முகம்மது அலி மற்றும் சௌகத் அலி.

என் தோள் மீது இருக்கும் இரு சிங்கங்கள் என்று தேசத்தந்தை காந்தியடிகளால் பெருமிதத்துடன் கொண்டாடப்பட்ட அலி சகோதரர்களின் வாழ்க்கையை இந்தியர்கள் அனைவரும் அறிந்து கொள்வது காலத்தின் கட்டாயம் ஆகும். உலக முஸ்லிம்களின் தலைமையான கிலாபத் துருக்கியில் 1920களில் வீழ்த்தப்பட்ட போது அதை மீட்டெடுக்கும் விதமாக இந்தியாவில் கிலாபத் இயக்கத்தை ஆரம்பித்தனர் அலி சகோதரர்கள். கிலாபத் மீட்புடன் ஆங்கிலேயரிடம் அடிமையாக இருந்த தேசத்தை மீட்பதிலும் அவர்கள் சற்றும் குறைவின்றி கவனத்தை செலுத்தினர். இந்தியாவில் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறைகளை முடிவுக்கு கொண்டு வர இந்து – முஸ்லிம் ஒற்றுமை அவசியம் என்பதை உணர்ந்தவர்கள் அதனை கட்டிக்காப்பதிலும் மும்முரமாக ஈடுபட்டனர். ஆனால் துரதிஷ்டவசமாக அதனை சீர்குலைக்கும் முயற்சிகளும் அப்போது மேற்கொள்ளப்பட்டன.

அடிமை தேசத்தில் எனது இறந்த உடல் கூட அடக்கம் செய்யப்படக் கூடாது என்பதில் மௌலானா முகம்மது அலி காட்டிய உறுதி அவர்களின் சுதந்திர வேட்கைக்கு சான்று பகர்கிறது. அவர்களின் ஜனாஸா தொழுகையில் கலந்து கொண்ட

மக்கள் திரள் சர்வதேச அளவில் அவர்களுக்கிருந்த மதிப்பை காட்டுகிறது.

மறைக்கப்பட்ட வரலாறுகளை மீண்டும் வெளிச்சத்திற்கு கொண்டு வருவதில் சமகாலத்தில் முன்னணியில் இருக்கும் தமிழ் வரலாற்றாய்வாளர்களில் செ. திவான் முன்னணியில் உள்ளவர். மக்கள் அறியாத வரலாறுகளை அவர்களிடம் சேர்க்க வேண்டும் என்ற அவரின் ஆவலின் வெளிப்பாடுகளே அவரின் எழுத்துகள். மௌலானா முகம்மது அலி ஒரு சிறந்த பத்திரிகையாளராகவும் திகழ்ந்தார் என்பது நிச்சயம் பலருக்கும் புதிய தகவலாகத்தான் இருக்கும். இதுபோன்ற பல சுவாரஸியமான செய்திகளும் விரிவாகவே கொடுக்கப்பட்டுள்ளன. தனது எழுத்துகள் அனைத்தையும் ஆதாரப்பூர்வமாக நிறுவுவது செ. திவான் அவர்களின் தனித்துவம் ஆகும். அவர்களின் மற்றுமொரு புத்தகத்தை கொண்டு வருவதில் இலக்கியச்சோலை பெருமிதம் கொள்கின்றது. அவர்களின் ஆரோக்கியத்திலும் நேரத்திலும் வல்லோன் அல்லாஹ் அபிவிருத்தியை ஏற்படுத்துவானாக!

முஸ்லிம்களின் அடையாளங்கள் இடங்களின் பெயர்களிலும் சாலைகளின் பெயர்களிலும் இருக்கக் கூடாது என்று கட்டுக்கடங்காத மதவெறி கொண்ட கும்பல் ஆட்சியில் அமர்ந்து வரலாற்றை மறைப்பதிலும் திரிப்பதிலும் மும்முரமாக செயல்பட்டு வருகின்றது. இச்சூழலில் அலி சகோதரர்களின் வாழ்க்கையை அறிவது நமது கடமையாகவே இருக்கின்றது.

வாசகர்களின் கருத்துக்களையும் விமர்சனங்களையும் தொடர்ந்து எதிர்பார்க்கிறோம்.

எல்லா புகழும் அல்லாஹ்வுக்கே! குறைகள் அனைத்தும் எங்களைச் சாரும். நிறைகள் எல்லாம் நிறைந்த இறைவனைச் சாரும்.

இவண்
மு. முகம்மது இஸ்மாயில்
காப்பாளர்
இலக்கியச்சோலை சாரிடபிள் டிரஸ்ட்

25.11.2018

ராம்பூர் சமஸ்தானம்

‘முஸ்லிம் குயிலே! மேகங்கள் குமுறுகின்றன; மின் வெட்டுகின்றது, மிகப்பயங்கர இடி முழங்குகிறது ஆயினும் இவையாவும் உனது கூட்டை அசைக்கக் கூடியவைகளே அன்றி உன்னை அசைக்கக் கூடியவை அன்று’

‘துன்பம் என்னும் பாலைவனத்தின் வழியிலே நீ மட்டுமா செல்கிறாய்? இதே வழியில் மக்காவிலிருந்து வெளியேறிய மகானின் (முஹம்மது நபி (ஸல்) பாதத்து அடிகளும் பதிந்து கிடப்பதைப் பார்’ என்று மணிமொழிகளை மண்ணிலே விதைத்துச் சென்றவர் வீரகேசரி மௌலானா முஹமது அலி ஜௌஹர், அவருக்கு மூத்தவர் சௌக்கத் அலி.

இவ்விரு சகோதரர்களும் இந்தியத் திருநாட்டின் சுதந்திரத்திற்காக ஆற்றிய, செய்திட்ட தியாகங்கள்தான் என்ன! சற்றே விரிவாகவே பார்ப்போம்...

ரோகிப் கண்டில் உள்ள ராம்பூர் சமஸ்தானம் 6 நகரங்களையும், 1120 கிராமங்களையும் உள்ளடக்கியது. 893 சதுர மைல்கள் பரப்பளவு கொண்டது. 55% மக்கள் இந்துக்கள் 45% மக்கள் முஸ்லிம்கள். கோசி மற்றும் நாகால் போன்ற நீர் ஓட்டங்களால் நீர் வளம் செழித்த பகுதி. அலி சகோதரர்களின் தந்தை அப்துல் அலிகான் 562 இந்திய மாகாணங்களில் ஒன்றான, அப்போதைய ராம்பூர் சமஸ்தானத்தில் தனது தந்தை இலாகி பக்ஷ் போலவே (அலி சகோதரர்களின் பாட்டனார்) உயர் பதவி வகித்து வந்தார்.

1878 டிசம்பர் 10ல் முகமது அலி, ஆபாதிபானு சாஹிபா அப்துல் அலி கான் தம்பதியரின் மகனாகப் பிறந்தார். இவருடன் பிறந்தவர்கள் நான்கு ஆண்கள், ஒரு பெண்; ஆக ஆறு பேர். மூத்தவர் சௌக்கத் அலி. கஷ்டநிலை காரணமாக மூன்று பிள்ளைகளை பரெய்லிலுள்ள ஆங்கிலப் பள்ளியில் கல்விகற்க அனுப்பி வைத்தார் தாயார். (ராம்பூரில் 125 கல்வி நிலையங்களும்,

சமஸ்தானத்தின் அரபிக் கல்லூரியும் இந்தியாவின் எல்லா பாகங்களிலிருந்தும் வரக்கூடிய மாணவர்களை இழுத்திடும் ஆங்கிலப் பள்ளியும், தொழிற்பள்ளியும் அப்போது இருந்தது)

1898 செப்டம்பரில் மௌலானா முகமது அலி தனது பட்டப்படிப்பை 20வது வயதிற்குள் நிறைவு செய்தார். இலண்டன் சென்றார். இந்தியன் சிவில் சர்விஸ் தேர்வில் வெற்றி வாய்ப்பை இழந்தார். ராம்பூர் திரும்பினார். தனது தாய் மாமனார் அம்ஜத் அலிகான் மகளை தனது தாயார் ஏற்பாட்டின்படி திருமணம் செய்து கொண்டார். (1902 ஜனவரி) இத்தம்பதியினருக்கு ஏழு பெண் குழந்தைகள் பிறந்தன. மீண்டும் இலண்டன் சென்றவர். அண்ணல் காந்தி, பண்டித நேரு, காயிதே ஆஜம் முகமது அலி ஜின்னா, நேதாஜி ஆகியோரைப் போலவே இலண்டனில் கல்வி பயின்றார். ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் பி.ஏ. ஆனர்ஸ் பட்டம் பெற்றார். ராம்பூர் திரும்பினார். பரோடாவில் சிவில் சர்வீஸில் பணியாற்றினார் (1903). 1904 இல் அகமதாபாத்தில் முகமதியர் பல்கலைக்கழகத்தில் உரையாற்றிட அழைக்கப்பட்டார். 1905 இல் கர்சனின் வங்காளப் பிரிவினை நடந்தது.

1906ல் முஸ்லிம்கள் ஆகா கான் தலைமையில் மிண்டோ பிரபுவைச் சந்தித்தனர். கோரிக்கைகளை எடுத்து வைத்தனர். டாக்காவில் அகில இந்திய முஸ்லிம் லீக் கூட்டம் 1906 டிசம்பர் 30ம் நாள் நவாப் வக்காருல் முல்க் தலைமையில் நடந்தது. கூட்டத்தில் ஆகாகான் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். செயலாளர்களாக நவாப் வக்காருல் முல்க், முஹ்ஸினுல் முல்க் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்தக் கூட்டத்தில் மௌலானா முகமது அலி பங்கேற்றார்.

முஸ்லிம் லீக்கின் முதற்கட்ட நடவடிக்கைகளைத் தனியாக வெகு அழகான முறையிலே மௌலானா முகமது அலி அவர்கள் தமது நீலி கிதாப் என்னும் புத்தகத்திலே (Green Book) எடுத்துக்காட்டியுள்ளார். இப்புத்தகம் ஏராளமாய் விற்பனையாயிற்று. இந்திய முஸ்லிம் உலகத்திலே புத்துணர்ச்சியும், மறுமலர்ச்சியும் பொது வாழ்வில் ஆர்வமும் ஏற்பட்டதற்குக் காரணம் அந்தப் புத்தகம்தான் எனலாம் என்பார் எனது கண்ணியத்திற்குரிய மௌலவி மர்ஹூம் அபுல்ஹஸன் ஷாதலி சாகிப் நூரிய்யா பாஜில் பாகவி, ஜமாஅத்துல் உலமா ஆசிரியர் (முஸ்லிம் லீக் சரிதை, முதற்பாகம் பக்கம் 14) முதல் முஸ்லிம் லீக் கூட்ட நடவடிக்கைகளை லக்னோவில் 1907ல் அச்சிட்டு தனி நூலாக வெளியிட்டவர் மௌலானா முகமது அலி. பின்னர் அது பாகிஸ்தான் தேசிய

ஆவணக் காப்பகத்தால் கராச்சியிலிருந்து 1967 மற்றும் 1969ல் மறுபிரசுரம் செய்யப்பட்டது.

வரலாற்றுச் சிறப்புமிக்க முதல் முஸ்லிம் லீக் மாநாட்டில் டாக்கா நவாப் சலீமுல்லாஹ்கான், சர். சுல்தான் முஹம்மது ஷாஹ் ஆகாகான், மீர்மஹ்தி அலிகான், நவாப் முஹ்சினுல் முல்க், நவாப் வகாருல் முல்க், மௌலானா முகமதலி ஜவ்ஹர், மௌலானா சௌகத் அலி ஜவ்ஹர், காயிதே ஆஜம் முகம்மது அலி ஜின்னா, அல்லாமா டாக்டர் முஹம்மது இக்பால் (பெருங்கவிஞர்), மௌலானா சையத் அலி இமாம், பஜ்லுல் ஹசன், மௌலானா ஹஸ்ரத் மோஹானி, மஜ்ஹருல் ஹக், யாகூப் ஹசன் சேட், மௌலானா மௌலவி ரபிய்யுதீன், பாரிஸ்டர் சையத் நபியுல்லாஹ், யூசுப் ஹசன், ஹக்கீம் அஜ்மல்கான், சையத் அமீர் அலி ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டதாக முஸ்லீம் லீக் 1906 –2006 நூற்றாண்டு வரலாறு முதல்பாகத்தில் ஏ.எம். ஹனீப் (சென்னை, 2008, பக் 26) தெரிவித்துள்ளார். ஆனால் முதற்கூட்டத்தில் ஆகாகான் கலந்து கொள்ளவில்லை. ''சில அலுவல்களின் காரணமாக அதில் நான் பங்குபெற இயலாது போய்விட்டது. இருப்பினும் நானே முஸ்லிம் லீக்கின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். 1912ஆம் ஆண்டு வரை நான் லீக்கின் தலைவனாக இருந்தேன்'' 1963ல் சாந்தி விகடன் வெளியிட்ட 3வது ஆண்டு நிறைவு மலர், பக்கம் 130ல் இந்த விவரம் உள்ளது. (The Aga Khan and his ancestors, Naorojim, Dumasia, Bombay, 1939ல் வெளியிட்ட நூலிலும் இந்த விபரத்தை பார்க்கலாம்)

1907ல் பம்பாய் (மும்பை) டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகையில் மௌலானா முகமது அலி 'Thoughts on the present discon-tent' இன்றைய அதிருப்தி பற்றிய நினைவுகள் எனும் தலைப்பில் தொடர்ந்து எழுதினார்.

ஆங்கிலத்திலே அற்புதமான பாண்டித்தியம் பெற்றவர் மௌலானா முகமது அலி. பிரபல ஆங்கில நூலாசிரியர் எச்.ஜி. வெல்ஸ் 'முகமது அலி' நெப்போலியனின் இருதய முள்ளவர். அவருடைய பேனா மெக்காலேயுடைய பேனாவின் சக்தி கொண்டதாக இருந்தது. அவருடைய நாவன்மை எட்மண்ட்பர்க்கின் நாவன்மைக்கு நிகரானது' என்பார்.

1910ல் பரோடாவில் சிவில் சர்வீஸ் பணியை தூக்கி எறிந்தார் முகமது அலி. முழுநேர அரசியல் உலகிற்கு வந்தார். ஜாவ்ரா சமஸ்தானத்தில் மந்திரிப் பதவியை மௌலானா முகமது அலிக்குத் தருவதாக சொன்னார்கள். நவாப்பின் விருப்பத்தை சர். மைக்கேல்

லுட் டயர் ஆதரித்தார். மௌலானா முகமது அலியை அப்பதவியை ஏற்றுக் கொள்ளவும் வற்புறுத்தினார். ஆனால் அதனை ஏற்றுக் கொள்ள மறுத்தார். அதுமட்டுமா? போபால் பேகம் ஸாஹிபா அவர்கள் மௌலானா முகமது அலிக்கு தமது சமஸ்தானத்தில் சீப் செக்ரடரி (தலைமை செயலாளர்) பதவி அளிக்க விரும்பினார். அதனையும் ஏற்கவில்லை. பரோடா சமஸ்தானத்தில் ஏற்கெனவே ஏழு வருஷங்கள் பணியாற்றியதற்கான வெகுமதியாக ஏழாயிரம் ரூபாய்களை அளிக்க முன்வந்தனர். ஆனால் அதனைப் பெற்றுக் கொள்ள அவர் நேரில் செல்லவில்லை.

சர்க்கார் உத்தியோகங்கள், உயர்தர அந்தஸ்துகள், கலாசாலை ஆசிரியர் பீடங்கள், இங்கிலாந்தில் பத்திரிகைத் தொழில், செல்வம், செல்வாக்கு, பெருமை, எல்லாம் அவரை நாடி வந்தது. ஆனால் அவரோ, இந்திய மக்களுக்காக இன்னல்களைத் தாங்கி, இன் முகத்துடன் களம் கண்டார். காம்ரேட் இதழ் துவங்கினார்.

‘காம்ரேட்’ பத்திரிகை

கல்கத்தாவில் (கொல்கத்தா) மங்கலான, மூடுபனி சூழ்ந்துள்ள விடிகாலை நேரத்தில், புத்தாண்டு தினத்தில் 1911ல் வந்து சேர்ந்த மௌலானா முகமது அலி தனது காம்ரேட் பத்திரிகையைத் துவக்கி, கல்கத்தா வீதியிலே விற்பனைக்கு ஏற்பாடு செய்திட ஆரம்பித்தார்.

1911 ஜனவரி 11ல் காம்ரேடின் முதல் இதழ் மக்கள் கரங்களில் தவழ்ந்தது. பணவசதியோ, சுருக்கெழுத்தாளரோ, டைப்ரைட்டரோ, குமாஸ்தாவோ இல்லாமல் சர். சுல்தான் அஹமத் அவர்களின் 250 ரூபாய் கைமாற்றுப் பணத்தைக் கொண்டு, கடும் சிரமத்தில் துவங்கப்பட்ட காம்ரேட் இந்திய பத்திரிகை வானில் பிரகாசமிக்க நட்சத்திரமாக ஜொலித்தது. லட்சுமணபுரி மீர் மஹ்பூஜ் அலிகாசிம் பத்திரிகையின் மானேஜர். அல்லாமா இக்பாலின் கவிதைகளையும், அல்லாமா ஷிப்லி நுஃமானியின் உணர்ச்சி மிகு எழுத்துக்களையும், முகமது அலியின் சொல்லோவியங்களையும் தாங்கி வந்த ‘காம்ரேட்’ துருக்கி, எகிப்து, சிரியா என இந்தியாவைத் தாண்டி புகழ்பெறத் துவங்கியது.

‘நிமிர்ந்து நில்;
உனது கருத்தை
உண்மையை வெளியிடு, இதை
எங்கும் முழங்கிடத் தைரியமாக இரு.
துணிச்சல் உள்ளவர்கள்தான் வாழ்வார்கள்’
இதுதான் ‘காம்ரேட்’ இதழின் கோட்பாடு ஆகும்.

மௌலானா முகமது அலியின் காம்ரேட் பத்திரிகையை ஆங்கிலேயர்களும் விரும்பிப் படித்தனர். இந்திய ராஜப் பிரதிநிதி லார்டு ஹார்டின்ஞ் அவர்களுக்கு இலவசப் பிரதி அனுப்பப்படும். அதை அவர் வாரம் முழுவதும் தன் கைவசமே வைத்துக் கொண்டிருப்பதால், திருமதி லார்டு ஹார்டின் தனக்கென தனியாக

ஒரு பிரதியை அனுப்பி வைத்திட சந்தா செலுத்தியதோடு, காம்ரேட் அலுவலகத்திற்கு அடிக்கடி தொலைபேசியில் பேசி, பத்திரிகை அச்சிடப்பட்டு தம்மிடம் எப்போது வந்து சேரும்? என்று கேட்டுக் கொண்டே இருப்பார். பிரிட்டிஷ் பிரதமர் ராம்ஸே மெக்டொனால்டு காம்ரேட் இதழை விடாமல் படித்து வந்தார்.

நோய்வாய்ப்பட்டநிலை, மாநாடுகளில் கலந்து கொள்ள வேண்டிய அவசியம், ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை மற்றும் சமாதான முயற்சிகள், காங்கிரஸ் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல், கிலாபத் கமிட்டியைப் பலப்படுத்தி அபிவிருத்தி செய்தல்.. இத்தனையையும் தாங்கி, பத்திரிகைக்கு இணை ஆசிரியர் இல்லாமலே தாமே சுயமாகப் பணியாற்றி வெற்றிகரமாக காம்ரேட் இதழை நடத்தினார் முகமது அலி. (14.09.1912 வரை காம்ரேட் கல்கத்தாவிலிருந்து வெளிவந்தது)

ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் 12.12.1911 இல் டில்லிக்கு வந்தார். மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து கல்கத்தா தலைநகரம் மாற்றப்பட்டு 1912ல் டில்லி இந்தியாவின் தலைநகரமாயிற்று. 1912 செப்டம்பரில் மௌலானா முகமது அலியும் தனது காம்ரேட்டின் அலுவலகத்தை டில்லிக்கு மாற்றினார். 12.10.1912 காம்ரேட் டில்லியிலிருந்து வெளிவந்தது. பம்பாய் கிரானிக்கல் பத்திரிகை ஆசிரியர் குழுவில் டில்லி பதிப்பில் பணியாற்றிய என்.எம். டே ‘‘முகமது அலி தம்முடைய பேனாவின் வாயிலாக தனது இருதய கமலத்தில் உள்ளதை அள்ளிக் கொட்டி விடுகிறார். தவிரவும் அவர் ஹாஸ்யமாகவும் சமிக்ஞையாகவும், பரிகாசமாகவும், குத்தலாகவும் தமது பத்திரிகையில் கூறும் விஷயங்கள், பத்திரிகைத் தொழில் நடத்துவோருக்கு இனியொரு காலம் சரீர ரோஷத்தை உண்டாக்கிக் கொண்டே இருக்கும். மக்களின் ராஜிய உணர்ச்சி, அவர்களின் வேலைமுறை, அவர்களது இயக்கங்களின் தன்மை ஆகியவற்றைப் பற்றிய நடைமுறைகளை வகுத்துக் கூறுவதில் முகமது அலிக்கு நிகராக வேறொருவர் கிடையாது’’ என்பார்.

ஆங்கிலத்தில் வெளியான காம்ரேட் இதழால், சாதாரண மக்கள் கருத்துகளை உணர இயலாத நிலையில், 1913 ஜூன் 13ல் டில்லியில் இருந்து ‘ஹம்தர்து’ எனும் உருது இதழைத் துவங்கினார். (F.H.Vincent, History sheet of Mohamed Ali) ஹம்தர்தின் தூதன் என்று மக்கள் இதனை அழைத்தனர். தினசரி ஒரு தாள் அச்சிடப்பட்டு வெளியிடப்படும். உடனுக்குடன் அது விற்பனையாகிவிடும். இதன் மானேஜர் மீர் மஹ்பூஜ் அலி சாகிப். செய்யத் ஹாஷிமீ பரீத் ஆபாதி, காஜி அப்துல் கப்பார், செய்யத் ஜாலிப், மௌலானா அப்துல் ஹலிம் ஷரார், பாரூக் சாகீப் தீவா

ஆகியவர்கள் ஹம்தர்த்தில் பணியாற்றி பின்னாளில் பிரபலமான பத்திரிகை ஆசிரியர்கள் ஆனார்கள்.

ஹம்தர்த் (உருது), காம்ரேட் (ஆங்கிலம்) பத்திரிகைகளின் காரியாலயத்தில் காலை, மாலை ஆலோசனை செய்திட ஆசிரியக் கூட்டம் கூடும். மௌலானா முகமது அலி, சௌக்கத் அலி, ஸெய்யித் மஹ்பூப் அலி, ராஜா குலாம் ஹுஸைன், காஜி அப்துல் கப்பார் இன்னும் சிலர் ஆலோசனையில் ஈடுபட்டனர். முகமது அலி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வேலை பற்றி கட்டளையிடுவார். ஹம்தர்த் பத்திரிகைக்கு விஷயம் நிறைந்துவிடும். அல்லாமா இக்பாலின் கவிதை, சௌக்கத் அலியின் ரீங்காரம், குலாம் ஹுஸைனின் நகைச்சுவை, மஹ்பூஜ் அலியின் இனிய சம்பாசனை உரையாடல் பத்திரிகையில் ஒளிவிடும்.

ஹம்தர்த் உருது தினசரி முதன் முதலாக அஸோஸியேட்டட் பிரஸ், ராய்ட்டர்ஸ் ஆகிய தந்தி சமாசாரங்களைத் தாங்கி வெளிவந்தது. இதனால் பத்திரிகை விற்பனை அதிகரித்தது. விஷயங்கள் இல்லாத போது, ஹக்கீம் அஜ்மல் கானின் ஆலோசனைப்படி பக்கங்கள் குறைவாக அச்சிடப்பட்டு ஹம்தர்த் வெளிவந்தது. நேசநாடுகளுக்கு எதிராக துருக்கி முதல் உலகப் போரில் ஈடுபட்டது. ‘லண்டன் டைம்ஸ்’ ஆங்கில இதழ் துருக்கிக்கும், அதன் சுல்தானுக்கும் விரோதமாக எழுதியது. தேசபிமானிகளான முஸ்லிம்களை அது கோபமுறச் செய்தது. மௌலானா முகமது அலி வெகுண்டெழுந்தார். தமது காம்ரேட் இதழில் 26.09.1914ல் லண்டன் டைம்ஸில் வெளியான சாய்ஸ் ஆப் தி டர்க்ஸ் (துருக்கியரின் விருப்பம்) என்ற தலையங்கத்திற்கு அதே தலைப்பில் கட்டுரையை எழுதி மறுப்பளித்தார். இதற்காக 1915இல் கைது செய்யப்பட்டு ராம்பூரில் பாதுகாவலில் வைக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து டில்லி குதுப் மினாருக்கு அருகில் உள்ள மெஹ்ராலி என்ற சிறிய கிராமத்தில் 5.15.1915ல் அலி சகோதரர்கள் பாதுகாவலில் வைக்கப்பட்டனர். அதன்பின் சிந்து வாராவில் பாதுகாவலில் வைக்கப்பட்டனர். மூன்றரை ஆண்டுகள் சிறையில் இருந்தனர். அந்த பொழுதை நன்கு நூல்கள் படித்திடவும், எழுதிடவும் பயன்படுத்தினார் முகமது அலி.

ஜெர்மனி மற்றும் அதன் கூட்டு நாடுகளுக்கும் பிரிட்டன் மற்றும் அதன் உறவு நாடுகளுக்கும் இடையே நடைபெற்ற உலகப் போரில் துருக்கி ஜெர்மனியுடன் சேர்ந்ததால் யுத்ததின் போக்கில், போர்முனையில் திடீர் மாற்றம் ஏற்பட்டது.

துருக்கியை நோக்கி பீரங்கிகளும் விமானங்களும் தாக்குதலைத் தொடுத்தன. இஸ்லாமிய கிலாபத் (தலைமை) அரசினை நினைவுபடுத்தும் வகையில் அமைந்துள்ள துருக்கி நாட்டின் மீது போர் பரவுவது கண்டு இந்திய முஸ்லிம்கள் ஆவேசங் கொண்டனர். முஸ்லிம்களின் புனிதச் சின்னங்கள் பாதுகாக்கப்படும் என்று பிரிட்டிஷ் அரசு அறிவிப்பு தந்த போதிலும் முஸ்லிம்கள் திருப்தி அடையவில்லை. அந்த வேளையில் ஆங்கில அரசின் நடவடிக்கைகள் உறுதி மொழிக்கும் உத்தரவாதத்திற்கும் மாற்றமாக அமைந்தது. இந்த வஞ்சகத்தை, சூழ்ச்சியை உலகிற்கு எடுத்துக் காட்டும் வண்ணம் காம்ரேடு இதழில் முகமது அலி கட்டுரை தீட்டினார். அவரது எழுத்துக்கள் நாடி நரம்புகளை சூடாக்கியது. பிரிட்டனுக்கு எதிராக ஒட்டுமொத்த முஸ்லிம்களும் கிளர்ந்தெழக் கூடும் என்று கருதிய பிரிட்டிஷ் அரசு காம்ரேட் இதழ்களைப் பறிமுதல் செய்தது. ஆணவத்தனமாக அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்டது. இதோடு, அலியின் சிறைவாசம். எனவே காம்ரேட் மற்றும் ஹம்தர்த் இதழ்கள் நின்றன.

1915 சூலை 7ல் அகில இந்திய முஸ்லிம் லீக் கவுன்சில் கூட்டம் நடந்தது. இந்திய அரசியலை ஆராய்ந்தது. அலி சகோதரர்களையும் மற்றவர்களையும் கைது செய்து வெஞ்சிறையில் அடைத்து வெதும்பவைத்திருக்கும் வஞ்சம் தீர்த்திடும் வக்கிரபுத்தியை வன்மையாகக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பம்பாயில் (மும்பை) டிசம்பர் 30 பிற்பகல் 2 மணிக்கு அகில இந்திய முஸ்லிம் லீக்கின் எட்டாவது மாநாடு அப்துல் ஹுசைன் ஆதம்ஜி பீர்பாய் வரவேற்பில் 5000 பேர்களுடன் கூடியது. மஷர் உல் ஹக் தலைமை தாங்கினார். முஸ்லிம் லீக்கைத் துவங்கிய முன்னணித் தலைவர்களில் ஒருவரான முகமது அலி சிறையில் நோயால் வாடுவதைக் குறிப்பிட்டார். 1.1.1916 இல் மூன்றாவது நாளில் மாநாடு முடிந்தது.முகமது அலியை இந்த மாநாட்டில் கலந்து கொள்ள விடாமல் சிறைவைத்தது குறித்து தலைவர்கள் ஆட்சேபம் தெரிவித்தனர். முகமது அலி, ஜாபர் அலி மற்றும் சௌக்கத் அலியை உடனடியாக விடுவித்திட வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்தனர்.

அகில இந்திய முஸ்லிம் லீக்கின் 9வது மாநாடு லக்னோவில் டிசம்பர் 30, 31 நாட்களில் 1916 ஆம் வருடத்தில் நடைபெற்றது. வரவேற்புக் கமிட்டித் தலைவர் நபியுல்லா உரையுடன் மாநாடு துவங்கியது. பத்திரிகைச் சட்டத்தால் முகமது அலியின் காம்ரேடு, ஹம்தர்த் பத்திரிகைகள் நசுக்கப்பட்டது குறித்து உரையாற்றி அந்த நிலை மாற்றப்பட வேண்டும் என்றும் கூறினார். மௌலானா முகமது

அலியும் சௌக்கத் அலியும் தலைசிறந்தவர்கள், முஸ்லிம்களின் இருதயம் போன்றவர்கள் என்று வர்ணித்தார். இம்மாநாட்டில் முகமது அலி ஜின்னா தலைமை உரையாற்றினார்.

டாக்டர் நசீருத்தீன் ஹசன் பிரிட்டிஷ் அரசின் பத்திரிகைச் சட்டத்தை சாடினார். வஞ்சக நோக்கோடு முகமது அலியின் காம்ரேடு பத்திரிகை மீது தாக்குதலைத் தொடுத்துள்ளது என்றார். பாதுகாப்பு சட்டத்தைப் பற்றிய தீர்மானத்தை அப்துல் காசிம் கொண்டு வந்தார். ஹாபிஸ் அப்துல் அஜீஸ் வழிமொழிந்தார்.

மௌலானா முகமது அலி, மௌலானா சௌக்கத் அலியின் மீது இச்சட்டம் தவறாகப் பிரயோகிக்கப்பட்டுள்ளது என்று பிரிட்டிஷ் அரசை சாடியது. மாநாட்டில் பிபின் சந்திரபாலர் கலந்து கொண்டு உரையாற்றினார். முகமது அலி, சௌக்கத் அலி, ஜாபர் அலிகான் ஆகியோரை அரசு விடுவித்திட வேண்டுமென்று முழங்கினார். மசூர் உல் ஹக் தீர்மானத்தை முன்மொழிந்தார். செய்யது நபியுல்லா தீர்மானத்தை வழிமொழிந்தார். யாகூப் ஹசன் சேட், ஆர்.எம்.குலாம் ஹுசைன் ஆகியோர் தீர்மானத்தை ஆதரித்தனர். (A.M.Zaidi, Evolution of Muslim political thought in India, Vol. one From Syed to the Eminence of Jinnah, New Delhi, 1975 page 564)

அகில இந்திய முஸ்லிம் லீக்கின் பத்தாவது மாநாடு கல்கத்தாவில் 30.12.1917ல் நடைபெற்றது. அப்துல் லத்தீப் அஹமது வரவேற்புரை ஆற்றினார். மாநாடு ஜனவரி முதல் நாள் 1918 வரை நடைபெற்றது. மாநாட்டில் 25 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (Proceedings of 10th session of the All India Muslim League held at Calcutta on the 30th and 31st December, 1917, and 1st January 1918, compiled by the Honourable Syed Wazir Hasan, Lucknow)

அதில் 12வது தீர்மானத்தை முன் மொழிந்தவர் ஃபசல் உல் ஹக். வழிமொழிந்தவர் எஸ்.சஹூர் அகமது. இத்தீர்மானத்தை ஆதரித்தவர்கள் திருமதி சரோஜினிநாயுடு, மகாத்மா காந்தி, டாக்டர் செய்புத்தீன் கிச்சலு, முகமது ஷாபி.

12வது தீர்மானம் நீண்டது. மௌலானா முகமது அலியையும் மௌலானா சௌக்கத் அலியையும் பிரிட்டிஷ் அரசு உடனே விடுதலை செய்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளும் தீர்மானம்தான் அது. தீர்மானத்தின் சில வரிகள் இதோ!

...Lastly, the league desires to convey to Government its profound disbelief in the charges and allegations which have been

officially made against Mr.Mohammad Ali and the league does resolve, in response to the universal wishes of the Musalmans of India, to initiate a campaign of constitutional agitation, both in this country and in Great Britain, with a view to securing the release of the two brothers / (Mohamed Ali and Shaukat Ali) (Evolution of Muslim political thought in India volume two, Sectarian Nationalism and Khilafat, A.M.Zaidi, published under the auspices of India Institute of Applied political Research By, Michiko and Panjatthn, New Delhi 1975, Page 77)

(ஏ.எம். ஜெய்தியின் முஸ்லிம் லீக் வரலாறு பல தொகுதிகளாக வெளிவந்துள்ளது. இவர் அகில இந்திய காங்கிரஸ் அலுவலகத்தில் நூலகராகப் பணியாற்றியவர். இந்திய தேசிய காங்கிரஸ் வரலாற்றை துவக்கம் முதல் 1947 வரை பல தொகுதிகளாக வெளியிட்டார்).

1917 ஆம் ஆண்டு மாநாட்டில் மௌலானா முகமது அலிக்கு அகில இந்திய முஸ்லிம் லீக் தலைமைப் பதவி அவர் சிறையில் இருந்தபோது அளிக்கப்பட்டது. பிரிட்டிஷ் அரசு அலி சகோதரர்கள் விடுதலை பற்றி ஆராய கமிட்டியை 1917 இல் அமைத்தது. 1917 நவம்பவரில் இந்தியாவின் செக்கரட்டரி ஆப் ஸ்டேட் மாண்டேகு 1917 டிசம்பரில் இந்தியா வந்தார். இந்தியாவிற்கு சுயாட்சி வழங்குவதில் பிரிட்டிஷ் அரசு அக்கரை கொண்டுள்ளதென்று அறிக்கையும் தந்தார்.

1918 டிசம்பரில் முகம்மது அலி எழுத்துப்பூர்வமான அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்தார். 1919 ஏப்ரலில் அகில இந்திய காங்கிரஸ் ரௌலட் சட்டத்தை ரத்து செய்யக் கோரியது. (அரசாங்கம் சோதனை ஆணை எதுவுமின்றி எவரையும் கைது செய்யலாம், அபாயகரமான ஆட்கள் என்று கூறி எவரையும் எவ்வித விசாரணையுமின்றி காவலில் வைக்கலாம் என்பதே ரௌலட் சட்டமாகும்).

13.04.1919ல் ஜாலியன் வாலாபாக்கில் 20,000 பேர் கூடி இருக்க, பிரிகேடியர் ஜெனரல் ரெஜினால்ட் டயர் தடையுத்தரவு பிறப்பித்திருந்ததை அவர்கள் அறியவில்லை. 1650 தடவை சுட்டத்தில் 1500 அப்பாவி மக்கள் மாண்டனர். ஆனால் 22.12.1919ல் அரசு அளித்த அறிக்கையில் 400 முதல் 500 பேர்கள் தான் இறந்தனர் என்றனர். (M.Rai satya, Legislative Politics and the freedom struggle in the Punjab, 1897-1947, New Delhi, 1948, Page 85) மேற்கோள் ஜீ.வெங்கடேசன், History of Freedom Struggle in India, Coimbatore, 1985, Page 220).

25.12.1919ல் வெளியான பிரிட்டீஷ் பிரகடனம் அலி சகோதரர்களை விடுதலையடையச் செய்தது. அவர்கள் விடுதலையான செய்தி நாடெங்கும் பரவியது. சிந்து வாராவிலிருந்து அலி சகோதரர்கள் நேராக அமிர்தசரஸில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

1919 டிசம்பர் 27, 28, 29, 30 ஆகிய நாட்களில் அமிர்தசரஸில் காங்கிரஸ் மாநாடு நடைபெற்றது. திலகர், காந்தி, ஹக்கீம் அஜ்மல்கான், பண்டிட் ராம்பாஜ் தத் சௌத்ரி, சரளாதேவி சௌத்ரி, பிபின் சந்திரபால், பண்டிட் மாளவியா, அன்னிபெசண்ட், முகமதலி ஜின்னா, ஹசன் இமாம், ந. சக்கரவர்த்தி, சித்தரஞ்சன் தாஸ், டாக்டர் கிச்சலு, சி.பி.இராமசாமி ஐயர், சர் தின்சா பேடிட், பொம்மஞ்சி C.K. நடரஞ்சன், G.K. தேவ்தர் ஸ்ரீனிவாச சாஸ்திரி, கஸ்தூரி ரங்க அய்யங்கார், கி.ராமசாமி ஐயங்கார், நெவிலி மற்றும் பலர் மேடையில் இருந்தனர்.

வரவேற்புக் கமிட்டித் தலைவர் சுவாமி சிரத்தானந்தர் மாநாட்டுத் தலைவர் நேருவின் தந்தை பண்டித மோதிலால் நேரு; செயலாளர்கள் வி.ஜே. பட்டேல், வி.கி. அன்சாரி, பண்டித கோகரன் நாத் மிஸ்ரா ஆகியோர் பணியாற்றினர். மகாத்மா காந்தி தனது சத்திய சோதனையில் எழுதுகிறார், ''காங்கிரஸ் மகாநாடு நடந்து கொண்டிருந்த போதே லாலாஹரி கிருஷ்ண லாலும் மற்றத் தலைவர்களும் விடுதலையாயினர். அலி சகோதரர்களும் சிறையிலிருந்து நேரே காங்கிரஸுக்கு வந்தார்கள்.

மக்கள் அடைந்த ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை'' (மகாத்மா காந்தியின் சுயசரிதை, சத்திய வேதனை, தமிழாக்கம், ரா.வேங்கட ராஜுலு அகமதாபாத் 2015, (55வது பதிப்பு) (மொத்தம் 6,70,000 பிரதிகள்) பக்கம் 596) அதே நூலில் பக்கம் 598இல் ''அலி சகோதரர்களும் மற்ற கைதிகளும் விடுதலை செய்யப்பட்டது நல்ல சகுனம் என்று எனக்குத் தோன்றியது'' என்று மகாத்மா காந்தி குறிப்பிட்டுள்ளார்.

The Ali Brothers too arrived there straight from Jail. The people's joy knew no bounds... The release of the Ali brothers and other prisoners too seemed to me to an auspicious sign. (M.K.Gandhi An Autobiography or the story of my experiments with truth, Ahamedabad, 2006, pages 444-445) காங்கிரஸ் மகாசபை சரித்திரத்தை எழுதிய பட்டாபி சீதாராமையா இது குறித்து சொல்வது இதோ:

Two incidents may be narrated here which are of interest. The royal pro clamation granting amnesty to political prisoners,

couched in the sweetest language imaginable, reached Amritsar a day before congress was held and with it came Ali Brothers to the city in the midst of a tumultuous enthusiasm of multitudes of people. They had a grand procession and Mahomed Ali appearing on the plat form stated that he came from the chhind wara gaol (jail) 'with a return ticket' an expression which has become classical since (B.Pattabhi sitaramayya, The History of the congress 1885-1935) Congress working committe, Allahabad 1935, page 310.

இதனைச் சுதந்திர சங்கு காரியாலயம், திரு வல்லிக்கேணி சென்னை 1935இல் காங்கிரஸ் மகாசபை சரித்திரம் என்று தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டது. 26.12.1935ல் ராஜேந்திர பிரசாத் முகவுரையுடன் வந்த நூல் அது. அந்த நூலில் பக்கம் 148ல், மகாசபை கூடுவதற்கு முதல் நாளன்று தான் அரசர் பெருமான் ராஜீயக் கைதிகள் சிலரை விடுவிக்கப் போவதாகப் பிரகடனம் வெளியிட்டப்பட்டது. உடனே அலி சகோதரர்கள் சிறையினின்றும் வெளியேற்றப்பட்டு (விடுதலையாகி என்று கூட குறிப்பிடவில்லை) அமிருதசரஸை அடைந்தனர். இவ் இரு சம்பவங்கள் மகாநாட்டில் குதூகலத்தை உண்டாக்கியது. அலி சகோதரர்கள் பிரும்மாண்டமான ஜனங்களால் ஊர்வலாமாக அழைத்துச் செல்லப்பட்டனர்."

இதனை 1961ல் ஏ.கே. கோபாலன் பப்ளிஷர் திருவல்லிக்கேணி சென்னை 5 வெளியிட்டனர். அதில் பக்கம் 130ல் இதே மொழி பெயர்ப்பு வெளி வந்ததுள்ளது.

1935இல் காங்கிரஸ் சரித்திரத்தில் பட்டா பி சீதாராமையா எழுதியதில் விடுபட்டபகுதி எது? மேலே ஆங்கில மூலத்தை மீண்டும் பாருங்கள்.

மௌலானா முகமதலி மிகவும் மனத்துணிச்சலுடன் சொல்லிய செய்தியை 1935களிலேயே மறைக்கத் துவங்கிவிட்டனர். தமிழ்ப்பதிப்பில் 'நான் சிந்தவாரா ஜெயிலில் இருந்து திரும்பவும் செல்வதற்கான ரிட்டன் டிக்கெட் வாங்கிக் கொண்டு தான் இங்கு வந்திருக்கிறேன்' என்று உறுதியுடன் முழங்கினார்.

"அமிர்தசரஸிற்கு அலி சகோதரர்கள் வரும் வழியெல்லாம் ஹிந்து, முஸ்லிம் ஆகிய இரு வகுப்பாரும் இவர்களை மிகக் குதூகலமாக வரவேற்றனர். இவ்விரு சகோதரர்களும் வந்த வண்டி அமிர்தசரஸ் ஸ்டேசன் வந்து சேர்ந்த போத பல்லாயிரக்கணக்கான ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஜெய கோஷத்துடன் அலி சகோதரர்களை வரவேற்றனர். இரயில்வே ஸ்டேசனிலிருந்து

ஊர்வலம் நேராக அகில இந்திய காங்கிரஸ் மகாநாட்டுக் கொட்டகையை நோக்கிச் சென்றது.

அமிர்தசரஸ் நகரவாசிகள் இவர்களை வரவேற்ற முறையும், உணர்ச்சியும் அமிர்தசரஸ் நகரின் தேசிய சரித்திரத்தில் தங்கமை கொண்டு எழுதப்படத் தகும். காங்கிரஸ் மகாநாட்டுப் பந்தலின் வாசற் படியில் மகாத்மாகாந்தி, பண்டிதர்மதன் மோகன மாளவியா முதலிய பல தலைவர்கள் இவ்விரு சகோதரர்களையும் வரவேற்றனர். காங்கிரஸ் பந்தலுக்குள் அலி சகோதரர்கள் கால் வைத்தவுடன் ஹிந்து முஸ்லிம்கள் அனைவரும் எழுந்து நின்று மரியாதை செய்ததுடன் 15 நிமிஷ நேரம் வரை கரகோஷம் செய்தனர். பின்னர் முஸ்லிம் லீக் மகாசபைக்குச் சென்றனர். அங்கும் அலி சகோதரர்கள் மிகப் பிரீதியாகவும் குதூகலமாகவும் வரவேற்கப்பட்டனர்.

காங்கிரஸ் மகாசபையில் மௌலானா முகமது அலி பேசுகையில் கம்பீரமாகவும் உருக்கமாகவும் பிரசங்கம் செய்தார். அதில் ‘‘இந்த சுதந்திரத்திற்காக மிஸ்டர் திலகர் மறுபடியும் சிறைச் சாலைக்குச் செல்ல வேண்டும். என்னை மறுபடியும் சிறைச் சாலையில் ஆயுள் பரியந்தம் (முழுவதும்) அடைத்து வைக்க வேண்டும். மிஸஸ் பெஸண்டுக்கு தூக்கு தண்டனை விதிக்க வேண்டும். ஆனால் இதன் மூலம் பஞ்சாபில் நடைபெற்றது போன்ற (ஜாலியன் வாலாபாக்) அநியாயங்கள் என்றென்றைக்கும் இல்லாது ஒழிய வேண்டும் என்று நான் கூறுகிறேன்.’’ இவ்வாறு மௌலானா முகமது அலியின் ஜீவிய சரிதக் குறிப்பு தெரிவிக்கிறது. (உத்தமபாளையம் S.S. முஹம்மது அப்துல் காதிர் சாகிப், மௌலானா முஹம்மது அலி ஜௌஹர், சென்னை, 1938, பக்கங்கள் 365, 366) எவ்வளவு மனத்துணிவு, தியாக உணர்வு! டிசம்பரில் நினைவு படுத்திப் பார்க்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம்.

அமிர்தசரஸ் மாநாட்டில் காங்கிரஸ் 41 தீர்மானங்களை நிறைவேற்றியது. அதில் 6, 7வது தீர்மானங்கள் ஜாலியன் வாலாபாக், சர் மைக்கேல் டையர் பற்றியது. இத்தீர்மானங்களில் சர் மைக்கேல் டையரை இங்கிலாந்திற்கு திரும்ப அழைத்துக் கொள்ளும் தீர்மானத்தின் மீது மௌலானா முகமது அலி ஆவேசமாக சொற்பொழிவாற்றினார். அமிர்தசரஸ் மாநாட்டு நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு அலி சகோதரர்கள் டெல்லி சென்றனர். அங்கு இராஜ மரியாதை போன்ற வரவேற்பு அளிக்கப்பட்டது. பெரிய பஜார்களில் கொடிகள் பறந்து கொண்டிருந்தன. தெருக்களில், வீதிகளில் அழகான வளைவுகள் அமைக்கப்பட்டிருந்தன.

சாந்தினி சௌக் பஜாரில் மணிக் கூண்டுக்கு கீழில் இரும்புத் தகடுகளால் மிக அழகான ஒரு கப்பல் தயார் செய்யப்பட்டது. ‘சுதந்திரக்கப்பல்’ என்று அதன் மீது எழுதப்பட்டு அதன் மேல் தேசியக் கொடிகள் பறந்து கொண்டிருந்தன. இதில் 12 பேர் உட்கார இடமிருந்தது. கப்பலின் கீழ் நாற்காலிகள் போடப்பட்டிருந்தது. நாற்காலியில் அமர டிக்கெட் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. காலை 11 மணிக்கு அலி சகோதரர்கள் அங்கு வந்தனர். ‘அல்லாஹு அக்பர்’ ‘வந்தே மாதரம்’ என்ற முழக்கங்களும், பூமாரிகளும் பொழியப்பட்டன.

ஹக்கீம் அஜ்மல் கான் அங்கு வர இயலவில்லை. அவர் எழுதிய கடிதத்தையும், அலி சகோதரர்களின் சுதந்திர உணர்வுகள் குறித்தும் டாக்டர் அன்ஸாரி பேசினார். அலி சகோதரர்களுக்கு அவர்களது தேசிய சமூக சேவைகளை ஊழியங்களைப் பாராட்டி, தியாக உணர்ச்சிகளைப் போற்றி எழுதப்பட்ட பாராட்டுப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. அப்போது மௌலானா முகமது அலி, சௌக்கத் அலி சகோதரர்கள் தங்களது நன்றியைக் கூறி விட்டு பின்னர் சிறைவாச அனுபவங்களைச் சொன்னார்கள். இன்றைய இளைஞர்கள் தெரிந்து கொள்வதற்காக அதில் ஒரே ஒரு பகுதி மட்டும் இதோ:

மௌலானா முகமது அலியும் மௌலானா சௌக்கத் அலியும் பாதுகாப்பில் வைக்கப்பட உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. உத்தரவுகளைப் பார்த்தும், இரு சகோதரர்களும் ஒருவருக்கொருவர் ஒன்றாக சப்தமிட்டு வாழ்த்துக் கூறிக் கொண்டார்கள் என்றும் மிகுந்த சந்தோஷத்துடன் இருந்தார்கள் என்றும் காஜீ அப்துல் கப்பார் கான் தகவல் தந்துள்ளார். டில்லி வாசிகளிடம் விடைபெற்றுக் கொண்டு ஜாமிஆ மஸ்ஜிதின் படிக்கட்டில் இறங்கிவந்தார் மௌலானா முகமது அலி. மக்கள் பொறுமையுடனும் உறுதியுடனும் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர்.

மெஹ்ருலியில் முதலில் பாதுகாப்பில் வைக்கப்பட்ட போது தமது பத்திரிகை பணியை விடவில்லை. காம்ரேட் பணியை ராஜா குலாம் ஹுசைனும், ஹம்தர்த் பணியை காஜி அப்துல் கப்பார் சாகிபும் ஸெய்யது ஜாலிபும் கவனித்துக் கொண்டனர்.

மௌலானா முகமதலி ஜில்லா மாஜிஸ்டிரேட்டிடம் தன்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு என்ன? என்று கேட்டார்; ஆனால் மாஜிஸ்டிரேட் பதில் கூற விரும்பவில்லை. மெஹ்ருலியில் பாதுகாப்புக் கைதியாக இருந்தார். டில்லி வாசிகள் நேராக அங்கு சென்று மௌலானா முகமது அலியை பார்க்க முயன்றனர். உடனே அங்கிருந்து லீண் டோனுக்கு மாற்றப்பட்டனர். எழுத்துச் சுதந்திரம்

பறிக்கப்பட்டது. தணிக்கை ஏற்பட்டது. பத்திரிகைகள் தணிக்கை செய்யப்பட்டது. மௌலானா முகமதலி தமது பழைய நண்பரும், புதிய விரோதியுமான ஐக்கிய மாகாண கவர்னர் ஸர். ஜேம்ஸ் மெஸ்டனிடம் தம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு என்ன? என்று கேட்டு எழுதினர். 'கவர்னர் தமது உத்தரவு சம்பந்தமாக அதிகம் பேச இயலாத நிலையில் இருக்கிறார்'' என்று பதில் தரப்பட்டது.

ஹானரபின் ரிஜாஅலி கேள்வி கேட்டபோது 'இந்திய பாதுகாப்புச் சட்டத்தின் 3வது பிரிவின்படி பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்' என்றும் 1916ஆம் வருட அரசு அறிக்கையில் மௌலானா முஹம்மது அலி, மௌலானா சௌக்கத் அலி இருவரையும் பாதுகாப்பில் வைத்துக் கொள்வது அரசுக்கு அவசியமாகத் தோன்றியது. ஏனெனில் அவர்கள் அரசாங்கத்துக்கு விரோதமாக செய்து வரும் கடுமையான நடவடிக்கைகள் மக்களிடையே தீய உணர்ச்சியை (தூய உணர்ச்சியில்லவா) அது தூண்டி உண்டாக்கி வருகிறது என்று குறிப்பிட்டது.

மௌலானாக்கள் பாதுகாப்பில் வைக்கப்பட்டது குறித்து முகமதலி ஜின்னாவும், மல்ஹருல் ஹக்கும் இம்பிரியல் கவுன்சிலில் கேள்விகள் கேட்ட போதும் இதே பதிலைத்தான் அரசு சொன்னது. பிறகு லீண்டோனிலிருந்து சந்துவாராவுக்கு மாற்றப்பட்டனர். வழியில் கோட்துவன், நஜீப் ஆபாத், முராதாபாத், பரேலி, லக்னோ, அலகபாத் வழியாக அழைத்துச் செல்லப்பட்டனர். வழியில் பல பிரமுகர்கள் சந்தித்தனர். அலகாபாத் ரயில் நிலையத்தில் பிளாட்பாரம் டிக்கெட் கொடுக்கப்படவில்லை. ரயில் நிலையம் வெறிச்சோடிக் கிடந்தது. நூற்றுக்கணக்கான போலீசார் குவிக்கப்பட்டிருந்தனர். இரு ஐரோப்பி அதிகாரிகளும் இருந்தனர்.

டாக்டர் நாஜிருத்தீன் ஹஸன், பாரிஸ்டர் முஹம்மது வஸீம் ஜுஹுர் அஹ்மது, ஸெய்யித் ஜுஹுர் அகமது பி.ஏ., பார்க்கச் சென்றதும், அவர்களை வெளியேற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அவர்களை முகமதலியின் தாயார் அரவணைத்து, மகனே இவர்கள் இம்மாதிரியாக கூறிய தற்காக துக்கப்படக் கூடாது' என்று கூறி அனுப்பி வைத்தார். இன்னொரு அதிகாரி வந்து நீங்கள் வண்டியில் ஏறி அமருங்கள் என்றார். மௌலானா முகமதலி மறுத்தார். இந்த ரயில் நிலையத்தில் இரவு 7 மணி வரை இருக்க வேண்டும் என்று அரசு உத்தரவு இருக்கிறதே என்றார். உடனே அந்த அதிகாரி 'இல்லை நீங்கள் ஐந்தரை மணிக்கு வேறொரு ரயிலில் சட்னாவுக்குச் செல்ல வேண்டும். அங்கு சில மணி நேரம் தாமதிக்க வேண்டும். பின்பு இரவில் ஜபல்பூர் வண்டியில் ஏற வேண்டும், என்றார்.

மௌலானா முகமதலி அதனை மறுத்தார். எங்களுக்கு அரசு தந்த உத்தரவுப்படி 3 மணிக்கு அலகபாத் வந்து சேர்ந்து இரவு 10 மணிக்கு நேராக ஜபல்பூர் செல்ல வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. அந்த உத்தரவை நாங்கள் மீறினால் 3 வருடக் கடுங்காவல் தண்டனையோடு மேலும் ஆயிரம் ரூபாய் அபராதமும் செலுத்த வேண்டி வரும். எனவே அந்த வண்டியில் ஏறிட முடியாது என்றார்கள்.

அந்த அதிகாரி மௌலானாவிடம் தாங்களிடம் நான் சாந்தமாக கூறிக் கொண்டிருக்கிறேன் என்றார்; அதற்கு மௌலானா நான் மிகவும் சாந்தமாகக் கூறிக் கொண்டிருக்கிறேன் என்றார். வாக்குவாதம் வலுத்தது; அவர் அங்கிருந்து அகன்றார்; பின் அடுத்த அதிகாரி வந்தார். அவரும் அப்படியே சொன்னார். அதற்கு மௌலானா சௌக்கத் அலி ''தாங்கள்சொல்வது நியாமல்ல; சாந்தமாகக் கேட்டுக் கொள்கிறேன் இங்கிருந்து செல்லுங்கள்'' என்றார்.

எனது கட்டளையை நிறைவேற்ற என்னை நிர்ப்பந்தப்படுத்துகிறீர்கள் என்றார் அந்த அதிகாரி. மௌலானா சௌக்கத் அலி பெரிய உடம்பை உடையவர். ''$6^{1/2}$ அடி உயரமும் ஒன்றரை முழ நெஞ்சும், மூன்றரை மாறு எடையுள்ள ஸ்தூலம் (உடல்) கொண்ட என்னை நிர்ப்பந்தப்படுத்தி உமது கட்டளைக்கு கீழ்ப்படியச் செய்வது சுலபமன்று'' என்றார். பதிலாக அவருக்கு ''நீங்கள் ஜெண்டில்மென்கள் என்று நான் நினைத்திருந்தேன்'' என்றார். அந்த அதிகாரி. பதிலுக்கு மௌலானா 'தாங்கள் ஜெண்டில்மென் என்று நாங்கள் நினைத்திருந்தோம். ஆனால்...''

என்றதும் அதிகாரி கிறு கிறுத்துப் போனார் நிர்ப்பந்தப்படுத்தி கீழ்ப்படிய வைப்பேன் என்றார். உன் இஷ்டம் போல் செய் என்று உறுதியுடன் பதில் தந்தார் மௌலானா. வேறொரு போலீஸ் அதிகாரி வந்தார். அவரிடமும் இதுதான் நடந்தது.

ரயில் நிலைய பிரயாணிகள் தங்கும் அறையில் உளுச்செய்து விட்டு லுஹர், பின்னர் அஸர் தொழுகை தொழுதனர். அதற்குள் அலகபாத் கலெக்டர் பிரிமென்டல் வந்தார்; அலி சகோதரர்கள் நடந்ததைச் சொன்னார்கள். கலெக்டர் உங்கள் பிரயாணத்திட்டத்தை தலைமைச் செயலாளர் மாற்றி விட்டார். எனவே நீங்கள் ஐந்தரை மணி வண்டியில் செல்ல வேண்டும் என்றார்.

உடனே கலெக்டரிடம் சௌக்கத் அலி அப்படியானால் அதனை எழுதித் தாருங்கள் என்றார். அதன்பேரில் கலெக்டர் எழுதிக்

கொடுத்து உத்தரவு தந்தார். உடனே அலி சகோதரர்கள், புறப்பட தயாரானார்கள். இரவு 12 மணி சட்னா வந்தார்கள். அதன்பின் அலகபாத்திலிருந்து வரும் வண்டி வந்தபின் அதில் பிரயாணம் செய்து காலையில் ஜபல்பூர் வந்து இரவில் சந்துவாரா வந்து சேர்ந்தார்கள். அங்கு முஸ்லிம்கள் தொழுகை புரிய பள்ளிவாசல் இல்லை. அங்கு அலி சகோதரர்களின் முயற்சியால் பள்ளிவாசல் கட்டிட ஏற்பாடானது. இந்த நேரத்தில் 3 மாதங்களே பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த அன்னி பெசண்ட், 1918 நவம்பரில் விடுதலை செய்யப்பட்டார். மூன்றரை வருடங்கள் பாதுகாப்பில் வைக்கப்பட்ட நிலையிலும் அலி சகோதரர்கள் விடுதலை செய்யப்பட வில்லை.

அரசு 1919 ஜூனில் அவர்களை பேத்தூல் சிறைக்கு மாற்றினார்கள்.

1919 டிசம்பரில் பேத்துல் சிறையிலிருந்து முகமதலி வைசிராய்க்கு கடிதம் எழுதினார். பேத் தூல் சிறையில் மௌலானாக்களை சிறை வைக்கப்பட்ட குறிப்புக்கள், மௌலானா சௌக்கத் அலியின் டைரியில் காணக்கிடைக்கிறது.

சந்துவாரா நாங்கள் வழக்கம் போல் 11 மணிக்கு தூங்கச் சென்றோம். இரவு 2 அல்லது இரண்டரை மணிக்கு நித்திரையிலிருந்து எழுந்து நோன்பு நோற்க ஸஹர் செய்தோம். அன்று தாயார் கட்டிலில் உட்கார்ந்த படி இரண்டு நிமிடத்தில் பாலை அருந்தி விட்டு தூங்கிவிட்டார்கள். விடிகாலை 4 மணி பங்களாவின் சிறிய தலைவாசலில் காலடிச் சப் தங்கள் கேட்டது. யார்? என்றேன் ஆங்கிலத்தில் டிப்டி கமிஷனர் புலூட்டன் வந்தார். அவருடன் ரைட் என்ற ஜெனரல் ஆஃப் போலீஸ் வந்திருந்தார். மஹர்அலி, லீண்டோன், சந்துவாரா இப்போது பேத்தூலுக்கு அழைத்துச் செல்ல வந்திருந்த ஆங்கிலேயச் சிப்பாய்கள் ஆறு அல்லது ஏழு பேர் மற்றும் இந்தியச் சிப்பாய்கள் பலர் மௌலானா சௌக்கத் அலியின் கட்டிலை சூழ்ந்து கொண்டர். அப்போது பனியனும், கால் சராயும் அணிந்திருந்தார்.

சௌக்கத் அலியைப் பார்த்து போலீஸ் அதிகாரிகள் எங்களுக்கு எந்த விதக் கஷ்டமும் கொடுக்காமல் தாங்கள் வரவேண்டும் என்றார்கள்; ‘‘வாருங்கள் போகலாம்; நான் தயாராக இருக்கிறேன்’’ என்றார் சௌக்கத் அலி. நான்கு பக்கங்களில் அவரைப் போலீசார் சூழ்ந்திருந்தனர்.

போலீஸ் அதிகாரி ரைட் சௌக்கத் அலியின் கால்களிலிருந்து உடல் முழுக்க கை வைத்துத் தடவிப்பார்த்தார். பனியனுக்குள்ளும் கை விட்டுப் பார்க்க அவர் தவறவில்லை.

அடுத்து மௌலானா முஹம்மது அலி எங்கே? என்றார்கள். அதோ உள்ளே தூங்கிக் கொண்டிருக்கிறார் இதோ கூப்பிடுகிறேன் என்றார் சௌக்கத் அலி.

ஜாஹிர், பஞ்சதன்காள், அக்தர் அலி ஆகியோர் வந்து விட்டனர். ஜாஹித் வெளியில் நின்று கொண்டே முஹமதலிக்கு சப்தம் கொடுத்தான். அவரும் கால் ஸராயும் பனியனும் அணிந்திருந்தார். அஸிஸ்டன்டு சூப்பிரின்டன் டண்ட் ஆப் போலீஸ் முஹமதலி மீது கைவைத்ததும் அவர் எரிச்சல் அடைந்தார். அறைக்குள் சென்று சட்டையை அணியச் சென்றார். அதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. உங்களை அழைத்துச் செல்ல வந்திருக்கிறோம் என்றார்கள்.

முகமது அலி ''தயார்; ஆனால் குளித்து விட்டு வருகிறேன்'' என்றார். 5 நிமிடம் அவகாசம் தரப்பட்டது. முஹம்மது கோட்டுப் போடுவதற்குள்ளாக அவரது கையைப் பிடித்து போலீஸ் அதிகாரி அழைத்துச் சென்றனர். பாதுகாவலில் தன் மகன்களோடு இருந்த பீஅம்மா புர்க்கா அணிந்து கொண்டு எங்களுடன் வருவதாக புலூட்டனிடம் சொன்னார்கள்.

அலி சகோதரர்கள் இருவரையும் அழைத்துச் செல்லத்தான் வந்துள்ளோம் என்றார்கள். ஆனால் பீ அம்மா வேனில் ஏற முயற்சித்தார்கள். மோட்டாரை நோக்கி வந்த அவர்களிடம் ''அல்லாஹ் மீது ஆணை தாங்கள் வரவேண்டாம்'' என்று அலி சகோதரர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

முஹம்மது ஹுசைன் அலி சகோதரர்களை தழுவிக் கொண்ட போது அழுது விட்டான். அவன் அழுவதைப் பார்த்த சௌக்கத் அலி அவனது கன்னத்தில் அறைந்தார்.

'ஜாக்கிரதை' காபிர்களுக்கு (முஸ்லிம் அல்லாதவர்களுக்கு) முன் கண்ணீர் வடிக்கலாகாது' என்று சப்தமிட்டு சௌக்கத் அலி சொன்னதும் முஹம்மது ஹுசைன் தைரியங் கொண்டார்.

இருவரையும் பேத்தூல் சிறைச்சாலைக்கு அழைத்துச் சென்றபோது குடும்பத்தார் எவரும் கவலைப்படவில்லை; தங்களது பலஹீனத்தை வெளிப்படுத்தவில்லை. எல்லோருடைய முகத்திலும் கோபக்குறியும் பிரிட்டிஷாரைக் கேவலமாக மதிக்கும் அடையாளங்களுமே காணப்பட்டன.

மிகுந்த சந்தோஷத்துடன் இறைவனுக்கு நன்றி செலுத்திவிட்டு புறப்பட்டோம்; பேத்தூல் ஜெயிலுக்கு கொண்டு செல்லப்பட்டோம். இவ்வாறு மௌலானா சௌக்கத் அலியின் டைரிக் குறிப்பு அவர்களது சிறை அனுபவங்களை இவ்வாறு தெரிவிக்கிறது.

சிறையிலிருந்து விடுதலையாகி அலகாபாத் காங்கிரஸ் மாநாட்டிற்கு அலி சகோதரர்கள் சென்றதை முன்னரே பார்த்தோம். அதன்பின் இங்கிலாந்து சென்று ராஜப் பிரதிநிதி செம்ஸ்போர்டை சந்திக்க இந்திய தூதுக்கு குழு முடிவெடுத்தது. 1920 ஜனவரியில் சென்ற தூதுக் குழுவால் பலன் இல்லை. 1920 பிப்ரவரியில் மௌலானா முகமது அலி தலைமையில் தூதுக் குழு சென்றது. அதில் போப்பால் சட்டசபை செயலாளர் ஹஸன் முஹம்மது ஹயாத், ஸெய்யித் ஹுஸைன், மௌலானா ஸெய்யித் சுலைமான் நத்வி, அபுல் காசிம், ஆக்ஸ்போர்டில் பயின்று கொண்டிருந்த ஷுஐப் குரைஷி, அப்துல் ரஹ்மான் ஸித்திக் பீ ஆகியோரைக் கொண்ட குழு இங்கிலாந்தில் 1920 பிப்ரவரியில் பல இடங்களில் சென்று பிரசங்கங்கள் செய்தது. பல தலைவர்களைச் சந்தித்தது. பலன் ஏதுமின்றி எட்டு மாதங்கள் கழித்து 13.10.1920இல் இந்தியாவிற்கு திரும்பியது. இதனால் முஸ்லிம்கள் மிகுந்த மனவேதனையுற்றனர். பலர் தங்களது அரசுப் பணிகளையும் பட்டங்களையும் துறந்தனர்.

1920இல் டிசம்பர் 26–31 நாட்களில் நாகபுரியில் 35வது அகில இந்திய காங்கிரஸ் கூடியது. சேத் ஜமன்லால் பஜாஜ் வரவேற்புக் கமிட்டி தலைவராக இருந்தார். 14582 பேர் கலந்து கொண்டனர். மாநாட்டில் ஜின்னா, மாளவியா, சி.ஆர்.தாஸ், முகம்மது அலி ஆகியோர் கலந்து கொண்டனர். கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும், ஒத்துழையாமை இயக்கத் தீர்மானத்தை நிறைவேற்ற மௌலானா முகம்மது அலி அரும்பாடுபட்டார்.

ஜின்னா, மாளவியா ஆகியோரிடையே கருத்து வேறுபாடு இருந்த போதிலும் தீர்மானம் மௌலானா முகம்மது அலியின் முயற்சியால் வெற்றியுடன் நிறைவேற்றப்பட்டது. இந்தியா முழுவதும் புத்துணர்ச்சி ஏற்பட்டது. உதவி மறுத்தல் தீர்மானம் ஒப்புக் கொள்ளப்பட்டபின் காந்தியும் அலி சகோதரர்களும் இந்தியா முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டார்கள். சிகப்புத் தொப்பிகளை (காவல்துறை) கண்டதும் நடுங்கும் மக்கள் துணிவுடன் தேசிய மகாநாடுகளில் கலந்து கொண்டனர். ‘அல்லாஹு அக்பர்’ ‘இந்து முஸ்லிம் ஒற்றுமைக்கு ஜே’ என்ற முழக்கங்கள் எங்கும் எதிரொலித்தது.

‘காந்திக்கு ஜே’ ‘அலி சகோதரர்களுக்கு ஜே’ என்று தெருவெல்லாம் முழக்கங்கள் ஒலித்தன. திலகர் சுயராஜ்ய நிதி, கிலாபத் நிதி, ஸமர்னா பண்டு வசூலிக்ககத் திட்டமிடப்பட்டது.

நாடெங்கும் ஒத்துழையாமை இயக்கம் வெற்றியுடன் நடத்தப்பட்டது. மக்கள் ஆங்கிலேயர் கொடுத்த பட்டம், பதவி, பணிகளை துறந்தனர், சிறையெடுதல் விரிவடைந்தது. (இது குறித்து தனியாக எழுத வேண்டும்)

மௌலானா முகம்மது அலியின் பேச்சுகள் அரசுக்கு எரிச்சலைத் தந்தது. 1921 சூலை 8 இல் கராச்சியில் 8வது கிலாபத் மாநாடு நடைபெற்றது. 5000 பேர் கலந்து கொண்டனர். மௌலானா முகமது சாதிக் வரவேற்புக் குழு தலைமை வகித்தார். மௌலானா முகம்மது அலி தலைமை வகித்தார்.

"இராணுத்தில் பணி செய்யும் முஸ்லிம்கள் தங்களது முஸ்லிம் சகோதரர்களையே குண்டுக்கு இரையாக்க வேண்டியிருப்பதாலும் பரிசுத்த தலங்களைப் பாதுகாப்பதற்காகவும் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்ய வேண்டியது அவசியம். எனவே சில ரூபாய் சம்பளத்தின் காரணமாக புண்ணிய ஸ்தலங்களின் மீது குண்டு போடவும், பீரங்கிப் பிரயோகம் செய்யும் நிலையும் உள்ளது. எனவே முஸ்லிம் சிப்பாய்கள் இஸ்லாம் மார்க்கத்தின் இவ் அழைப்பிற்குச் செவிசாய்த்து அரசாங்க உத்தியோகங்களை விட்டுவிட வேண்டும்" என்ற தீர்மானம் மௌலானா முகம்மது அலியால் கொண்டு வரப்பட்டது.

மௌலானா ஹஸன் அஹ்மது சாகிப், பீர் குலாம் முஜத்திது சாகிப், மௌலானா நிஸார் அகமது சாகிப், மௌலானா சௌக்கத் அலி, டாக்டர் கிச்லு, சங்கராச்சாரியர் முதலியோர் ஆதரித்துப் பேச தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கராச்சியில் 1921 சூலை 8இல் தீர்மானம் நிறைவேற்றியவர்கள், அதன்மேல் உரையாற்றியவர்கள், அதனை ஆதரித்தவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர். 14.09.1921 இல் காந்தியடிகள் மௌலானா முகம்மது அலியுடன் இரயிலில் வந்து கொண்டிருந்தார் (மலபார் சென்று அங்கு புரட்சியில் ஈடுபட்டுள்ள மாப்பிள்ளை முஸ்லிம்களைச் சந்திப்பது அவர்களின் திட்டம் இது குறித்து '1921' என்ற விரிவான நூல் இறையருளால் பின்னர் வெளி வரும்)

ஆந்திராவில் வால்டேர் இரயில் நிலையத்தில் மௌலானா முகம்மது அலி கைது செய்யப்பட்டார். சௌக்கத் அலியும் கைது செய்யப்பட்டார்.

ஆந்திராவின் கிழக்கு கடற்கரை பகுதியில் முகம்மது அலி வருவதை அரசாங்கம் விரும்பவில்லை. முகம்மது அலி பெஜவாடா வரை வருவதை தடுக்க விரும்பி, பம்பாய் (மும்பை) போலீஸ் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு, அவரைக் கைது செய்ய பம்பாய் போலீசார் வாரண்டுடன் வந்து கொண்டிருந்தனர் அவர்கள் வந்து கைது செய்யும் வரை காத்திராமல் விசாகப்பட்டினம் மாவட்ட மாஜிஸ்டிரேட்டிற்கு உத்தரவு அனுப்பி, முகம்மது அலியை வால்டையாரில் கைது செய்தது (14.09.1921) ஏற்கெனவே ஏப்ரல்

மாதத்தில் (1921) தமிழகத்திற்கு காந்தியும் அலி சகோதரர்களும் வந்து போனதின் பலனாக தமிழகத்தில் ஒத்துழையாமை இயக்கம் அதி வேகமடைந்திருந்தது. ஊழியர்கள் சுழன்று சுழன்று பிரச்சாரம் செய்து வந்தார்கள். (அ.இராசாமி, தமிழ்நாட்டில் காந்தி, சென்னை, 1969, பக்கம் 317)

கராச்சியில் இவ்வழக்கு மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் விசாரணைக்கு வந்தது. அது குறித்து பின்னர் விவரிப்போம்.

தமிழக்ததில் இந்த வேளையில் மௌலானா முகம்மது அலியின் புகழ் வேகமாக வளர்ந்தது.

அலி சகோதரர்களாகிய ஷவுகத் அலி, முகமதுஅலி இவர்களின் ஜீவிய சரித்திரம் கும்பகோணம் ஸ்ரீ நாகேஸ்வர சுவாமி தெற்கு வீதி ந.சிங்காரம் நாயக்கரால் பிரசுரிக்கப்பட்டு, கும்பகோணம் டி.கே.காசி நாதனால் ஸ்டார் பிரஸில் பதிப்பிக்கப்பட்டு முதற்பதிப்பு 5000 காப்பிகள் 1921இல் 2 ஆனா விலையில் வெளிவந்தது.

அதுமட்டுமா, ‘‘சுதந்திரப் போரில் தீவிரத் தொண்டாற்றிய கிருஷ்ண ஸ்வாமி சர்மா 1921இல் முகம்மது அலி, ஷவுகத் அலி அவர்களின் ஜீவிய சரிதையும் உபந்யாசங்களும், விசாரணையும் என்ற நூல் 1921 இல் முதல் பதிப்பாகவும் 1922 இல் இரண்டாம் பதிப்பாகவும் வெளிவந்தது. 1 ரூபாய் விலையில் வெளிவந்த அந்த நூல் 179 பக்கங்களைக் கொண்டது. பி.ஆர்.ராம அய்யர் அச்சகத்தில் சென்னையில் அச்சிடப்பட்டது. மௌலானா முகம்மது அலி, மௌலானா சௌக்கத் அலியின் வாழ்க்கை வரலாற்றை 1921 களில் தமிழில் தந்தவர்கள் கிருஷ்ண ஸ்வாமி சர்மா, ந.சிங்கராம் நாயக்கர்.

1921ல் கிருஷ்ணசாமி சர்மா எழுதிய அந்நூலின் ஒரே ஒரு பத்தி இதோ உங்கள் பார்வைக்கு. நூல் பக்கம் 22இல் உள்ள வரிகள் அப்படியே இதோ:

‘‘முஸ்லிம் சங்கத்தை ஸ்தாபித்த முகம்மது அலி சிறைப்பட்ட காலத்தில் போதுமான கிளர்ச்சி செய்யாமல் இருந்தது விசனிகற்பாலது (விசனம் துன்பம்) என்றாலும் அது முதற்கொண்டு இந்துக்களும் முகம்மதியர்களும் (முஸ்லிம்களும்) வரவர சகோதர வளர்ச்சியைக் கொண்டு உழைக்க முன்வந்தனர். முஸ்லிம்கங்களும் (முஸ்லிம் லீக்) காங்கிரஸூம் ஒன்றையொன்று பற்றித் தழுவி நிற்கின்றது. காங்கிரஸ் மகாசபைக்குப் பின்னடைந்திருந்த முஸ்லிம் சங்கம் இப்பொழுது காங்கிரஸிற்கு மேல் போய் விட்டது. முஸ்லிம் சங்கத்திற்கு காங்கிரஸே பலமாக இருந்த நாள் போய் இப்போது

காங்கிரஸ் மகாசபைக்கு முஸ்லிம் சங்கமே பலமாகயிருக்கின்றது. காங்கிரஸ் மகாசபையின் ஜனநாயக உணர்ச்சியை முஸ்லீம் சங்கம் இப்பொழுது காப்பாற்றுகிறது. காங்கிரஸ் மகாசபையின் தீவிர உணர்ச்சிக்குக் காரணம் முஸ்லிம் சங்கமேயாகும். முஸ்லிம் சங்கத்தின் பலம் காங்கிரசுக்கு இப்பொழுது இல்லாமலிருந்தால் காங்கிரஸ் என்ற நாமமே இந்தியாவில் இராது. கிலாபத் கிளர்ச்சிக்கும், பஞ்சாப் படுவதையின் உணர்ச்சிக்கும் தக்கபடி முஸ்லிம் சங்கம் காங்கிரஸுடன் ஒத்துழைத்து வருவதினால் தான், 32 வருட காலத்தில் ஜனநாயக உணர்ச்சியை எழுப்பாத காங்கிரஸ் மகாசபை இரண்டு மூன்று வருட காலங்களுக்குள், அகில பாரதமெங்கும், $31^{1/2}$ கோடி ஜனங்களுக்குள் ஒரு நவசக்தியையுண்டு பண்ணிற்று. இவ்வளவு ஜனநாயக உணர்ச்சிக்கும் காரணம் மௌலானா முகம்மத் அலியேயாவார். 1906ம் வருடத்தில் இவர் முஸ்லிம் சங்கம் ஸ்தாபிக்காமற்போனால், 1912ம் வருடத்தில் பத்திரிகைகளை ஸ்தாபிக்காமலிருந்தால் 1915ம் வருடத்தில் இவரும் இவரது தமையனாரும் சிறைபடாமலிருந்திருந்தால் பாரத நாட்டில் ஜனநாயக உணர்ச்சி இவ்வளவு முதிர்ந்திராது, ஆகவே அலி சகோதரர்களின் உழைப்பே ஜனநாயக உணர்ச்சிக்கு அஸ்திவாரமாகும், நிற்க''

கராச்சி விசாரணை 1921

உலக அறிஞர்களுள் மௌலானா முகம்மதலி ஒருவர். அவர் மகான், தியாகி, அஞ்சா நெஞ்சமும் அமைதியும் ஆழ்ந்த நாட்டன்பும் கொண்டவர். வெட்ஜ் உட்ஸன் ஒரு முறை சொன்னார், "மௌலானா முகமதலி ஒரு மாபெரும் இந்தியர், மானிட வர்க்கத்தின் மகத்தான மந்திரி". மௌலானா முகமது அலியைப் பற்றி எண்ணும் போது உள்ளங்களிலே விடுதலை தாகம் கிளர்ந்தெழுகிறது. இந்திய நாடு தன் இழிநிலை அகற்றி, அடிமைத்தளை அறுத்து, சுதந்திர முரசு கொட்ட வேண்டும் என்று எண்ணியவர் மௌலானா முகமது அலி. தனது திறமையை எல்லாம் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடுத்தினார். தனது உடமையை எல்லாம் அதற்காகத் தந்தார். தனது சட்ட ஞானத்தையும் மார்க்க அறிவையும் மக்கள் எழுச்சியுற பயன்படுத்தினார். சிறையில் பல ஆண்டுகள் கழித்தார்.

1920களில் அவர் தமிழகம் வந்தார். அப்போது மௌலானா முகமதலி பற்றிய நினைவுகளை கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் எம். முகம்மது இஸ்மாயில் சாகிப் அவர்கள் 1931களில் எழுதுகிறார். அதில் காயிதே மில்லத் கூறுகிறார்கள். "ஒரு ஜனசமூகத்தின் சரித்திரத்திலே அவசியப்படும் சமயங்களில் ஒவ்வோர் மகத்தான புருஷர் தோன்றுவதுண்டு. அங்ஙனம் தோன்றியவர்களுள் மௌலானா முகம்மதலி விசேஷம் படைத்த ஒருவராவார். அவர் சகோதரர் மௌலானா ஷௌகத் அலியும் அதைப் போன்றவரே. மௌலானா முகம்மதலி தமது சக்தியினாலும் செயலினாலும் இந்நாட்டு மக்களுக்கு இன்றியமையாத தொண்டு செய்திருக்கிறார். முஸ்லிம்கள் நீண்ட காலம் தூக்கத்தில் இருந்தார்கள். தூக்கத்திலிருப்பவர்களிடையே ஒற்றுமையும் உணர்ச்சியும் வேகமும் காண்பது எப்படி? இந்த நிலைமையைக் குறித்தே மௌலானா முகமதலி கண்ணீர் விடுத்தார்.

இந்த நூற்றாண்டின் (20ஆம் நூற்றாண்டு) துவக்கத்தில் மௌலானா முகமதலியின் வீர வார்த்தைகள் கிளம்பலாயின.

அவரது வீர மொழிகள் அவருடைய பெருஞ் சேவைகளினாலும் அருமை தியாகத்தின் காரணமாகவும் 1920ஆம் வருஷத்தில் பெருஞ்சூறாவளியாக உருப் பெற்றன. மௌலானாவின் சக்தி நிறைந்த குரல் தூங்கிக் கிடந்த மக்களைத் தட்டி எழுப்பியது. உணர்ச்சியைக் கிளறி பொங்கும்படி செய்தது. அவர்களை எந்தத் தியாகத்திற்கும் தயார் என்று அறைகூவி எழுந்து நிற்கும்படி செய்தது. பொதுமக்களிடையே விழிப்பையும் சுதந்திர உணர்ச்சியையும் உண்டாக்கி விட்ட பெருமை யாருக்காவது ஒருவருக்குச் சொந்தமென்றால் உண்மையில் அந்த ஒருவர் மௌலானா முகம்மதலி ஆவார்.'' (இது கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் சூட்டிய புகழாரம். தொடர்ந்து காயிதே மில்லத் சொல்லும் ருசிகர சம்பவம் இதோ)

1920 ஆம் வருஷத்திலே மஜ்லிஸுல் உலமா சபையின் மூன்றாவது மாநாடு ஈரோட்டில் நடைபெற்றது. அதில் பங்கேற்க மௌலானா முகம்மதலி, மௌலானா சௌக்கத் அலி, மௌலானா அபுல்கலாம் ஆஸாத், ஹக்கீம் அஜ்மல்கான், சௌத்ரி கலிகுஸ்ஸமான் போன்றோர் வந்திருந்தார்கள். அவர்கள் ஈரோட்டில் தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் இல்லத்திலே தங்கியிருந்தார்கள். அப்போது அவர்களுடன் அவ்வீட்டில் வெகுநேரம் நானும் தங்குவதுண்டு. ஒரு சமயம் களம் நாயக்கர் (தந்தை பெரியார்) அவர்கள் தமது அன்னையாரையும், மனைவி நாகம்மையாரையும் வேறு சில மாதர்களையும் அலி சகோதரர்களுக்கு அறிமுகப்படுத்துவதற்காக அழைத்து வந்தார். தலைவர்கள் தரையின் மீது போட்டிருந்த விரிப்பின் மீது அமர்ந்திருந்தார்கள். அவ்வம்மணிகளைக் கண்டதும் தலைவர்கள் எழுந்து மரியாதை செய்து உட்கார்ந்தார்கள். அப்போது தந்தை பெரியார், தன் குடும்பத்துப் பெண்களிடம் சொன்னார்.

''மகாத்மா காந்திக்கு உலகம் அடக்கம்; அந்த மகாத்மா இந்த மௌலானா முகம்மதலி அவர்களின் ஜேபில் (சட்டைப் பையில்) இருக்கிறார்'' என்று மௌலானா முகமதலியைச் சுட்டிக் காட்டிச் சொன்னார். நாயக்கர் அவர்கள் சொன்னது இன்னதென்று அறிந்து கொண்டு மௌலானா முகமதலி அடக்கமாகவும் மரியாதையாகவும் சில வார்த்தைகளை கூறினார்.

மௌலானா சௌக்கத் அலியோ மறுபடியும் எழுந்து நாயக்கரது தாயாரின் (சின்னத்தாயம்மையார்) இருகரங்களையும் பிடித்துக் கொண்டு, தனது சிரத்தின் மேல் வைத்துக் கொண்டு, ''நாயக்கரைப் போன்ற தேசப்பக்தரை ஈன்ற தாங்கள் மகா புண்ணியவதி; ஆகவே நீங்கள் என்னை தேசத்திற்காக ஆசிர்வதிக்க வேண்டும்'' என ஆவேசத்துடன் வேண்டினார். இதையெல்லாம் மௌலானா

முகம்மதலி புன்னகையோடு பார்த்துக் கொண்டிருந்தார். இவ்விதச் சமயங்களில் மௌலானா முகம்மதலியைப் பார்ப்பவர்கள் இவர் ஒரு சாந்த, சாத்வீக புருஷர் என்று மட்டுமே எண்ணிவிடுவர். ஆனால் மேடையில் பேசும்போது வெளிப்படும் அவரது வீர கர்ஜனையோ கேட்போரின் உள்ளத்தை ஆட்கொண்டு மெய்மறக்கச் செய்யும்.

நாயக்கர் (தந்தை பெரியார்) வீட்டில் மௌலானா முகம்மதலி, மௌலானா சௌக்கத் அலி தங்கியிருந்த காலத்தில் இந்து – முஸ்லிம் ஜனக் கூட்டங்கள் அடிக்கடி வந்து வீட்டின் முன்பு வீதியில் நின்று கொண்டு மௌலானா முகம்மதலியைக் காண வேண்டும் என்று கூக்குரல் இடுவது உண்டு. அந்தச் சமயத்தில் மௌலானா நீரிழிவு வியாதியினால் துன்புற்றிருந்தமையால், அவருக்கு அதிகம் களைப்புத் தோன்றும் படி விடக் கூடாது என்று எண்ணி, மௌலானா சௌக்கத் அலி எழுந்து தனது தம்பியை இளைப்பாறும்படி சொல்லிவிட்டு, தாமே கூட்டத்தினரிடம் வந்து தம்பியின் வியாதியைச் சொல்லி மன்னிக்கும்படி கேட்பார். ஜனங்கள் விடுவதில்லை. கடைசியாக மௌலானா முகம்மது அலியே எழுந்து போய் அவர்களுக்குச் சில உரைகள் கூறுவார். அவர் கூறும் வார்த்தைகள் சிலவேயாயினும் மக்களின் இதயத்தைப் பற்றி உணர்ச்சியை உண்டாக்குவனவாய் இருக்கும்''. இது காயிதே மில்லத் அவர்கள் மௌலானா முகமதலிக்குச் சூட்டிய புகழாரம். (மௌலானா ஜௌஹர் மலர், இஸ்லாமிய கலைக் கழகம், சென்னை, ஆர்.பி.எம். கனி தொகுத்தது. பக்கம், 3,4)

எனது தாத்தா சுதந்திரப் போராட்டவீரர் செங்கோட்டை அப்துல் மஜீத் அவர்களின் துணைவியார் முகைதீன் பாத்திமாள் அடிக்கடி பாடுவார். சிறுவயதில் கேட்டேன். பாடல் முழுமையாக நினைவிற்கு வரவில்லை.

''முகலாயர் குலத்தின்
மாணிக்கமாய் பிறந்த
மௌலானா முகமதலியாம்
அவர் பிரசங்கம்
தேசம் எங்கும் பிரக்கியாதியாம்'' (கீர்த்தி பிரசித்தம் colloq)

ஈரோட்டின் மையப் பகுதியான மணிக் கூண்டு அருகில் நேதாஜி சாலை, ஆர்.கே.வி. சாலை பிரியும் இடத்தில் விசாலமான இடம் இருந்தது. மக்கள் பயன்பாட்டிற்குத் தண்ணீர் தொட்டியும் இருந்தது. அந்த இடத்திற்கு அலி சகோதரர்கள் நினைவாக அலி சௌக் என்று பெயர் வழங்கப்பட்டது. (புலவர். செ.இராசு, தெரிந்த ஈரோடு தெரியாத செய்திகள் 2017, பக்கம் 60)

ஈரோட்டைத் தொட்டு விட்டதால் விட்டுப் போகாமல் இன்னுமொரு செய்தி இதோ: 12.08.1920 இல் பம்பாய் மெயிலில் காந்தியும் மௌலானா சௌகத் அலியும் சென்னை வந்தனர். அவர்கள் அமர்ந்திருந்த இரயில் பெட்டி, சென்னை சென்ட்ரல் நிலையத்தில் ஸ்டேஷன் அதிகாரி பார்லோவின் உதவியால் தனியாகக் கழற்றப்பெற்று மக்கள் வரவேற்பிற்காக முதல் பிளாட்பாரத்தின் ஓரத்தில் நிறுத்தப்பட்டது. இது காந்தியடிகளின் ஆறாவது தமிழக வருகை ஒத்துழையாமை இயக்கப் பிரச்சாரம் இதிலே மிக முக்கியம்.

சென்னை மாநில காங்கிரஸ் குழுத் தலைவர் எஸ். கஸ்தூரி ரங்க ஐயங்கார், சென்னை மத்திய கிலாபத் குழுத் தலைவர் குத்தூஸ் பாட்சா, யாகூப் ஹசன், வித்யாசாகர் பாண்டியா, துறைசாமி ஐயங்கார், அப்துல் ஹகீம், ராஜாஜி, திரு.வி.க., வ.வெ.சு.ஐயர், சல்லா குருசாமி செட்டி, ஆதிநாராயண செட்டி, தீரர் சத்திய மூர்த்தி ஆகியோர் ரயில் நிலையத்தில் காந்தியையும், சௌக்கத் அலியையும் வரவேற்றனர். ரயில் நிலையத்தில் பிறைச் சந்திரக் கொடிகள் பறந்து கொண்டிருந்தன. மகாத்மாவும் மௌலானாவும் வண்டியிலிருந்து கீழே இறங்கிய காட்சியை நாம் வர்ணிக்க முடியாது. 'தேவேந்திரன் புஷ்பக விமானத்தில் இறங்கி வந்து பூலோக வாசிகளுக்குத் தரிசனம் கொடுப்பது போல இருந்தது' என்று சுதேசமித்திரன் இதனை வர்ணித்தது.

சென்னை புரசைவாக்கம் சாலை 63ஆம் நம்பர் சேட் கார்டன்ஸில் ஹாஜி அப்துல் ரகிம் சாகிப் விருந்தினராக காந்தியும் சௌக்கத் அலியும் தங்கியிருந்தனர். (சென்னை வருவதற்கு முன்பே அரக்கோணத்தில் அவர்களை கிருஷ்ணசாமி சர்மாவும், வேலூர் கிலாபத் குழுச் செயலாளர் சஹாபுதீனும் வரவேற்றிருந்தனர்). திருவல்லிக்கேணி கடற்கரையில் அப்துல் குத்தூஸ் பாஷா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் 25000 பேர்கள் கூடியிருந்தனர். இக்கூட்டத்தில் சௌக்கத் அலி வீர உரையாற்றினார். திருவல்லிக்கேணி ஜும்ஆ மசூதியில் 13.8.1920ல் காந்தி பேசினார். 15.8.1920 சென்னையிலிருந்து போட் மெயிலில் மௌலானா சௌக்கத் அலியும் காந்தியும் பயணமாகி 16.8.1920இல் கும்பகோணம் சென்றார்கள். செங்கற்பட்டு, விழுப்புரம், கடலூர், சிதம்பரம், மாயவரம் ஆகிய ஊர்களில் மக்கள் பெரும் வரவேற்பு தந்தனர்.

அங்கிருந்து தஞ்சாவூர் வழயாக நாகப்பட்டினம் சென்றனர். நாகூர் இரயில் நிலையத்தில் 10000 பேர்கள் கூடி அவர்களை வரவேற்றனர். காந்தியும் சௌக்கத் அலியும் ஊர்வலமாகச்

சென்றார்கள். நாகூர் தர்கா அருகே மாலிம் சாகிப் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. அங்கிருந்து அவர்கள் திருச்சிக்கு சென்றனர். திருச்சியில் மன்னருக்கு அளிப்பது போன்ற வரவேற்பு காந்திக்கும் சௌக்கத் அலிக்கும் கொடுக்கப்பட்டது. திருச்சியிலே 20000 பேர் கூடியிருந்தனர். முகம்மது பஸுதீன் சாகிப் கேப்டன் தலைமையில் தொண்டர் படை அமைதியை நிலை நாட்டியது. காந்தி சௌக்கத் அலி காரில் செல்ல பெண்கள் பூக்களை அள்ளிவீசினர்.

திருச்சி கிலாபத் குழுச் செயலாளர் வி.எஸ். முகம்மது இப்ராஹிம் தமிழிலும், அப்துல் சுபான் சாகிப் இந்துஸ்தானியிலும் வரவேற்புரைகளை சௌக்கத் அலியிடம் தந்தார்கள். இதற்குப் பின் திருச்சி சையத் முர்த்தாஸா சாகிபு, ஜார்ஜ் ஜோசப்புடன் கள்ளிக் கோட்டைக்கு சௌக்கத் அலியும் காந்தியும் புறப்பட்டு, ஈரோட்டிற்கு 18.8.1920ல் அதிகாலை 3.30 மணிக்கு வந்தார்கள். அப்போது 10000 பேர் கூடி இருந்தார்கள். ‘அல்லாஹ் அக்பர், வந்தே மாதரம்’ முழக்கங்கள் ஒலித்தன. 20.8.1920 கள்ளிக் கோட்டையிலிருந்து மங்களூர் வழியாக சேலம் திரும்பினர். 21.8.1920 இல் சேலத்தில் டி.பி.சின்னகிருஷ்ண செட்டியார் இலவச தண்ணீர்க் குழாய்களை காந்தியும், சௌக்கத் அலியும் திறந்து வைத்தனர். மறுநாள் 22.8.1920 இரு தலைவர்களும் சென்னையிலிருந்து பயணமானார்கள்

தமிழகத்தில் மௌலானா முகம்மது அலியும் மௌலானா சௌக்கத் அலியும் நடத்திய ஒத்துழையாமை இயக்க சுற்றுப் பயணம் புத்தெழுச்சி தந்தது. எனது தந்தையார் நா. செய்யது மசூது அவர்களுடன் மதுரை திருவள்ளூர் பஸ் டிப்போ அருகில் பல ஆண்டுகளுக்கு முன் சென்றபோது அவர்கள் சொன்னார்கள் ‘இது மௌலானா முகமதலி பார்க் பூங்கா’ என்று கோவில்பட்டியில் மௌலானா முகமதலி பூங்கா இருந்ததை பெரியவர் கு. பக்தவத்சலம் பல ஆண்டுகளுக்கு முன் சொன்னார். தமிழகம் எங்கும் மௌலானா முகமதலி புகழ்பாடிய நினைச்சின்னங்கள் இன்று காணாமற்போனது வரலாற்றில் துரதிர்ஷ்டமே.

1921 சூலை 8 கராச்சியிலே மௌலானா முகமதலி தலைமையிலே கிலாபத் மாநாடு நடைபெற்றது. 21.7.1921 இல் கராச்சியில் ஈத்காஹ் மைதானத்திலே மௌலானா முகமதலியின் வீராவேசப் பேச்சும் தீர்மானங்களும் பிரிட்டிஷ் அரசை நிலை குலைய வைத்தது. ஒத்துழையாமை – அகிம்சை என்ற கீதம் ஒவ்வொருவர் நாவிலிருந்தும் ஒலித்தது. அலி சகோதரர்களின் புகழ் பரவியது.

உலமாக்கள் தந்த பத்வா

லட்காமணபுரியிலுள்ள பரங்கி மஹல்லா, தேவ் பந்த் மதரஸா முதலிய பிரபல மதரஸாக்களில் பணிபுரிந்த பிரபலமான மார்க்க மேதைகள் ஐந்நூறு பேர் கையொப்பமிட்டு ஒரு பத்வா வெளியிட்டிருந்தனர்.

பிரிட்டிஷ் சர்க்காருடன் ஒத்துழைப்பதும், அவர்களுடன் நேசங் கொள்வதும் ஹராம் (இஸ்லாமிய முறைப்படி தடுக்கப்பட்டவை) என்றும், ஸ்கூல்களையும் காலேஜ்களையும் பகிஷ்கரிப்பது பர்லு அய்ன் (கட்டாயம்) என்றும் கச்சேரிகளில் வேலை செய்வதும், வக்கீல் தொழிலை நடத்துவதும் தடுக்கப்பட்டவை என்றும், கௌரவப்பட்டங்களை ஏற்றுக் கொள்ளுதல் காபிர்களின் (நம்பிக்கையற்றவர்) தொழில் என்றும் இவ்வியக்கத்தில சேராதவர்கள் போர்களத்தில் புறங்காட்டுபவர்களுக்குச் சமம் என்றும், உயிராலும் பொருளாலும் தியாகம் செய்வது இஸ்லாத்தின் அடையாளம் என்றும் மார்க்க மேதைகளான உலமாக்கள் தங்களது பத்வாவில் தெரிவித்திருந்தார்கள்.

இப்போது கராச்சி விசாரணை நிகழ்வுகளுக்கு வருவோம். கராச்சி விசாரணைக்கு முன்னர் மாஜிஸ்டிரேட் விசாரணை நடைபெற்றது. மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்திற்குள் வந்ததும் தலைவர்கள் பிறந்த இடம் முதலியவைகளைப் பற்றி விசாரித்தார். அதற்கு மௌலானா முகமதலி 'இவைகள் வாரண்டில் எழுதப்பட்டிருக்கின்றன' என்று பதில் தந்தார். இதற்குப் பிறகு வழக்கு விசாரணை நடைபெற்றது. தலைவர்கள் அதில் கலந்து கொள்ளவில்லை. இரண்டு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. பிராசிகியூசனின் சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய விரும்புகிறீர்களா? என்று மாஜிஸ்டிரேட் தலைவர்களிடம் கேட்ட போது, மௌலானா முகமதலியும் மற்றவர்களும், வழக்கு நடவடிக்கைகளில் கலந்து கொள்ள மறுப்பதாகவும் ஆனால் ஸ்டேட் மெண்ட் பத்திரம் தாக்கல் செய்வதாகவும் கூறினார்கள். ஆளுக்கொரு ஸ்டேட் மெண்டை

தாக்கல் செய்தனர். பிறகு மாஜிஸ்டிரேட் குற்றப் பத்திரிகையை படித்து, எல்லோரையும் செசன்ஸ் கோர்ட்டிற்கு கமிட் செய்தார். அதற்குப் பிறகு இவ்வழக்கு கராச்சி செசன்ஸ் கோர்ட்டில் நடைபெற்றது.

India office Library J.P. 4146 Vol. 1742, 1921 case no 33 of 1921Crown vs. Mohamed ali and 6 others in the court of B.C. kennedy, Judicial commissioner, sind. இந்த ஆவணத்தில் கராச்சி வழக்கின் விபரங்களை காணலாம். (14.09.1921ல் கைது செய்யப்பட்ட மௌலானா முகமதலி உள்ளூர் சிறையில் 3 நாட்கள் வைக்கப்பட்டார். சென்னை கொண்டு வரப்பட்டார். பின்னர் பம்பாய் போலீசார் கராச்சி வாரண்ட்டை கொண்டு வந்து அதனடிப்படையில் கைது செய்து கராச்சி கொண்டு சென்றனர். மௌலானா சௌக்கத் அலி, மௌலானா ஹஸன் அஹ்மது சாஹிப், பீர் குலாம் முஜத்திது சாகிப், மௌலானா நிஸார் அஹமது சாகிப், டாக்டர் கிச்சலு சங்கராச்சாரியார் (சாரதா பீடம்) ஸ்ரீசந்திர சேகர பாரதி III ஆகியோர் மீது அரசு குற்றஞ்சுமத்தியிருந்தது. மௌலானா சௌக்கத் அலி பம்பாயில் (மும்பை) கைது செய்யப்பட்டு கராச்சி கொண்டு செல்லப்பட்டார்.

1921 அக்டோபர் 26ல் கராச்சியில் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் வழக்கு விசாரணைக்கு வந்தது. கோர்ட் ஹாலைச் சுற்றிலும் முள்கம்பி வேலி போடப்பட்டது. நான்கு பக்கங்களிலும் ஆயுதம் தாங்கிய போலீஸ் படையினர் மற்றும் இராணுவச் சிப்பாய்கள் காவல் புரிந்தனர். கோர்ட் வளாகத்திற்குள் 250 இந்தியச் சிப்பாய்களும், 250 ஆங்கிலேயச் சிப்பாய்களும் தயார் நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர். நீதிமன்ற ஹாலுக்கு வடக்கில் ஒரு இயந்திரப் பீரங்கியும் நிறுத்தப்பட்டிருந்தது. கோர்ட் நடவடிக்கைகளைப் பார்க்க வழக்கறிஞர்களும் பாரிஸ்டர்களும் மாணவர்களும் முக்கியமானவர்களுமே வந்திருந்தனர்.

மூடப்பட்ட மோட்டார் வண்டியில் (லாரிகள்) மௌலானா முகமதலி, மௌலானா சௌக்கத் அலி மற்றும் ஐவரும் அழைத்து வரப்பட்டனர். அந்த லாரிக்கு முன்னால் ஆயுதம் தாங்கிய இந்திய போலீஸ் படையினரைக் கொண்ட ஒரு லாரியும் தலைவர்கள் வந்த லாரிக்குப் பின்னால் பிரிட்டிஷ் இராணுவத்தினர், சிப்பாய்கள் நிறைந்த இரண்டு லாரிகளும் வந்தன. இந்த வாகனங்கள் சாலையில் வந்த போது வழி நெடுக நின்றிருந்த மக்கள் அல்லாஹு அக்பர் என்று முழக்கம் செய்தது விண்ணைப் பிளந்தது.

26.10.1921 காலை 11 மணி. காலித்தீனா அரங்கினுள் தலைவர்கள் வந்தனர். கூடியிருந்தோர் அவர்களை எழுந்து நின்று வரவேற்று முகமன் கூறினர்.

மௌலானா முகமதலி ஒரு கையில் திருக்குர்ஆனையும், மறுகையில் மைக்கூடு (பேனா) ஒன்றையும் கொண்டு கோர்ட்டுக்குள் சிங்கமென வந்தார்.

மௌலானா சௌக்கத் அலி சிரித்துக் கொண்டே மக்களின் சலாமுக்குப் பதில் அளிக்கும் விதத்தில் தலையையும், கைகளையும் அசைத்தவாறே வந்தார். அவரைப் பின் தொடர்ந்து மௌலானா ஹுசைன் அகமது சாகிப் வந்தார். ஜகத்குரு சாரதாபீட சங்கராச்சாரியார் ஸ்ரீ சந்திர சேகரபாரதி III கைத்தடியுடன் வந்தார். டாக்டர் சைபுதீன் கிச்லுவும் மௌலவி நிஸார் அஹமது சாகிபும் புன்சிரிப்புடன் சலாமிற்குப் பதில் அளித்தவாறே வந்தார்கள். கடைசியில் கோர்ட் அறைக்குள் வந்தவர் பீர் குலாம் முஜத்திது. இவர் சிரித்துக் கொண்டும், திருக்குர்ஆன் வசனங்களை ஓதிக் கொண்டும் வந்தார்.

தலைவர்கள் நீதிமன்றத்தில் அமரும் வரை நீதிமன்றத்திற்குள் இருப்பவர்கள் நின்று கொண்டு இருந்தனர். தலைவர்கள் தங்களது ஆசனத்தில் அமரும் போது அவர்களும் அமர்ந்தனர். விசாரணை துவங்கியது.

கராச்சி விசாரணை

மாஜிஸ்டிரேட் நீதிமன்ற விசாரணையில் தலைவர்கள், சர்க்கார் தரப்பு சாட்சிகள் எவரையும் குறுக்கு விசாரணை செய்யவில்லை. ஒவ்வொருவரும் தனித்தனியாக எழுத்து மூலமாக அறிக்கைகளை (ஸ்டேட் மெண்ட்) தாக்கல் செய்தனர். மாஜிஸ்டிரேட் விசாரணைக்கு பின் எதிரிகள் (தலைவர்கள்) பேரில் குற்றப் பத்திரிகை வாசிக்கப்பட்டு செசன்ஸ் கோர்ட்டுக்கு கமிட் செய்யப்பட்டது. கராச்சியில் செசன்ஸ் கோர்ட்டில் நடைபெற்ற வழக்கு விசாரணை நடவடிக்கைகளிலும் தலைவர்கள் கலந்து கொள்ளவில்லை.

வாய்மொழியாக அந்த மன்றத்தில் தங்களது ஸ்டேட் மெண்டை தாக்கல் செய்தனர். சரித்திரப் பிரசித்தி பெற்ற வாக்குமூலத்தை அங்கு மௌலானா முகமதலி அளித்தார். கராச்சி வழக்கில் ஒரு ஐரோப்பியர், இரண்டு கிறிஸ்தவர்கள், இரண்டு ஹிந்துக்கள் ஜூரிகளாக இருந்தனர். மொத்தத்தில் மூன்று கிறிஸ்தவர்கள் (Jury) 'ஜூரி'களாக இருந்தனர். (ஜூரிகள் என்போர் தங்களுக்கு முன் கூறப்பட்ட வழக்கில் முடிவு தெரிவிப்பதற்காக அமர்ந்திருப்பவர்கள்)

மௌலானா முகமதலி ஜூரர்களை நோக்கிப் பிரசங்கம் செய்யும் முன், நீதிபதியைப் பார்த்து 'இவர்கள் இப்பக்கம் வந்து அமர்ந்தால் சௌகர்யமாக இருக்கும். ஜூரிகளின் முகங்களை நான் இன்னமும் பார்த்ததில்லை. இராணுவ வீரர்களின் மனதைக் கலைத்தேன் என்பது என் மீது சாட்டப்பட்டுள்ள குற்றம். அவர்களது மனங்களைக் கலைத்தது போல, ஜூரிகளின் மனதையும் நான் கலைத்து விட எண்ணங் கொண்டுள்ளேன்' என்றார்.

நீதிபதியும் அவ்வாறே ஜூரிகளை அமரச் செய்தார். நீதிமன்றத்தில் நிசப்தம். ஊசி விழுந்தால் கூட கேட்கும். அப்போது மௌலானா முகமதலி தனது பதில் உரையைத் துவங்கினார். இரண்டு நாட்கள் இந்த உரை தொடர்ந்தது. ('Gentlemen of The Jury' என்ற அந்த ஆங்கில உரை டிம்மி சைஸில் பிரிண்ட்

செய்யப்பட்டு 38 பக்கங்களில் வெளியாகி உள்ளது. Selected writings and speeches of Maulana Mohamed Ali, compiled and edited by Afzal Iqbal M.A., லாகூரில் 1944இல் அச்சிடப்பட்ட நூலில் இந்த விவரங்களைக் காணலாம்) பி.என்.ஐ. அபுத்தாலிப், பி.எம். ஜமால் முஹம்மது ஆகியோரைப் பதிப்பாசிரியர்களாகக் கொண்டு 1965ல் வெளிவந்த வீரகேசரி மௌலானா முஹம்மது அலி ஜவ்ஹர் நூலில் அநுபந்தமாக 'நடுவர் அவை நல்லீர்' என்று கராச்சி விசாரணை 28 பக்கம் டபுள் டிம்மி சைஸில் வெளிவந்துள்ளது. உத்தமபாளையம் மௌலவி அல்ஹாஜ் எஸ்.எஸ். முஹம்மது அப்துல் காதிர் சாகிப் பாக்கவி அவர்களால் எழுதப்பட்டு, சென்னை பிரபல வர்த்தகர் ஆலி ஜனாப் ஓ.எஸ். சதக்தம்பி மரைக்காயர் அவர்களால் 1938ல் முதற்பதிப்பாக ஐந்து ரூபாய் விலையில் 730 பக்கங்களில் வெளிவந்துள்ள நூல் மௌலானா முஹம்மது அலி ஜௌஹர். அதில் கராச்சி விசாரணை 581 பக்கம் முதல் 699வது பக்கம் வரையில் 118 பக்கங்களில் இடம் பெற்றுள்ளது. வருங்காலத்தில் அவை தனி நூலாக வெளிவர வேண்டும் என்பதே எனது அவா. இப்போது விசாரணையில் மௌலானா முகமதலியின் முக்கியச் செய்திகளை காணலாம்.

'ஜூரிகளே, தங்களுக்குப் பின்னால் அமர்ந்துள்ள பெண்களுக்கு முன்புறம் ஒரு தடுப்பாக, திரைபோல உங்களை ஆக்குவதே எனது எண்ணம். இல்லாவிடில், பெண்களை என் வலையில் வீழ்த்த வரும்புகிறேன் (ஸ்தீயிவசியம்) என்ற குற்றத்தை நான் செய்ததாக அரசாங்க வழக்கறிஞர் என் மீது மேலும் ஒரு குற்றத்தைச் சுமத்தக் கூடும். இன்று எனது வசியத்தால் நீதிபதியைக் கூட என்னைப் பார்த்து திரும்ப வைத்துவிட்டேன்' என்று மௌலானா முகமதலி சொல்லி முடிப்பதற்குள் கோர்ட்டில் இரண்டு முறை சிரிப்பொலி எழுந்தது. "I wanted you to act as a screen in front of the ladies now behind you or the public prosecutor may add yet another charge of seduction against me (laughter). But after all I find that as a result of my effort at seduction I have turned the judge also towards me today (laughter).

"கனவான்களே, என்னால் எவ்வளவு நேரம் எடுத்துக் கொள்ள முடியுமோ அவ்வளவு நேரம் எடுத்துப்பேசித்தான் என் கட்சியை நான் விளக்க வேண்டுமெனக் கருதுகிறேன். ஆகவே முன்கூட்டியே நான் உங்களுக்கு கூற விரும்புகிறேன். நீதிபதி எங்களுக்கு ஆயுள் தண்டனையோ, தூக்கு தண்டனையோ அல்லது சிறை தண்டனையோ ஏதாவதொன்றை அளிக்கக் கூடும். நான் எனக்காகவும் என் நண்பர்களுக்காகவும் எதிர் வழக்காடி,

இவைகளிலிருந்து தப்ப முயற்சித்தால் அது அறவே மன்னிக்க முடியாததாகவே இருக்கும். கனவான்களே, நம் இருவரது இனிய பொழுதின் அரிய ஒரு காலத்தையும் அவ்விதம் வீணாக்கும் எண்ணம் எனக்கு சிறிதும் இல்லை.''

Gentlemen, I think I am going to take as much time as I can. So it is necessary to tell you before hand that if I intended to defend myself or my friends and to escape from transportation for life or the gallows or the jail, I don't know what the judge has in store for me - it would have been absolutely unpardonable. No, gentlemen, for that purpose I would not have wasted a single moment of your time or of mine.

தூக்குத் தண்டனையோ, ஆயுள்தண்டனையோ, நாடு கடத்தலோ எதற்கும் அஞ்சாது சிரிக்கச் சிரிக்க (ஏறக்குறைய 25 முறை) வாதங்களை எடுத்து வைத்தார் மௌலானா முகமதலி.

''நான் எதிர் வழக்காடவும் விரும்பவில்லை. உண்மையில் எதிர் வாதம் என்பது எனக்கு இல்லை. எதிர் வாதத்தின் தேவையும் இல்லை. ஏனெனில் வழக்கிற்கு உரியவர்களாக நாங்கள் இல்லை. அரசாங்கம்தான் வழக்கிற்கு உள்ளாகியுள்ளது. நீதிபதியே வழக்கிற்குள்ளாகியுள்ளார். அரசாங்க வழக்கு முறைகள் அனைத்துமே சட்டத்தின் வழி வகைகள். அத்தனையுமே இப்போது விசாரணைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. எனவே என்னைக் காப்பாற்றிக் கொள்ளுதல் என்னும் கேள்வி எழவே இல்லை.''

I do not want any defence. I have no defence to offer. And there is no need of defence, for it is the Government itself that is on trial... It is not question of my defence தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வாதாடவில்லை என்றும் அரசாங்கத்தைச் சாடியும் ஆணித்தரமாக வாதத்தைத் துவங்கினார் மௌலானா முகமதலி.

''நாங்கள் வழி பிசகி நடந்து விட்டோம் என்று சர்க்கார் அனுதாபப்பட்டுச் சொல்லி விடட்டுமே... இவ்வார்த்தைகளைத்தான் கடைசி வார்த்தைகளாக என் நண்பர் மிஸ்டர் ராஸ் அல்ஸ்டன் என்னைக் கூற வேண்டுகிறார். அவைகள் என் அந்நிய வார்த்தைகளாகத்தானிருக்கும். எங்களுக்கு எத்தண்டனை கிடைத்தாலும், பீனல் கோடின் எந்த ஸெக்ஷன்படி கிடைத்தாலும் பரவாயில்லை. பீனல் கோடில் தான் ஸெக்ஷன்களுக்கு குறைவில்லையே. 234, 235, 236, 239, 123B, 131, 109, 505, 117 முதலியன உள்ளன. இந்த ஸெக்ஷன்களைப் பற்றியும் என் மீது சுமத்தியிருக்கும் குற்றங்களைப் பற்றியும் எனக்கு ஒன்றும்

புரியவே இல்லை. எல்லாமாகச் சேர்ந்து எனக்கு எத்தனை வருஷம் தண்டனை கிடைக்குமென கணக்கிட்டுக் கொண்டிருக்கிறேன். எனக்கு இந்த ஆயுள் ஒன்றுதான் உண்டு. என் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்களின் படி எனக்கு தண்டனை கிடைத்தால் அத்தனை வருஷங்களுக்கும் இந்த ஆயுள் போதுமா என்பது எனக்கு விளங்கவில்லை.''

மறுநாளும் காலை 11 மணிக்கு விவாதம் தொடங்கியது. தொடர்ந்து முகமதலி பேசும் போது ''ஜூரர்களாய் விளங்கும் கனவான்களே, நீங்கள் என்னைக் காக்க வேணுமாய் உங்களை நான் வேண்டவில்லை. உங்களை நீங்களே காப்பாற்றிக் கொண்டால் எனக்கு அது போதும்''. But, gentlemen of the Jury I do not want you to save me. I want you to be saved yourselves என்று ஜூரிகளைப் பார்த்து நீதிமன்றத்தில் அஞ்சாது முழங்கியவர் மௌலானா முகமதலி.

அதுமட்டுமா?

நீதிமன்றத்தில் மௌலானா முகமதலி விசாரணையின் போது உரையாற்றுகையில்: நபிகள் நாயகம் (ஸல்) ஹஜ் யாத்திரைக்கு வந்திருந்த எல்லா முஸ்லிம்களையும் ஒன்று கூட்டி, மினாவில் சுமார் 1,24,000 ஹாஜிகளை ஒன்றுகூட்டி அவர்கள் சொன்ன கடைசி விஷயம், ''இது யாது தினம்?'' என நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை வினவ...

நீதிபதி: தங்களது பிரசங்கத்தை நிறுத்துமாறு நான் கேட்டுக் கொள்கிறேன். நபிகள் ஒரு புறமிருக்கட்டும். I would ask you to stop. Never mind about the prophet.

மௌலானா முகமதலி (கடுங்கோபமாய்): நபிகள் நாயகம் (ஸல்) எனக்கு மிகவும் அவசியம். நீங்கள் அந்த வார்த்தைகளை வாபஸ் வாங்க வேண்டும். (Indignantly) I must mind about the prophet. I think you should withdraw that.

மௌலானா சௌக்கத் அலி: அவதூறானதும், பொருத்தமற்றதுமாகும். நீதிபதி அவர்களே உங்கள் பேச்சு தெய்வ நிந்தை. அதிகப் பிரசங்கித்தன்மை. Blasphemy and impertinence.

மௌலானா முகமதலி: நீங்கள் (நபிகள் நாயகம் (ஸல்) குறித்ததை) வாபஸ் வாங்கிக் கொள்ளல் வேண்டும். நீங்கள் பரிகாரம் செய்ய மன்னிப்பு கேட்பது அவசியம். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையே நான் கவனித்துத் தீர வேண்டியிருக்கிறது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அவதூறு செய்பவன் உயிரை நான் வாங்க வேண்டியிருக்கிறது.

You must withdraw that. You must make amends. I have got to mind about the Prophet. I have to fake a man's life who insults the Prophet.

நீதிமன்றத்தில் நீதிபதிக்கு எதிராக, அவர் அண்ணலார் (ஸல்) பற்றி சொன்னதற்காக உயிரையே எடுத்து விடுவேன் என்று உள்ள உறுதியுடன் உரைத்தவர் மௌலானா முகமதலி.

மௌலானா முகமதலி அதே மன்றத்தில் சொன்னார், ''நீதிபதி அவர்களே! அநேக இதர சந்தர்ப்பங்களில் நீங்கள் நடந்து கொண்டவாறே நீங்கள் என் பேச்சைக் கேட்காமலிருக்கலாம். சாட்சியம் பெரும்பான்மை வாசிக்கப்படுகையில் நீங்கள் நித்திரை (தூக்கம்) புரிந்திருக்கிறீர்கள். இப்போதும் நீங்கள் தூங்கலாம். ஆனால், நான் ஜூரிகளுக்குச் சொல்ல வேண்டியிருக்கிறது.

You may not hear me as you have done on many other occasions. You have slept through a great deal of evidence that was being read out. You may sleep now. But I have got to address the Jury.`

நீதிபதி: (பார்வைக்கு கோபமாய்) நீங்கள் அமருகிறீர்களா? இல்லையா?

The court Judge: (with apparent anger) will you sit down?

மௌலானா முகமதலி: நான் அமராவிட்டால்?

நீதிபதி: நான் உங்களை காவலில் வைப்பேன்.

மௌலானா முகமதலி: செய்யுங்கள்.

மௌலானா முகமதலியை அமரச் செய்ய மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளருக்கு உத்தரவிடப்பட்டது. அவர் மௌலானா முகமதலி அருகில் வந்தார். ஆனால் அவரைத் தொடாமல் நிற்க விட்டு விட்டு, போலீஸ் கண்காணிப்பாளர் பின் வாங்கினார்.

இரண்டாவது குற்றவாளியாக குற்றஞ்சுமத்தப்பட்ட மௌலானா ஹுஸைன் அஹமதைக் கூப்பிடுமாறு நீதிபதி சிரஸ்தாருக்கு உத்தரவிட்டார். சிரஸ்தாரும் மௌலானா ஹுஸைன் அஹமது அவர்களிடம் வந்து கூப்பிட்டார். ஆனால் மௌலானா ஹுஸைன் அஹமது அசையவுமில்லை; ஒரு வார்த்தை பேசவும் இல்லை. இந்த

வேளையில் மௌலானா முகமதலி மீண்டும் வாதத்தை எடுத்து வைக்கத் துவங்கினார்.

மௌலானா முகமதலி: (குறுக்கீடுகளைக் கவனியாமல்) இப்போது ஜூரியில் அமர்ந்திருக்கும் கனவான்களே!

நீதிபதி: கோர்ட்டில் குறுக்கிடலாகாது

முகமதலி: நான் நீதிமன்றத்தில் குறுக்கிடவில்லை. நீங்கள்தான் என்னைக் குறுக்கிட்டுத் தடுக்கிறீர்கள். இதுதான் உண்மை.

நீதிபதியிடம் எவ்வளவு துணிச்சலுடன் மௌலானா முகமதலி வாதிட்டார் என்பதனை அறிந்து கொள்ளவே அந்தப் பகுதிகளைச் சொல்லியுள்ளேன். அக்டோபர் 26, 27 (1921) இரு தினங்கள் தனது தரப்பு வாதத்தை முகமதலி எடுத்து வைத்தார்.

கராச்சி விசாரணையின் போது கூடியிருந்தவர்கள் 1500 பேர்கள் என்றது அரசாங்கம். ஆனால் அங்கு கூடியவர்கள் 10000 பேர்கள். அதிலும் பாதிக்கு மேற்பட்டவர்கள் ஹிந்துக்கள் என்பதையும் மறந்து விட வேண்டாம். பலவீனம் எப்போதும் பொய்மையாயிருக்க வேண்டும் என்பதில்லை. உண்மை எந்நிலையிலும் உண்மையாகவே இருக்கும்.

''தண்டனையை விலக்கிக் கொள்ள நான் நாடவில்லை. ஏனெனில் இந்தியாவின் சுதந்திரத்திற்கு ஜெயில்தான் வாசற்படியாகும். அரசனுக்கு (பிரிட்டிஷாருக்கு) எதிராக யுத்தம் புரிந்ததற்காக நான் தூக்கிலிடப்பட்டால், இது என் சட்டம், அது சரி, என்றே இன்னமும் சொல்லுவேன். தூக்குமரத்திலிருந்து தொங்கிக் கொண்டிருக்கும் என் பிரேதம் கூட அதையே கூறுமென நான் நம்புகிறேன். ஆகையால் கனவான்களே, ஆயுள் தீவாந்திர தண்டனையிலிருந்து என்னைத் தப்புவிக்க எண்ணங் கொள்ளாதீர்கள். ஆனால் ஆண்டவன் இருக்கிறதாக உங்களுக்கு எண்ணமிருப்பின், உங்களது ஆத்மா நற்கதியடைய வேண்டுமென உங்களுக்கு ஆசை இருப்பின், உங்களது உள்ளம் உறுதியாயிருந்தால், உங்களது மனசாட்சிப்படி தீர்மானியுங்கள் (தீர்ப்பளியுங்கள்)''. I do not seek to avoid punishment, for the jail is the gateway to India's freedom. And if I am to be hanged for it, in not section 120A or B then, but 121, waging war against the king, gentlemen, I will still say that this my law and that it is right and even my carcass hanging from the gibbet, will say the same. Do not therefore think of saving me, gentlemen, from transporta-

tion for life. But if you have a God and if you have a soul to save and you have faith, you will decide according to your conscience.

இவ்வாறு இரு நாட்கள் தொடர்ந்து தனது வாதத்தை கராச்சியின் காலிக் தீனா அரங்கில் மௌலானா முகமதலி எடுத்துவைத்தார். இறுதியில் ''அல்லாஹ்வே எனக்குத் துணைபுரிவீராக!'' என்று அவர் கூறியதும் அவரது குரல் எழும்பவில்லை. கண்ணீர்த் துளிகள் அவரது கன்னங்களில் வழிந்தோடின. முற்றிலும் களைத்து ஓய்ந்து உட்கார்ந்தார். (And as he said drops of tears rolled down his cheeks and he sat down completely over come).

வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட மௌலானா முகமதலியும் மற்ற ஆறுபேரும் குற்றவாளிகள் அல்ல என்று ஜுரிகள் ஏகமனதாகத் தீர்ப்பளித்தனர். அதனை நீதிபதி ஏற்று இந்தியன் பீனல்கோடு 124 ஏ பிரிவுப்படி இவர்கள் குற்றவாளிகள் அல்ல என்று விடுதலை செய்தார்.

ஆனால் மற்றொரு வழக்கில் இ.பி.கோ. 505வது பிரிவுப் படி மௌலானா முகமதலி மற்றும் ஐவருக்கு இரண்டு வருடக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. வழக்கிலிருந்து ஜகத்குரு சங்கராச்சாரியார் ஸ்ரீசந்திரசேகர பாரதி மூன்றாமவர் விடுதலை செய்யப்பட்டார்.

மௌலானா முகமதலி தண்டிக்கப்பட்டதை அறிந்த அவரது நண்பர்கள் பலர் கட்டிலில் படுத்து உறங்குவதை நிறுத்தினார்கள். நீதிமன்றத்தில் மௌலானா முகமதலி காட்டிய அஞ்சா நெஞ்சம் வீர உரை நாடெங்கும் பரவியது.

மௌலானா முகமதலியின் தயார் பீ அம்மாவும் அவரது துணைவியார் பேகம் முஹம்மது அலியும் ஆச்சரியப்படத்தக்க உறுதியுடன் இந்தியா முழுவதும் சுற்றுப் பயணம் செய்து கிலாபத் நிதி திரட்டினர். 'ஸச்' பத்திரிகை ஆசிரியர் அப்துல் மாஜித் தர்யாபாதி கூறுகையில் 'ஆக்ஸ்போர்டு கலாசாலையில் ஆனர்ஸ் பட்டம் பெற்றவரும், காதிரிய்யா ஸில்ஸிலாவில் சேர்ந்து கொண்டு ஆனந்தமாகவும் மிருதுவாகவும் விலை உயர்ந்ததுமான சூட் கோட்டுகளை, பூட்களை அணிந்து கொண்டிருந்த மௌலானா முகமதலி, சிறைச்சாலையின் நாய் கூடத் திரும்பிப்பாராத உணவு வகைகளை உண்டு வருவது இவ்வையகத்தில் இறைவன் அளித்த அற்புதமாகும்' என்பார்.

14.9.1921ல் வால்டையர் இரயில் நிலையத்தில் முகமதலி கைது செய்யப்பட்டபோது காந்தியடிகள் 22.9.1921ல் யங் இந்தியாவில்

எழுதிய கட்டுரை (Collected works of Mahatma Gandhi XXI. PP 176 & 178) 25.9.1921ல் நவஜீவன் இதழில் அலி சகோதரர்களின் வெற்றி Victory for Ali Brothers, Navajivan 25 September, Gandhi collected works XXI page 196 & 200), 29.9.1921 இல் யங் இந்தியாவில் Gandhi collected works volume XXI 221 & 223. 6.10.1921ல் காந்தி வெளியிட்ட அறிக்கைகள் மௌலானா முகமதலியின் புகழைப்பாடிக் கொண்டு இருப்பதை எவர் மறுக்க, மறைக்க முடியும்? நீதிமன்றத்தால் இரண்டு ஆண்டு கடுங்காவல் தண்டனை பெற்று 1923 செப்டம்பரில் மௌலானா முகமதலி விடுதலையானார். காக்கி நாடாவில் 1923ல் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில் தலைவராகத் தலைமையேற்றார்.

காக்கினாடாவில் அகில இந்தியக் காங்கிரஸ் தலைமை

1921 நவம்பர் 1 இல் அலி சகோதரர்கள் இருவரும் இரண்டு ஆண்டுகள் கடுமையான சிறைத் தண்டனை விதிக்கப்பட்டனர். (History of Freedom Movement Vol. III, R.C.Majumdar, Calcutta, 1963, Page 875) கராச்சி வழக்கில் கர்னல் கயர் மற்றும் சர்க்கார் தரப்பு சாட்சிகளாக ஜமன்ஷா மாபூப் ஷா (வயது 48, காவல்துறை கண்காணிப்பாளர்) முகம்மது பக்ஷ், போலீஸ் கேசவலால், தலைமைக் காவலர் டே பகதூர், இரகசிய போலீஸ் உஸ்மான் கனி, அப்துல் கபூர், லக்கத் ஹூஸைனி, ஷான் பகதூர்கான், பர்னஸ் ஆகியோர் விசாரிக்கப்பட்டார்கள் (இந்தப் பெயர்கள் பல சிரமங்களுக்கு பின் பழைய ஆவணங்களில் இருந்து எடுக்கப்பட்டன).

போலீசார் கைப்பற்றிய முகமதலியின் கடிதங்கள் 59. அதில் 6 நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. 17 கடிதங்கள் அரசாங்கத்தின் பார்வைக்காக சிம்லாவிற்கு அனுப்பப்பட்டது. 36 கடிதங்கள் மௌலானாவின் துணைவியார் பேகம் மௌலானாவிற்கு அனுப்பப்பட்டது.

வழக்கின் நான்காம் நாள் விசாரணையின் போது மௌலானா சௌக்கத் அலி விசாரிக்கப்பட்டார். ''இறைவனின் வழியில் நான் ஈடுபட்டிருப்பதினால் என்னை நீங்கள் தூக்கிலிடவும் செய்யலாம். நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள். தூக்கிட்டாலும் சரியே'' என்று நீதிமன்றத்தில் முழங்கினார் சௌக்கத் அலி. (Life, Speeches & Trial of Mohamud Ali & Shaukat Ali By Krishnaswami Sarma, Congress Publicity Bureau, Sowcarpet, Madras, p.169 இரண்டாம் பதிப்பு விலை ரூ. 1)

24.10.1921 அன்று கென்னடி ஐ.சி.எஸ். தலைமையில் இறுதி விசாரணை நடைபெற்றது. அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் வாதாடும் பாரிஸ்டர் ராஸ்கல்ஸ்டனுக்கு சிந்து அரசு வக்கீல் எலிபள்ஸ்டன்

ஆலோசனை வழங்கினார். இவர்களுக்கு தினமும் முறையே 2000 ரூபாய் மற்றும் 1000 ரூபாய் சம்பளமாக வழங்கப்பட்டது.

இதற்குப்பின்தான் தீர்ப்பு வழங்கப்பட்டு இரண்டு ஆண்டு சிறைத்தண்டனை பெற்று சிறையேகினார். சிறையிலிருந்தபோது மௌலானா முகமதலியின் செல்வப் புதல்வி ஆமினா பேகம் நோயுற்றிருக்கும் செய்தி கிடைத்தது. சிறையிலிருந்து புதல்விக்கு மிகவும் உறுதியுடன் கடிதம் எழுதினார் மௌலானா முகமதலி. சிறையில் தான் படிப்பதற்காக சில நூல்களும் எழுதுவதற்கான பொருட்களும் தமது சொந்தச் செலவிலேயே வாங்குவதற்கு அனுமதி வேண்டி விண்ணப்பித்தார். சில மாதங்கள் கழித்து அனுமதி கிடைத்தது. அதன்படி படிப்பதற்கு புத்தகங்களும் எழுதுபொருட்களும் வாங்கப்பட்டது.

(My life a fragment, An autobiographical sketch of Maulana Mohamed Ali, edited by Afzal Iqbal M.A., 1942, S.H.Muhammed Ashraf, Kashmir Bazar, Lahore, page 152) மௌலானா முகமதலி அவர்களையும் சௌக்கத் அலி அவர்களையும் எந்தத் தீர்மானத்தைக் குற்றமெனக் கூறி சர்க்கார் தண்டித்ததோ அந்தத் தீர்மானங்களை காந்தியடிகள் உட்பட 47 முன்னணி காங்கிரஸ் தலைவர்களும் அறிக்கையாகவே ஆதரித்து வெளியிட்டனர். ஆக்கிரமிப்பு அரசாங்கத்துடனான உறவை பொதுமக்களும் பாதுகாப்பு படையில் உள்ளவர்களும் துண்டிக்க வேண்டும் என்றும் கூறினர். மறுநாள் காங்கிரஸ் கமிட்டி இதனைத் தீர்மானமாக நிறைவேற்றியது. அதுமட்டுமா?

நாடு முழுவதும் உள்ள காங்கிரஸ் கமிட்டிகள் இதனைக் கூட்டங்கள் ஏற்பாடு செய்து மக்களிடையே முழங்கின. (My life a fragment, An autobiographical sketch of Maulana Mohamed Ali, edited by Afzal Iqbal M.A., 1942, S.H.Muhammed Ashraf, Kashmir Bazar, Lahore, page 152) 21.1.1922 இல் மௌலானா சௌக்கத் அலி தனது மகனுக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதினார். இது 28.2.1922ல் காந்தியின் யங் இந்தியாவில் பிரசுரமாகியுள்ளது. நோய்வாய் பட்ட காலத்தில் கூட ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்ள அனுமதி மறுக்கப்பட்டதை அதில் குறிப்பிட்டுள்ளார். (Shan Muhammad, Unpublished letters of the Ali Brothers, Idarah-i-Adabiyat-i-Delhi 2009, Qasimjan street, Delhi - 1979, p. 224)

கேரளத்தில் மாப்பிள்ளைமார் எழுச்சியுடன் போராடினர். பிரிட்டிஷாரை எதிர்த்து தனி அரசை அலி முசல்லியார் தலைமையில்

அமைத்தனர். அரசாங்க அறிவிப்பின்படியே 2,339 பேர்கள் இவ்வெழுச்சியின்போது பிரிட்டிஷாரால் கொல்லப்பட்டனர். 1652 பேர்கள் காயம்பட்டனர். 5,955 பேர்கள் கைது செய்யப்பட்டனர். 39,348 பேர்கள் பிடித்து வைக்கப்பட்டனர். 24,167 பேர்கள் தண்டிக்கப்பட்டனர். (இறைவன் நாடினால் மாப்பிள்ளைமார் எழுச்சி குறித்து விரிவாக அடுத்த புதிய தொடரில் எழுத முனைகிறேன்).

மௌலானா முகமதலி, மௌலானா சௌக்கத் அலி 1921 நவம்பர் 1 இல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட பின், 1921 டிசம்பர் முதல் 1922 ஜனவரி வரை மட்டும் 30,000 பேர்கள் கைது செய்யப்பட்டனர். (Arun Chanora Guha, India's Struggle Quarter of a Century 1921 - 1946 part I, Publication Division Ministry of Information and Broadcasting Government of India, New Delhi, 1982, P. 9) நாடெங்கும் பல்லாயிரக்கணக்கில் மாணவர்கள் தங்களது கல்வியைத் (பிரிட்டிஷார் பள்ளிகள் கல்லூரிகளில்) துறந்தனர். தேசியத் தலைவர்களால் சுதேசிப் பள்ளிகள், கல்லூரிகள் துவங்கப்பட்டன. The Indian Annual Register, 1921 பக்கம் 45 இல் காணப்படும் தேசியப் பள்ளிகளின் விபரம்...

இடம்	கல்வி நிறுவனங்கள்	மாணவர்கள்
சென்னை	92	5000
பம்பாய்	189	17000
வங்காளம்	190	14000
உத்தர பிரதேசம்	137	8000
பஞ்சாப்	69	8000
பீகார், ஒரிசா	442	17000
மத்திய மாகாணம்	86	6000
அசாம்	38	2000

மாணவர்களின் தேசிய எழுச்சியில் கிலாபஃத் இயக்கம் மற்றும் அலி சகோதரர்களின் பங்களிப்பை வரலாற்றில் மறைத்திட முடியாது.

அகில இந்திய காங்கிரசின் 35வது மாநாடு நாகபுரியில் 1920 டிசம்பர் 26 – 31 வரை சேலம் சி. விஜயராகவாச் சாரியார் தலைமையில் நடைபெற்றது. ஜமன்லால் பஜாஜ் வரவேற்புக் கமிட்டி தலைவராக இருந்தார். பொதுச் செயலாளர்களாக மோதிலால்

நேரு, எம்.ஏ. அன்சாரி, மூதறிஞர் சி. இராஜகோபாலாச்சாரியார் (ராஜாஜி) ஆகியோர் இருந்தனர்.

நாகபுரி காங்கிரசில் கலந்து கொண்ட காங்கிரஸ் பிரதிநிதிகள் 14582. (A.M.Zaidi, The encyclopaedia of Indian national Congress, Vol 7, New Delhi, 1979, page 589) இதில் 1050 பேர் முஸ்லிம்கள். (B.Pattabhisitaramayya, History of the Indian National Congress 1885-1935 with an Introduction by Rajendra Prasad, 1935, published by the working committee of the Congress on the occasion of the 50th Anniversary, page 346)

1921 நவம்பர் 1 இல் மௌலானா முகமதலி சிறை சென்றபின், 1921 டிசம்பர் 27, 28 இல் அகமதாபாத்தில் அகில இந்திய காங்கிரசின் 36வது மாநாடு நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட காங்கிரஸ் பிரதிநிதிகள் 4,728 பேர்கள் மட்டுமே. (முந்தைய காங்கிரசில் 14,582 பேர்கள்)

அகமதாபாத் காங்கிரசில் தேசபந்து சித்தரஞ்சன்தாஸ் தலைமை தாங்க வேண்டும். ஆனால் அவர் சிறையில் இருந்ததால் ஹக்கீம் அஜ்மல் கான் தலைமை தாங்கினார். தேசபந்துவின் தலைமை உரையை ஸ்ரீமதி சரோஜினி நாயுடு வாசித்தார்.

இந்த மாநாட்டுப் பந்தல் காதி நகர் என்றழைக்கப்பட்டது. அதே பந்தலில் முஸ்லிம் லீகும், கிலாபஃத் கூட்டமும் நடைபெற்றது. அப்போது அது முஸ்லிம் நகர் என்று பெயர் சூட்டப்பட்டது. (முற்கூறிய நூல் பக்கம் 29).

அலி சகோதரர்கள் கைது செய்யப்பட்ட காலத்தில் சுமார் இரண்டு இலட்ச ரூபாய்தான் கிலாபஃத் நிதி வசூலாகியிருந்தது. கராச்சியில் அலி சகோதரர்கள் சிறைவாசமேற்றபின் மிகச் சொற்ப காலத்திலேயே கிலாபஃத் நிதி முப்பது லட்சம் ரூபாய் வசூலாயிற்று.

‘எங்களது விடுதலை இயக்கம் ஜீவனுள்ளது இரண்டு தலைமுறைகளாக போராடி வருகிறோம். 320 மில்லியன் மக்களை அடிமையாக்கிய நூறு ஆயிரம் ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போராடுகிறோம்’ என்று ரோமிலிருந்து டாக்டர் அப்துல் ஹமீது சேட்டிற்கு மௌலானா முகமதலி எழுதியிருந்தார். அந்தக் கடிதத்தின் நகலை இலண்டன் இந்தியா அலுவலகத்தில் இருந்து இந்தியாவின் வேவுத் தகவல் துறை இயக்குநருக்கு அப்போது அனுப்பப்பட்டது.

அப்துல் மஜீத் தர்யாபாடி 1954 – 1956 களில் இரண்டு தொகுதிகளாக வெளியிட்ட நூல் Mohamed Ali, Dhatidiary (Per-

sonal Diary) Azamgarh அதில் முதல் தொகுதியில் பக்கம் 106 இல் உள்ள பதிவு இதோ.

லக்னோ தெருக்களில் மாலை வேளைகளில் ஆமினாபாத் சதுக்க மாணவர்கள், புகழ்பெற்ற நாடோடிப் பாடலை, (எழுதியவர் அறியப்படவில்லை) பாடிச் செல்வார்கள். காந்தியடிகள் வழிவந்த நாட்டு விடுதலைக்காக கிலாபஃத்திற்காக மௌலானா முகமதலியும், சௌக்கத் அலியும் தங்களைத் தாங்களே முழுக்க முழுக்க சரண் அடைந்து அதற்காகவே தங்களது வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டார்கள். அவர்களுக்கு இறைவன் வெற்றியை அருளட்டும்.

'Said the mother of Mohamed Ali
Son! lay down your life for khilafat!
Shaukat Ali is also with you,
Son! lay down your life for khilafat.
Grieve not for your old mother,
With the kalimah on your lips
Lay down your life for khilafat
You must not fail in this trial
Son! lay down your life for khilafat!
Had I seven sons,
All would I have sacrificed for khilafat.
These are traditions of the faith of Ahmad (Prophet)
Son! Lay down your life for khilafat
I will create consternation on the day of resurrection
I will lead you before God Almighty
I shall take this Government to task (for injustice)
Son! Lay down your life for khilafat

முகமதலியின் சிறைவாசத்திற்குப்பின் இந்தியாவில் உள்ள அனைத்து மதத்தினரும் ஆர்வங் கொண்டெழுந்தனர். பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், பட்டதாரிகள், வழக்கறிஞர்கள், பாரிஸ்டர்கள், மருத்துவர்கள், அறிவாளர்கள், மாணவர்கள் எழுச்சி முழக்கங்களை இட்டதை அப்துல் மஜீத் தாரியாபாதி தனது நூலில் விவரித்துள்ளார்.

Private papers of Lord Reading, Viceroy of India (1921 1926) லார்டு ரீடிங் பீல் என்பவருக்கு 22.6.1922 எழுதிய கடிதத்தில் Vol - V, பக்கம் 14 குறிப்பிட்டுள்ள செய்தி:

கராச்சி ஜெயிலில் முகமதலி கொல்லப்பட்டு சிறை உள்ளேயே புதைக்கப்பட்டு விட்டதாக வதந்தி பரவியதால் 10.2.1922 இல் மிகப்

பெரிய அளவில் கராச்சி சிறை முன் பெண்கள் மற்றும் குழந்தைகள் உள்ளிட்டோர் திரண்டு முழக்கமிட்டனர். இக்கூட்டத்திற்கு தலைவர்கள் யாரும் இல்லை. உடனே முகமதலியை அவர்கள் முன்னால் வரவழைத்து அவர் சிறிது பேசிய பின்னரே கூட்டம் கலைந்து சென்றது. இது 7.3.1922 இல் பம்பாய் காவல்துறை ஐ.ஜி. மேலிடத்திற்கு எழுதியது. இதன் அடிப்படையில் தான் லார்டு லீடிங், பீலுக்கு கடிதம் எழுதியது தெரியவந்தது.

24.01.1921 யங் இந்தியாவில் காந்தியடிகள் ''அலி சகோதரர்களிடம் நான் என்னையே ஒப்படைத்திருக்கிறேன் அவர்களை நான் உண்மையும் கடவுள் பக்தியும் உடையவர்களாக நம்புகிறேன்'' என்று எழுதினார். (மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி 9, சென்னை 1962, பக்கம் 115)

சிறையில் 1922 மார்ச் 25இல் முகமதலி, சௌக்கத் அலி, கிச்லு, நிகார் அகமது, பீர் குலாம் மஜீத் ஆகியோர் அடக்குமுறைக்கு ஆளாக்கப்பட்டனர். 28.3.1922இல் சோதனை என்ற பெயரால் ஆடைகள் களையப்பட்டு நிர்வாணமாக்கப்பட்டனர். கோவணம் போன்றதை மட்டும் அப்போது அணிந்திருந்தார்கள். 30.3.1922 இல் சிறைவாசத்திலிருந்த தலைவர்கள் ஒரு மாத காலத்திற்கு தனித்தனி சிறைகளில் (அறைகளில்) அடைக்கப்பட்டனர்.

சிறையில் இருந்தவர்கள் இஸ்லாம் மார்க்க சம்பிரதானப்படி வழிபாடுகள் நடத்த உரிமைகள் கோரினர். மௌலானா முகமதலி தனது நோய்க்காகவும், குறிப்பாக நீரிழிவு நோய்க்காகவும் சிகிச்சை பெற வேண்டியும் கோரிக்கை வைத்தார்.

காந்தி 1.2.1922 இல் பர்டோலி சத்தியாகிரகத்தை அறிவித்தார். 12.2.1922 பர்டோலியில் காரியக்கமிட்டி கூடியது. 24.2.1922, 25.2.1922 பர்டோலி இயக்கம் உறுதிப்படுத்தப்பட்டது. யங் இந்தியாவில் எழுதிய மூன்று கட்டுரைகளுக்காக காந்தியும், சங்கர்லால் பாங்கரும் 10.3.1922 இல் கைது செய்யப்பட்டனர். 1922 நவம்பர் இறுதியில் துருக்கி சுல்தான் பிரிட்டிஷ் கப்பலில் மால்டாவிற்கு ஓடினார். முஸ்தபா கமால் பாட்ஷா துருக்கியில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்.

இந்தியாவில் கிலாபஃத் எழுச்சிக்காகவும், சட்டமறுப்பிற்காகவும் சேத் சோட்டானி, ஹக்கீம் அஜ்மல்கான், டாக்டர் அன்சாரி, செய்யது மஹமூது, A.H.S.காதிரி எழுச்சியோடு செயல்பட்டனர். இந்த வேளைகளில் மௌலானா முகமதலியின் தாயார் பீ அம்மா பொதுக் கூட்டங்களில் உரையாற்றினார்.

ஐக்கிய மாகாணத்தில் கோரக்பூரிலிருந்து 25 கி.மீ. தூரத்தில் உள்ள சௌரி சௌரா கிராமத்தில் காவல் நிலையம் 12 போலீசாரோடு தீ வைக்கப்பட்டதால் போராட்டம் நிறுத்தப்பட்டது. 1922 டிசம்பரில் கயாவில் அகில இந்திய காங்கிரசின் 37வது மாநாடு கூடியது. தேசபந்து சித்தரஞ்சன் தாஸ் தலைமை ஏற்றார். பாஷா கிஷோர் பிரசாத் வரவேற்புக் கமிட்டித் தலைவராக இருந்தார். மோதிலால் நேரு, எம்.ஏ.அன்சாரி, ராஜாஜி ஆகியோர் பொதுச் செயலாளர்களாகவும் ஜமுனாலால் பஜாஜ், J.M.சோட்டானி பொருளாளர்களாகவும் இருந்தனர். 3,428 பிரதிநிதிகள் மட்டுமே கலந்து கொண்டனர்.

அந்நியத் துணி பகிஷ்கரிப்பு பற்றி ஆதரித்து சத்திய மூர்த்தி உரையாற்றினார். சேலம் விஜயராகவாச்சாரியார் அதனை எதிர்த்துப் பேசினார். ஏ. ரங்கசாமி அய்யங்கார் ஆதரித்துப் பேசினார். ராஜாஜி எதிர்த்துப் பேசினார். முடிவில் தீர்மானம் வென்றது. சட்டசபை பகிஷ்காரம் பற்றிய தீர்மானத்தை ராஜாஜி ஆதரித்துப் பேசினார். சீனிவாச அய்யங்கார் திருத்தப் பிரேரனை கொண்டு வந்தார். சி.எஸ். ரங்கய்யர் அதனை ஆதரித்தார். ராஜாஜி கொண்டு வந்த தீர்மானத்தை விஜய ராகவாச்சாரியார் ஆதரித்தார். (காங்கிரஸ் மஹா சபை சரித்திரம், மூன்றாம் பாகம் சென்னை, சுதேசமித்திரன் பிராஞ்சு ஆபிஸ் 1935, பக்கம் 520–522)

சட்டசபை பகிஷ்காரத்தை ஆதரித்து 1740 வாக்குகளும், பங்கேற்க வேண்டுமென்று 890 ஓட்டுகளும் விழுந்தன. சட்டசபை பகிஷ்கார தீர்மானம் வெற்றி பெற்றது. Report on the non co- operation movement, Compiled by P.C.Bamford. Deputy Director, Intelligence Bureau, Simla, 250 pages June 1925 copy in India office Library. இதில் லாகூரில் இருந்து வெளிவந்த Parisa Akbar இதழில் (service in the police and the army is haram (forbidden) என்பதனை மீண்டும் வலியுறுத்தி எழுதியது. (மேற்குறிப்பிட்ட பி.சி. பாம்பர்ட் நூல் பக்கம் 188)

நாடெங்கும் முக்கிய நகரங்களில் கிலாபஃத் கமிட்டி கூடியது. கராச்சி சிறைவாசத்தின் போது திருகுர்ஆன் மொழிபெயர்ப்பையும், அண்ணல் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும், தனது வாழ்வின் முற்றுப் பெறாத நிகழ்வுகளையும் எழுதினார் முகமதலி.

15.9.1923 இல் டெல்லியில் காங்கிரசின் விசேஷக் கூட்டம் கூடியது. பிரதிநிதிகள் 2,000 பேரும் பார்வையாளர்கள் 3,000 பேரும் கலந்து கொண்டனர். சேத் ஜமன்லால் பஜாஜ் இதில்

கலந்து கொண்டார். ராஜாஜி, விஜய ராகவாச்சாரியார், சேஷகிரி அய்யர் மாநாட்டிற்கு வரவில்லை. லாலா லஜபதிராய் கூட்டத்திற்கு வரமுடியாததற்கு வருந்தி செய்தி அனுப்பியிருந்தார்.

டாக்டர் அன்சாரி வரவேற்புரை ஆற்றினார். மௌலானா அபுல்கலாம் ஆசாத் தலைமை உரை செய்தார். தேசபந்து சித்தரஞ்சன் தாஸ் உரையாற்றினார். நேரு ஆவேசமாகப் பேசினார். 1923 ஆகஸ்ட் 29இல் மௌலானா முகமதலியும், சௌக்கத் அலியும் மற்றவர்களும் 2 ஆண்டு சிறை வாசத்திற்குப் பின் விடுதலையாயினர். அவர்கள் டில்லி காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொள்ள ஆங்கிலேயர்களால் அனுமதிக்கப்படவில்லை. அதன்பின், 28.12.1923 முதல் 1.1.1924 ஆகிய நாட்களில் அகில இந்திய காங்கிரசின் 38 வது மாநாடு காகினாடாவில் மௌலானா முகமதலி தலைமையில் நடைபெற்றது. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கடுமையான கெடுபிடிகள் நிறைந்த காலம் அது. மாநாட்டில் 1,661 பேர்கள் மட்டுமே பிரதிநிதிகளாக கலந்து கொண்டனர்.

கொண்ட வெங்கடப்பய்யா வரவேற்புக் குழுத்தலைவர். மௌலஸம் அலி, வல்லபாய் ஜே. பட்டேல் , ராஜேந்திர பிரசாத் பொதுச் செயலாளர்களாகவும் ஜமுனா லால் பாஜாஜ், ஜே.எம். சோட்டானி பொருளாளர்களாகவும் இருந்தனர். பிரிட்டிஷ் இந்தியாவில் முதன் முறையாக ஆந்திர தேசத்தில் 1923இல் அகில இந்திய காங்கிரஸ் கூட்டம் நடைபெற்றது.

ஆகஸ்ட் 29, 1923 இல் விடுதலையான மௌலானா முகமதலியின் சீரிய தலைமையை நாடு எதிர்பார்த்திருந்தது. (ஏ.எம்.ஸெய்தி, முற்கூறிய நூல் தொகுதி 8 பக்கம் 148)

காங்கிரசில் இருந்த இரண்டு பெரும் பிரிவுகளக்கிடையே உள்ள கருத்து வேற்றுமைகளைத் களைந்திட ஒற்றுமையை உருவாக்கிட மௌலானா முயன்றார்கள்.

காங்கிரஸ் வரவேற்புக் கமிட்டி 1,20,862 ரூபாய் காக்கி நாடா மாநாட்டிற்காகவே வசூல் செய்தது. அதில் கோதாவரி மாவட்டம் 51,105 ரூபாயும், காக்கிநாடா தாலுகா 24,005 ரூபாயும் அளித்தன. 26.12.1923 இல் காங்கிரஸ் மாநாடு நடைபெறுவதாக அறிவித்திருந்தது. C.R. தாஸ் வேண்டுகோள்படி 28.12.1923க்கு மாற்றப்பட்டது. மாநாட்டின் போது அகில இந்திய மகளிர் மாநாடு காந்தியடிகளின் துணைவியார் அன்னை கஸ்தூரிபாய் தலைமையில் 10,000பேர்கள் பங்கேற்க சிறப்பாக நடந்தது. Indian National Social Conference சதாசிவ அய்யர் (சென்னை)

தலைமையில் நடைபெற்றது. அகில இந்திய தொண்டர்படை மாநாடு முதன்முதலாக இங்குதான் பண்டித ஜவஹர்லால் நேரு தலைமையில் நடைபெற்றது. ஆச்சார்யா பிரபுல்லா சந்திரராய் மாநாட்டில் காதி மற்றும் கைவினைப் பொருட்கள் கண்காட்சியைத் திறந்து வைத்தார்.

120 ஏக்கர் நிலத்தில் காங்கிரஸ் மாநாட்டுப் பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. 12,000 பேர்கள் அமர்வதற்கு வசதி செய்யப்பட்டிருக்கு. A.N. முகர்ஜி அதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். பந்தலுக்காக அந்தக் காலத்திலேயே 23,500 ரூபாயும் தலைவர்கள் தங்கும் இதர கூடாரங்களுக்கு 13,500 ரூபாயும் வழங்கப்பட்டது. (மொத்தம் 37,000)

மாநாட்டுத் தலைவர் மௌலானா முகமதலியின் உரை ஆங்கிலத்தில் 4500 பிரதிகளும், ஹிந்தியில் 500 பிரதிகளும், உருதுவில் 1800 பிரதிகளும், தெலுங்கில் 5000 பிரதிகளும் அச்சிடப்பட்டன. மௌலானா முகமதலியின் உரையை இந்தியில் மொழிபெயர்க்க காசியிலிருந்து அறிஞர்கள் வரவழைக்கப்பட்டனர். டிம்மி சைசில் ஆங்கிலத்தில்114 பக்கங்கள் கொண்டது அவரது ஆங்கில உரை மேற்கூறிய நூலின் தொகுதி 8 இல்184வது பக்கம் முதல் 308 வது பக்கம் வரை உள்ளது. ஆனால் 1972இல் சங்கர் கோஷ் தொகுத்து டெல்லியிலிருந்து காங்கிரஸ் கமிட்டி வெளியிட்ட காங்கிரஸ் தலைமை உரை நூலில் மௌலானா முகமதலியின் உரை 149வது பக்கம் முதல் 164வது பக்கம் வரை 16 பக்கங்களே உள்ளது.

காக்கி நாடாவில் மௌலானா முகமதலிக்கு நடந்த வரவேற்பினை விளக்கியே ஆக வேண்டும். இலட்சக்கணக்கான மக்கள் திரண்டிருந்து மௌலானா முகமதலியை வரவேற்றார்கள். 24.12.1923 பகல் 12 மணிக்கு காக்கிநாடாவிற்கு வரவேண்டிய இரயில் 3 மணி நேர தாமதத்தால் பிற்பகல் 3 மணிக்கு வந்தடைந்தது. காக்கிநாடா வருவதற்கு முன் ரயில் நிலையங்களில் சிறப்பாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அவர்கள் வரும் பாதையில் 50 அடிகளுக்கு ஒரு கொடி வீதம் நாட்டப்பட்டிருந்தது. தெலுங்கு, ஆங்கிலம், உருது, மொழிகளில் 'சுயராஜ்ஜியம் நமது பிறப்புரிமை' 'ஏர்வாடா சிறையில் இருக்கும் காந்தி நலம் பெறவும்' 'காக்கிநாடா காங்கிரஸ் தலைமையை வரவேற்கவும்' 'இந்தியா ஒவ்வொரு குடிமகனிடமும் தனது கடமையை எதிர்பார்க்கிறது' 'இந்து முஸ்லிம் ஒற்றுமையின்றி சுயராஜ்ஜியம் இல்லை' போன்ற பேனர்கள் வைக்கப்பட்டிருந்தன.

காக்கிநாடா ரயில் நிலையத்தில் மேடை அமைக்கப்பட்டிருந்தது. தேசபக்த கொண்ட வெங்கடப்பய்யா, ஜனாப் அன்வரு ஜமான் கான்சாகிப் போன்றவர்கள் ரயில் நிலையத்தில் மௌலானா முகமதலியை வரவேற்றார்கள். ‘அல்லாஹ் அக்பர்’ ‘மகாத்மா காந்திக்கு ஜே’ முழக்கங்கள் விண்ணைப் பிளந்தன. அன்வர் கான்சாகிப் அலி சகோதரர்களுக்கு மலர்க் கொத்துகள் கொடுத்து வரவேற்றார். ஸ்ரீமதி கஸ்தூரிபாய், பீ அம்மா (அலி சகோதரர்களின் தாயார்) மௌலானாவின் துணைவியார் ரயிலில் வந்து இறங்கினார்கள். வயதான பீ அம்மாவின் கம்பீரமான தோற்றம் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது.

நான்கு ஆஸ்திரேலிய குதிரைகள் பூட்டிய சாரட் வண்டியில் மௌலானா முகமதலி, மௌலானா சௌக்கத் அலி, வெங்கடப்பய்யா, அன்வர் கான் சாகிப் அமர்ந்திருந்தனர். தனியாக மோட்டார் காரில் கஸ்தூரிபாய், பேகம் முகமது அலி மற்றும் பெண்கள் அழைத்துவரப்பட்டனர். மற்ற வாகனங்களில் டாக்டர் பிரபுல்லா சந்திர ராய், ஜனாப் யாகூப் ஹசன், டாக்டர் செய்புதீன் கிச்சலு, பீட்டர் ஜா விட்ஸ் கி, டி.பிரகாசம், கே.ராகேஸ்வர ராவ் ஆகியோர் பின் தொடர்ந்து வந்தனர்.

500 தொண்டர்கள் வழியில் ஒழுங்குபடுத்திடும் பணியில், சயாபரசு வெங்கடராசு தலைமையில் செயல்பட்டனர். 100 பெண் தொண்டர்கள் நடந்தே வந்தனர்.

சீதா ரமசாமி கோவில்

சீதாராமசாமி கோவிலில் தனது வாகனத்தை நிறுத்தி அதன்பின் மௌலானா முகமதலி கிளம்பினார். அந்த இடத்தில் சூழலுக்கு தகுந்த இசைத்திறமிக்க, நயத் திறமான இன்பம் அளிக்கும் விதத்தில் இலட்சியப் பேருரை ஆற்றினார். முகமதலி வரும் வழியில் வைணவச் சிறுவர்கள் திருமாலின் சக்கர வடிவத்தை முகமதலியிடம் வழங்கினார்கள். தெருவெங்கும் மக்கள் வெள்ளம். பீமேஷ்வரசாமி ஆலயத்தில் மௌலானா முகமதலிக்கு ஆரத்தி எடுக்கப்பட்டது. ஏராளமான தேங்காய்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டது. காந்தி நகருக்கு வரும்போது இரவு 7 மணி ஆயிற்று. சுதந்திரக் கொடியினை ஏற்றிவைத்து 30000 மக்களிடையே மௌலானா முகமதலி அன்று உரையாற்றினார்.

28.12.1923 வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகைக்குபின் பிற்பகல் 3 மணிக்கு காக்கிநாடாவில் மௌலானா முகமதலி தலைமையில் அகில இந்திய காங்கிரஸ் மாநாடு ஆரம்பமாயிற்று. பெண்களின் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர். பந்தலுக்கு வெளியே 12000 மக்கள் கூடியிருந்தனர். காங்கிரஸ் கமிட்டி வரலாற்றில் இல்லாத அளவில் 4181 பிரதிநிதிகள் பங்கேற்றனர். (முற்கூறிய ஆங்கில நூல் பக்கம் 170) மௌலானா முகமதலியுடன் தேசபந்து சி.ஆர். தாஸ், மோதிலால் நேரு, அபுல்கலாம் ஆஸாத், சி.விஜயராகவாச்சாரியார், மௌலானா சௌக்கத் அலி, சரோஜினி தேவி, டாக்டர் அன்சாரி, வல்லபாய் ஜே.பட்டேல், டாக்டர் கிச்சலு, ராஜாஜி, வித்தல்பாய் படேல், சர்தார் மங்கள் சிங், தேசபக்த கொண்ட வெங்கடப்பய்யா ஆகியோர் உடன் வந்தனர். 'வந்தே மாதரம்' 'அல்லாஹ் அக்பர்' 'மகாத்மா காந்திக்கு ஜே' போன்ற முழக்கங்கள் ஒலித்தன.

திருக்குர்ஆன் வசனங்கள் மௌலவி ஒருவரால் ஓதப்பட்டது. பண்டிட் விஷ்ணு திகம்பர் குழுவின் புகழ்பெற்ற கீர்திப் பாடல்கள் பாடினர். கே.நரசிம்மம் காக்கிநாடா குழுவினர் தெலுங்குப்

பாடல்களை பாரதமாதா குறித்து பாடினர். வந்தே மாதரம் பாடலை ஆந்திரச் சிறுமிகள் பாடினர்.

அக்தரன் அலி குறிப்பிடத் தகுந்த மிகச் சிறந்த உருது கஜல் பாடல்களை மனப்பாடமாக பாடினார். மாநாடு துவங்கியது. தேசபக்த கொண்ட வெங்கடப்பய்யா வரவேற்புரை ஆற்றினார். பின்னர் மௌலானா முகமதலி ‘‘நண்பர்களே, பணியாற்றும் தோழர்களே’’ என்று தனது நீண்ட தலைமை உரையைத் துவங்கினார். பேச்சின் முழுவிவரத்தையும் கூறினால் அது தனி நூலாகி விடும். அதில் ஒரு சிறு பகுதி மட்டும் இதோ.

காங்கிரசின் நிர்மாணத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கும் பலமான சட்டமறுப்பு இயக்கத்திற்கு தயாராவதற்கும் அழைப்பு விடுத்தார். சட்டசபைகளை பகிஷ்கரிக்க வேண்டுமென்று திரும்பவும் வலியுறுத்தினார். மௌலானா சிறையில் இருந்தபோது நடைபெற்ற சிறப்பு காங்கிரஸ் மாநாட்டில் இது குறித்து ஏற்பட்டிருந்த தடை மௌலானா முகமதலி முயற்சியினால் நிவர்த்தி செய்யப்பட்டது.

மாநாட்டில் கொடியினை ஏற்றும் போது, உங்கள் கட்டளைப்படி இன்று இந்தியாவின் விடுதலைக் கொடியை உயர்த்துகிறேன். இந்தக் கொடியின் கீழ் நாம் அனைவரும் ஒற்றுமையுடன் நிற்காவிட்டால், இது சாய்ந்து விடுதல் திண்ணம். ஒற்றுமைக்கு நீங்கள் தயாராக இருக்கிறீர்களா? (ஆம்! ஆம் என மக்கள் குரல்) இருந்தால் ஹிந்துக்கள், முஸ்லிம்கள் என்ற வேற்றுமையை மறந்து விடுங்கள். கெட்ட எண்ணத்திற்கும் பேடித் தனத்திற்கும் விடை கொடுங்கள். இவைகளை நீங்கள் மனப்பூர்வமாக ஒப்புக் கொண்டால் ஆண்டவன் துணையெனக் கோரி இந்தக் கொடியை இப்பொழுது உயர்த்துகிறேன்’ என்றார் மௌலானா முகமதலி.

மாநாட்டில் உரையாற்றுகையில் ‘‘தலைவர் தனது சொற்பொழிவை ஆரம்பிப்பதற்கு முன் பிரதிநிதிகளுக்கு வந்தனம் கூறுவது வழக்கம். இந்த வழக்கத்தை அனுசரிக்க நான் சிறிது தயங்க வேண்டியவனாயிருக்கிறேன்.

இரண்டு வருஷத்திற்கு முன் இதே பதவிக்கு என்னைப் பல மாகாணங்கள் சிபாரிசு செய்தன. ஆனால் பிரிட்டிஷ் அதிகாரிகளின் அடக்கு முறையால் மீண்டும் சிறை சென்றேன். என்னை சிறைவாசம் பாதுகாத்தது. இப்பொழுது இறைவனின் விருப்பப்படி இந்தப் பதவி வந்துள்ளது. பயந்து ஓடும் சுபாவம் எனக்கு இல்லை. எனவே இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன். நான் காங்கிரஸை முதல் முதலாகத் தரிசித்தது 1919இல் தான்.

யுத்த காலத்தில் (முதல் உலகப் போர்) பாதுகாப்பில் வைக்கப்பட்ட நானும் எனது சகோதரரும் அவ்வருஷத்தில் விடுதலை செய்யப்பட்டு அமிர்தசரஸ் காங்கிரஸ் மாநாட்டிற்கு வந்தோம். அங்குதான் காந்தியைக் கண்டோம்.

தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ள எனக்கு ஏற்பட்டிருக்கும் பந்தமும் பொறுப்பும் மிக அதிகம். எனது சொந்த அபிப்ராயம் மட்டும் மேலோங்கி நிற்கும்படி செய்ய நான் முயற்சிக்க மாட்டேன் என்று சொல்லி விட்டு, முஸ்லிம்களுக்கும் காங்கிரசுக்கும் உள்ள தொடர்பு பற்றியும் அகிம்சை பற்றியும் பேசினார். அப்போது முகம்மது (ஸல்) அவர்களைப் பின்பற்றும் நான் 'போரை (யுத்தத்தை) தீமையென வெறுக்கிறேன். ஆனால் எதிரிகள் வேண்டுமென்றே என்னை சண்டைக்கு இழுத்தால், சண்டைபோடுவதைத் தவிர வேறு வழி எனக்கு இல்லாமல் போகும். ஒரு உண்மை முஸ்லிமினுடைய கடமையைப் பின்பற்றி, எதிரி எந்த ஆயுதத்தை உபயோகிக்கிறானோ, அதே ஆயுதத்தை நான் அவன் மீது பிரயோகித்து வீரத்துடன் சண்டையிட்டு அவனை வெட்டி வீழ்த்துவேன்! இதுவே எனது கொள்கை. நியாய புத்தியைக் கைவிட்டு, மிருக பலத்தை என் மீது ஏவுவார்களானால், என்னால் கூடிய பலத்தை எல்லாம் திரட்டி, நானும் தங்கு தடையில்லாமல் எதிர்ப்பேன்.

யுத்தம் கொடிதுதான். ஆனால் அதனினும் கொடிது அடக்கு முறைகளால் நடத்தப்படும் கொடுங்கோல் ஆட்சி. இதனை ஆயுதமெடுத்து அழிப்பது நியாயமே ஆகும். கொடுமை ஒழிந்து மனிதனுடைய சுதந்திரம் மீட்கப்பட்ட பின்புதான் ஆயுதங்களை எறிந்துவிட்டு சமாதானத்தை நிலைநாட்டக் கூடும். இது இறைவனின் சட்டம். உயிரே போயினும் இச்சட்டத்தை மீறி நடக்க நான் துணியமாட்டேன்" (காங்கிரஸ் மஹாசபை சரித்திரம், மூன்றாம் பாகம், சென்னை, சுதேசமித்திரன் பிராஞ்சு ஆபிஸ் 1935, பக்கம் 587, 588) (முற்கூறிய ஆங்கில நூல் பக்கம் 232)

இறைவனை நம்பி, நமது தலைவர் நமக்கு இட்ட கட்டளையை நிறைவேற்றுவோம். மகாத்மா நம்மிடம் வைத்த நம்பிக்கைக்கு நாம் பாத்திரமானவர்கள், நம்பிக்கைக்குரியவர்கள் என்று நாம் நிரூபித்துவிட்டால், நாம் வெற்றியடைவது நிச்சயம். சுயராஜ்யம் ஓராண்டிற்குள்ளும் வரும். ஒரு மாதத்திற்குள்ளும் வரக் கூடும். அது நமது கரங்களில்தான் உள்ளது. இறைவன் அருளால் நாம் வெற்றியை பெறுவோம். அந்த வெற்றி விழாவில் 'மகாத்மா காந்திக்கு ஜே' என்று முழக்கமிடுவோம் என்று கூறி தனது நீண்ட உரையை மௌலானா முகமதலி நிறைவு செய்தார்.

அதே பந்தலில் நடைபெற்ற அகில இந்திய கிலாபத் மாநாட்டிற்கு மௌலானா சௌக்கத் அலி தலைமை தாங்கி சுயராஜ்யம் பெற வேண்டிய அவசியம் குறித்து வீர உரை ஆற்றினார்.

நாட்டில் டில்லி லட்சுமணபுரி, அலகாபாத், ஜபல்பூர், நாக்பூர், சௌகாட்டில் இந்து முஸ்லிம் பிணக்கு ஏற்பட்டது. 1924 பிப்ரவரி 5இல் குடல்நோய் காரணமாக காந்தி விடுதலை செய்யப்பட்டார். 11.3.1924 இல் முகமதலியின் மகளார் ஆமீனா மறைந்தார். இந்துக்கள்– முஸ்லிம்களுக்கிடையேயான கலவரங்களுக்கான காரணங்களையும் உண்மை நிலைமையையும் ஆராய்ந்து அறியுமாறு காந்தியும் மௌலானா சௌக்கத் அலியும் அடங்கிய கமிட்டி அமைக்கப்பட்டது. கலவரத்திற்கான காரணங்கள் ஆராயப்பட்டது. அபிப்பிராய பேதங்களும் எழுந்தன. 1924 செப்டம்பர் 9, 10 நாட்கள் கோஹத்தில் வகுப்புக் கலவரம் பெரிய அளவில் நடைபெற்றது. இந்து – முஸ்லிம் ஒற்றுமையையே தமது சுவாசமாக கருதும் காந்தியடிகள் 18.9.1924 இல் தனது உண்ணாவிரதத்தை டில்லியில், மௌலானா முகமதலி வீட்டில் ஆரம்பித்தார். (Raj Mohan Gandhi, Eight lives a study of the Hindu - Muslim Encounter, New Delhi,1988, Page III)

1924 செப்டம்பர் 26 முதல் அக்டோபர் 2 வரை ஒற்றுமை மாநாடு நடைபெற்றது. காந்தி, ஹக்கீம் அஜ்மல் கான், லாலாஜி, ஜி.கே. நாரிமன், எஸ்.கே.தத்தர், சுந்தர்சிங் ஆகியோரைக் கொண்ட குழு அமைக்கப்பட்டது. 21 நாட்களில் காந்தி உண்ணாவிரதத்தை நிறைவு செய்தார்.

31.10.1924 இல் 'காம்ரேட்' இதழை மீண்டும் முகமதலி துவக்கினார். 18.11.1924 இல் ஹம்தர்த் பத்திரிகையையும் மௌலானா மீண்டும் துவக்கினார். (22.2.1926 வரை வெளிவந்த 'காம்ரேட்' நின்றது. 20.11.1927 வரை வெளிவந்த ஹம்தர்த் இதழும் நின்றது பிந்தைய சரித்திரச் சம்பவங்கள்)

21.11.1924, 22.11.1924இல் பம்பாயில் சர்வகட்சி மாநாடு நடைபெற்றது. 1924 நவம்பரில் மௌலானா முகமதலியின் தாயார் பீ அம்மாள் மறைந்தார். பெல்காமில் காந்தியடிகள் தலைமையில் 26.12.1924, 27.12.1924 ஆகிய நாட்களில் அகில இந்திய காங்கிரஸ் மாநாடு நடைபெற்றது.

பெல்காம் காங்கிரஸ் மாநாடு

இந்தியாவின் விடுதலைக்காகப் பொங்கி எழுந்த தீரமிகு அலி சகோதரர்களைப் பெற்றெடுத்த வீரப்பெண்மணி பீ அம்மா அன்னையைப் பற்றி கொஞ்சமாவது சொல்லவில்லையென்றால் எனது கடமையில் தவறியவன் ஆவேன்.

பீ அம்மாவின் உண்மைப் பெயர் ஆபாதிபானு சாஹிபா. இவரின் 27வது வயதில் கணவர் அப்துல் அலிகான் மறைந்தார். மூத்த குழந்தைக்கு வயது பதிமூன்று. கடைசிக் குழந்தையான மௌலான முகம்மது அலிக்கு வயது இரண்டு. இளம் விதவையான பீ அம்மா தனது ஆறு குழந்தைகளை காப்பாற்றும் பொறுப்பை ஏற்றார்; அத்துடன் மறுமணம் செய்து கொள்ளவும் மறுத்துவிட்டார். ராம்பூரில் முதன் முதலில் தனது பிள்ளைகளை ஆங்கிலக் கல்விக்கு அனுப்பியவரும் அவரே. ஜுல்பிகார், முகமதலி, சௌக்கத் அலி மூவரும் ஆங்கிலக் கல்வி பயின்றவர்கள்.

பீ அம்மா புனித ஹஜ் யாத்திரைக்காக மக்கா நகர் சென்றிருந்த போது கஃபாவிலுள்ள கருப்புத் துணியைப் பற்றிக் கொண்டு துஆ கேட்டார்கள். தனது கடைசி இரு மக்களான சௌக்கத் அலியும், முகமதலியும் நாட்டிற்காகவும் இஸ்லாத்திற்காகவும் பாடுபடுபவர்களாக என்றும் விளங்க வேண்டும் என்று கேட்டார்கள். இறைவன் அவர்களது பிரார்த்தனையை ஏற்றுக் கொண்டான். பின்னாளில் மௌலானா முகமதலியும் சௌக்கத் அலியும் உலகப் புகழ் பெற்றனர்.

முதல் தடவை 26.9.1914 காம்ரேட் இதழில் “Choice of the Turks' கட்டுரை எழுதியதற்காக 1915 இல் மௌலானா முகமதலியும், சௌக்கத் அலியும் கைது செய்யப்படும் போது, பீ அம்மாவும் புர்கா அணிந்து கொண்டு ‘‘என்னையும் கைது செய்யுங்கள்’’ என்றார். ‘இவ்விருவரையும் அழைத்துச் செல்லத்தான் எங்களுக்கு உத்தரவு’ என்ற போது பீ அம்மாவும் வேகமாக போலீஸ் வேனை

நோக்கி நடந்தார்கள். அப்போது ரைட் என்பவர் ‘அந்த பெரிய அம்மாவை யாராவது தடுத்து நிறுத்துங்கள்’ என்றார். ‘‘அல்லாஹ் மீது ஆணையாக எங்களுடன் நீங்கள் வர வேண்டாம்’’ என்று மௌலானா முகமதலியும் சௌக்கத் அலியும் கேட்டுக் கொண்ட பிறகே அவர்கள் பின்னால் வரவில்லை.

பீ அம்மா படிக்கவில்லை. ஆனால் கற்க வேண்டும் என்ற ஆவல் இருந்தது. மௌலானா முகமதலியின் தாய் மாமனாரும் பின்னாளில் அவருக்குப் பெண் தந்தவருமான அஸ்மத் அலிகான் அடிக்கடி இவர்களின் வீட்டிற்கு வருவார்கள். அவர்களை மௌலானா முகமதலியின் தந்தையார் விட்டுச் சென்ற நூல்களை பீ அம்மா வாசிக்கச் சொல்லி கேட்பார். பார்சியும் உர்தும் கலந்த நஸ்தாலிக் லிபியில் எழுதப்பட்ட நூல்களை வாசிப்பார். இவ்வாறு உருது படிப்பதற்கு பீ அம்மா கற்றுக் கொண்டார். ஆனால் அவருக்கு ஒரு வார்த்தை கூட எழுதத் தெரியாது. (My life a fragment, Maulana Mohamed Ali 1942, Lahore, Page 15)

அலி சகோதரர்கள் சிறுவர்களாக இருந்தபோது பீ அம்மாவைச் சுற்றி உட்கார்ந்து கதை கேட்பார்கள். அந்த அம்மா கதைகளோடு தனது அபிப்பிராயங்களையும் நீதிகளையும் கலந்து அவர்களுக்கு ஊட்டுவார்.

நான் கேட்ட சொற்பொழிவுகள் எனது நினைவை விட்டு அகன்று விட்டாலும் அம்மா சொல்லிய கதைகள் மட்டும் என் நினைவில் நின்று சுழல்கின்றன என்பார் முகமதலி. (முற்கூறிய நூல், பக்கம் 17)

அவரது எளிய உடையும் ஆடம்பரமற்ற தன்மையும் மறக்க முடியாதது. பிற்காலத்தில் அம்மாவிடம் நாங்கள் கற்ற இந்த அரிய பாடங்கள் வாழ்க்கைப் போராட்டத்திற்கு உறுதுணையாக உதவின.

பீ அம்மா தான் மௌலானா முகமதலியையும் சௌக்கத் அலியையும் தீரர்களாக உருவாக்கி வளர்த்தார்கள்.

கிலாபத் கிளர்ச்சியில் இத்தாயின் பங்கு மிக மிகப் பெரியது. அலி சகோதரர்கள் கைது செய்யப்பட்டு சிண்டுவாராவில் காவலில் வைக்கப்பட்டபோது, அரசாங்கம் கேட்டுக் கொண்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்கி அவ்விதம் அலி சகோதரர்கள் எழுதிக் கொடுத்து விட்டு விடுதலை பெற இருப்பதாக நாடெங்கும் வதந்தி பரப்பப்பட்டது (ஆனால் அவர்கள் மொத்தம் 5 ஆண்டுகள் சிறையில் இருந்தார்கள்).

இந்த வதந்திப் பேச்சைக் கேட்ட வீரத்தாய் பீ அம்மா ஆவேசம் கொண்டார். அவரது தளர்ந்த உடல் துடித்தது. ஆத்திரத்தோடு அன்னையார் அன்று கூறியது: "ஆங்கில அரசாங்கத்திற்கு அடிபணிந்து என் மக்கள் கையெழுத்திட்டுக் கொடுப்பது உண்மையானால் நான் என்ன செய்வேன் தெரியுமா? அவர்கள் சிறையை விட்டு வெளியே வந்த உடனே நான் பலமற்று தளர்ந்திருந்த போதிலும் இந்தக் கைகள் போதிய சக்தியற்று இருந்த போதிலும் அவர்கள் இருவருடைய கழுத்தையும் இக்கைகளாலேயே நெரித்துக் கொன்று விடுவேன்' என்று முழங்கிய வீரத்தாய் பீ அம்மா. (ரா.பா.மு. கனி, மௌலானா சௌஹர் மலர், பக்கம் 20)

அலி சகோதரர்கள் மீது வதந்தி பரப்பப்பட்டது. ஆனால் அதையும் மீறி அவர்கள் புகழ் பரவியது. கண்ணியம் குறையவில்லை; அதிகமானது.

1921இல் அலி சகோதரர்கள் சிறையேரிய பின் நாடெங்கும் பேரெழுச்சி ஏற்பட்டது. 1919 – 1920 இல் கல்லூரிகளில் மாணவர்கள் 52,482 பேர்களும் 1921–1922 இல் 45,933 பேர்களும் கிலாபத் முடிவுப்படி தங்களது கல்வியைத் துறந்தனர். அதுபோல் பள்ளிக் கூடங்களில் 1919–1922களில் 12,39,524 பேர்களும் தங்களது படிப்பைத் துறந்தனர். (P.C. Bamford. Histories of the non-cooperation and khilafat movement, page 103)

கிலாபத் நிதி வசூலிக்க பீ அம்மா நாடெங்கும் பயணம் செய்தார். தமிழகத்தில் இளையான்குடியில் அந்நியத் துணிகளை முஸ்லிம்கள் கொளுத்துகிறார்கள். இளையான்குடி கருத்தத் தம்பிப் புலவரின் விடுதலை வேட்கை தூண்டும் பாடல்களை இளைஞர் பாடுகிறார். இளைஞர்கள் சாரட்டில் பீ அம்மாவை உட்கார வைத்து குதிரைகளை அவிழ்த்து விட்டு தாங்களே இழுத்து வருகின்றார்கள் (த.கா. காதர் கனி, மௌலானா முகமதலி சௌஹர், இளையான் குடி 1979, பக்கம் 12) அலி சகோதரர்கள் சிறை சென்றபின் பீ அம்மாவும், வாழ்கைத் துணைவியார் பேகம் முஹம்மது அலியும், இந்தியா முழுவதும் சுற்றுப் பயணம் செய்து கிலாபத் நிதி திரட்டினர். மூன்று இலட்சமாக இருந்த நிதி 30 இலட்சமாக உயர்ந்தது. அப்போது மௌலானா முகமதலி மீது எண்ணற்ற குற்றச்சாட்டுகள் புனைந்துரைக்கப்பட்டன. கிலாபத் கமிட்டிக்கு வசூல் செய்த நிதியை அவர் மோசம் செய்தார் என்பது குற்றச்சாட்டு. மத்திய கிலாபத் கமிட்டி பிரிட்டிஷாரை எதிர்த்து அதன் அக்கிரமச் செயல்களைக் கண்டிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டதால் அதனைப் பதிவு செய்திடவில்லை. கிலாபத் ஊழியத்தில் அக்கரையோடு இருந்த சேட் சோட்டானி பொருளாளராக இருந்தார். அவரிடம்

கிலாபத் நிதி இருந்தது. அவர் அந்த நிதியை தனது வியாபாரத்தில் போட்டார். பெரு நஷ்டம். உடனே தனது 16 அல்லது 17 இலட்ச ரூபாய் மதிப்புள்ள மில்லை கிலாபத் நிதிக்கு ஈடாகக் கொடுத்து விட்டார். இதுதான் நடந்தது.

கிலாபத் நிதி 40–45 இலட்சம் அப்போது வசூலாயிருந்தது. அப்போது அலி சகோதரர்கள் சிறையில் இருந்தார்கள். சேட் சோட்டானிதான் தவறு செய்தவர். சிறையிலிருந்து அலி சகோதரர்கள் விடுதலையானபோது கிலாபத் நிதி காலியாகவே இருந்தது. இதுதான் வரலாற்று உண்மை.

ஐந்து வருட முதல் சிறைவாசத்திற்குப்பின் வீட்டில் சாப்பாட்டுக்கே கஷ்டமான நிலை. குடியிருந்த வீட்டுக்கு வாடகைப் பணம் கட்ட வேண்டும். தலைக்கு மேல் கடன். அந்த வேளையில் அலி சகோதரர்களுக்கு டில்லியில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

அப்போது சிறை வாசத்தை அனுபவித்துவிட்டு வந்த இரு சகோதரர்களுக்கும் இரு மாலைகள் அளிக்கப்பட்டன. அது 17 ஆயிரம் ரூபாய்க்கு ஏலம் விடப்பட்டது. தங்களுக்கு அளிக்கப்பட்ட 12,000 ரூபாய் பண முடிப்பையும் அதனுடன் சேர்த்து கிலபாத் நிதிக்கு அளித்து விட்டு வெறுங்கையுடன் வீடு திரும்பிய உத்தமர்கள் இந்த சகோதரர்கள்.

இரண்டாவது சிறைவாசம் இரண்டு ஆண்டுகள் முடித்து வந்த போது தமது நண்பர்கள் விருந்துக்கு அழைத்த போதெல்லாம் அவர்களிடமிருந்து செலவை வசூல் செய்து, பெருநாள் தொழுகையின் போது ஈத்கா வாசற்படியில் வெயிலில் நின்று கொண்டு காலணா, அரை அணா, ஒரு அணா என மக்களிடம் யாசித்துப் பெற்று கேரளத்து தீரர்கள் மாபெரும் புரட்சியாளர்கள் மலபார் முஸ்லிம்களின் குழந்தைகளுக்காக 1100 ரூபாய் வசூல் செய்து அனுப்பிய வள்ளல் மௌலானா முகமதலி.

டெல்லியில் முகமதலி வண்டிப்பாறை (காடிகானா) பகுதியில் வசித்து வந்த வேளை திரையால் இரண்டாகப் பிரித்து உள்பக்கம் மனைவி இருந்தார். மௌலானாவைப் பார்க்க சிலர் வந்தனர். வந்தவர்களை உபசரிக்க எண்ணிய மௌலானா டீ தயாரிக்கும் படி மனைவியிடம் சொன்னார். பால் இல்லை, பால் வாங்கக் காசும் இல்லை என்று தன் கணவரிடம் ரகசியமாக கூறினார் பேகம். உடனே மௌலானா சிரித்துக் கொண்டு சப்தமாகச் சொன்னார் ‘என்ன பேகம் சாஹிபு, வந்தவர்களுக்க நம்மால் ஒரு கோப்பை டீ கொடுக்க முடியவில்லை. பால் வாங்க காசில்லை என்று இரகசியம்

பேசுகிறாயே'' என்றார். இதைக் கவனித்த நண்பர்கள் திரும்பிச் செல்லும்போது மௌலானா முகமதலியின் படுக்கைக்கு அடியில் யாரும் பார்க்காதவாறு நூறு ரூபாய் நோட்டை வைத்து விட்டுச் சென்றனர். மறுநாள் படுக்கையை எடுத்த போது மௌலானா பணத்தைக் கண்டார். அன்று பக்கத்து கிராமத்திலிருந்து இரண்டு பெண்கள் தங்கள் பெண்ணுக்குத் திருமணம் செய்திட உதவி கேட்டார்கள். மௌலானா முகமதலி அந்த நூறு ரூபாய் நோட்டை எடுத்து, 'பெண் காரியம் கொண்டு போங்கள்' என்று கொடுத்து அனுப்பினார். மௌலானாவின் தியாகத்திற்கு ஈடு ஏது?

இது மௌலானா அப்துல் லத்தீப் பாரூக்கி, கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் இஸ்மாயீல் சாகிபிடம் கூறிய சம்பவம் ஆகும். பேகம் முகமதலியும், அன்னையார் பீ அம்மாவும் கிலாபத் நிதியை பெருமளவில் திரட்டி தந்தது வரலாறு, அதில் சல்லிக்காசு தொடாதது சரித்திரம். எனவேதான் இவைகளை நினைவுபடுத்த வேண்டியது அவசியமாயிற்று. மாபெரும் பெண்மணியான பீ அம்மா 1924 நவம்பர் மத்தியில் தனது 81வது வயதில் காலமானார்.

கதர் திட்டம் காங்கிரஸ் கொண்டு வந்தது அல்ல. கதர் அரபிச் சொல் (கதர் = ஒளி, கௌரவம்) கையினால் நூற்கப்பட்ட நூலைக் கொண்டு நெய்திட்ட துண்டு ஒன்றை மௌலானா முகமதலியின் அன்னை பீ அம்மா காந்தியடிகளுக்குப் போர்த்தியபோது 'இதை கதர் ஆக (கௌரவமாக ஏற்றுக் கொள்ளுங்கள்) என்றார். அப்படித் தான் கதர் உருவானது. (PNI அபூதாலீப், P.M. ஜமால் முஹம்மது, மௌலானா முகமதலி அலீ ஜௌஹர், சென்னை 1965 முதற்பதிப்பு, 1988 இரண்டாம் பதிப்பு பக்கம் 67)

மௌலானா முகமதலியின் 'காம்ரேட்' பத்திரிகை அலுவலகம் பீ அம்மாவின் அறையிலே நடைபெற்றது. இங்கிருந்துதான் மௌலானா புகழ்மிக்க பல தலையங்கங்களை எழுதினார். (Collected works of Mahatma Gandhi XXV, 8 October 1924 page 320). அவ்வேளை, காம்ரேட் இதழில் 'Mother' என் தாய் என்ற கட்டுரையை மௌலானா முகமதலி எழுதியிருந்தார். அப்போது அவருக்கு வயது 46. தியாகத்திற்கும், வலிமைக்கும் பெரிய தூணாக விளங்கிய பீ அம்மா 1924 நவம்பரில் மறைந்தார்.

டிசம்பர் 21இல் காங்கிரஸ் ரகசிய மாநாடு நடைபெற்றது. அதில் கருத்து மோதல்கள் இருந்தன. ஸ்ரீமான்கிரி, பண்டித நேரு, ஸ்வாமி கோவிந்தானந்தா, லாலா லஜபதி ராய் ஆகியோர் பேசிய பின் மௌலானா முகமதலி பேசினார். 'எத்தனையோ பரிகாரங்களை பிரிட்டிஷாரிடம் நாம் கேட்டாயிற்று. இதன் பலனாக ஜாலியன்

வாலாபாக் படுகொலைதான் நமக்கு கிடைத்தது. கத்தி வீசி விடுதலையடைய நாம் விரும்பவில்லை. நம்மிடம் கத்தியுமில்லை. நம்மிடம் ராட்டினம் ஒன்றுதான் இருக்கிறது. இந்த நாட்டின் கதிமோட்சத்தின் பொருட்டு இந்த ஒரே ஆயுதம்தான் நம்மிடம் இருக்கிறது. இனி வீண் பேச்சுகளில் காலங்கடத்திக் கொண்டிருக்க வேண்டாம்' என்றார் முகமதலி. (காங்கிரஸ் மஹாசபை சரித்திரம், சுதேசமித்திரன் வெளியீடு, 1935, பக்கம் 621)

1924 டிசம்பர் 26, 27இல் பெல்காமில் காந்தியடிகள் தலைமையில் அகில இந்திய காங்கிரஸ் கூடியது. அதில் மௌலானா முகமதலியும் சௌக்கத் அலியும் கலந்து கொண்டனர். மௌலானா முகமதலி பேசுகையில், 'பிரிட்டிஷார் வாள் கொண்டு யுத்தம் செய்து நம்மை அடிமைப் படுத்தினார்களா? இல்லை, இந்தியரின் ஒத்துழைப்பால் பிரிட்டிஷார் ஜெயித்தனர். இந்தியா பழைய நிலையை அடைய வேண்டுமானால் நாம் ஒத்துழைத்த பாபத்துக்காக ஒத்துழையாமை செய்தே ஆக வேண்டும். அவர்கள் யுத்த வீரர்களாக இந்த நாட்டிற்கு வரவில்லை. அரச குமாரர்களாகவும் வரவில்லை. பெரும் வியாபாரிகளாகவே வந்தனர். இந்நாட்டு நெசவுத் தொழிலை அழித்தனர். இந்தியாவின் செல்வத்தை வியாபாரம் மூலமாக கொள்ளை கொண்டனர்.

இங்கிலாந்தில் ஒரு ஏக்கர் கூட பருத்தி விளையும் நிலம் இல்லை. அவர்களா 32 கோடி மக்களாகிய நமக்கு ஆடைகள் அனுப்ப வேண்டும்? இது என்ன வெட்கக் கேடு? திரௌபதியை போல நாமும் துயில் உருவப்பட்டுத் தவிக்கிறோம். சூரிய ஒளி உதயகாலத்தில் கீழ்த் திசையிலிருந்து வராமல் அஸ்தமன காலத்தில் மேற்குத் திசையிலிருந்து வருமா? மேற்கிலிருந்து ஒளிவரும் என்று இன்றும் நாம் நம்புவது மூட எண்ணமன்றோ? அடிமைப் புத்தி அன்றோ? ராட்டினமே இந்தியாவிற்கு கதி மோட்சம் அளிக்கும் என்று ஜெர்மனிக்காரர் ஒருவர் வந்து சொன்னால் நம்மில் பலர் நம்புகிறார்கள். அதையே காந்தி சொன்னால் சிரிக்கிறார்கள். இந்த அடிமைப்புத்தி நம்மைவிட்டு அகல வேண்டிய காலம் வந்து விட்டது. (முற்கூறிய நூல் பக்கம் 642, 643)

'இந்தியாவின் ஏழை மக்கள் தினம் இரண்டு வேளையாவது சரிவர உண்ணாதவரை இந்தியா விடுதலைபெற அருகதை இல்லை. தீண்டாமை பற்றியும் நான் இதுவே கூறுவேன். நீங்கள் தீண்டாமையை ஒழிக்காது விடுதலை கேட்பீர்களாயின் அது வடிகட்டிய முட்டாள்தனமாகும். தத்துவஞானிகள் என்று உங்களைக் கூறிக் கொள்வதெல்லாம் வெறும் பாசாங்கே ஆகும்' என்று மௌலானா முகமதலி இடித்துரைத்தார். (வீர கேசரி மௌலானா

முகமதலி ஜௌஹர், PNI அபுத்தாலிம், ஜமால் முகம்மது, பயனீர் பப்ளிஷர்ஸ் ஹவுஸ், சென்னை – 1) விலை 3, 1965, பக்கம் 30)

"குல்பர்க்காவில் நடந்த சம்பவங்கள் நினைக்கையில் எனக்குச் சொல்ல முடியாத வெட்கமுண்டாகிறது. நடந்த விஷயத்தைப் (இனக் கலவரம்) பற்றி நிஜாம் மன்னரும் வருத்தப்படுகிறார் என்று அறிகிறேன். இந்து – முஸ்லிம் சண்டை எதிலும் நானாவது என் தம்பியாவது, சகோதரியாவது சம்பந்தப்படக் கூடாது' என்பது எனது தாயாரின் கட்டளை. எங்களின் உயிர் போகும் வரையில் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்கு உழைக்க வேண்டும் என்பது எனது அன்னையரின் உத்தரவு. ஆகவே இந்த விஷயத்தில் காந்திக்கு கீழ்ப்படிந்து நான் நடக்க சித்தமாய் உள்ளேன்" என்றார் மௌலானா சௌக்கத் அலி.

ஒற்றுமைக்கு உழைத்த அலி சகோதரர்கள்

ஹோகட்டில் நடந்த மதக் கலவரத்திற்கு இந்துக்களும் – முஸ்லிம்களும் ஒருவரை ஒருவர் பரஸ்பரம் குற்றஞ்சாட்டினர். 'இந்துக்கள்தான் முதல் முதலாக விஷமஞ் செய்தனர்' இது முஸ்லிம்கள் கூற்று. 'முஸ்லிம்கள்தான் அக்கிரமஞ் செய்தனர்' இது இந்துக்கள் கூற்று. இதனை விசாரிக்க காங்கிரஸ் மகாசபை ஒரு கமிட்டியை நியமித்தது. காந்தியும், சௌக்கத் அலியும் இதர சிலரும் கமிட்டியில் இருந்தனர்.

இக்கமிட்டியினர் ஹோகட் செல்ல அரசாங்கம் அனுமதிக்கவில்லை. எனவே விசாரணை ராவல்பிண்டியிலேயே நடந்தது. முஸ்லிம்கள் பலர் சாட்சி சொல்ல வரவில்லை. ஓரிருவர் மட்டுமே சாட்சி கூறினார்கள். இந்துக்கள் பெரும்பான்மையினர் சாட்சியங் கூறினர். அறிக்கை வெளியாயிற்று. காந்தி முஸ்லிம்கள் மீது குறை கூறினார். ஆனால் மௌலானா சௌக்கத் அலி இதனை ஏற்கவில்லை. இருதரப்பினரும் சமமான முறையில் விசாரிக்கப்படவில்லை என்று சௌக்கத் அலி ஆதங்கப்பட்டார். சௌக்கத் அலி இடையே, காந்தி அபிப்பிராய பேதம் ஏற்பட்டது. மௌலானா முகமதலியோ, இரு சமூகத் தலைவர்களும் தங்கள் தங்கள் சமூகத்தாரை கண்டித்து அடக்க வேண்டும் என்று மூன்றாவது ஒரு வழியை சொன்னார்.

27.12.1923இல் காக்கினாடாவில் அகில இந்திய கிலாபத் மாநாட்டை மௌலானா சௌக்கத் அலி தலைமை தாங்கி நடத்தினார். மௌலானா முகமதலியும் கலந்து கொண்டார். அதன் பின் கல்கத்தாவில் 19.3.1924இல் மௌலானா முகமதலி தலைமையில் அகில இந்திய கிலாபத் மாநாடு நடைபெற்றது. 10.5.1924இல் பம்பாயில் மௌலானா சௌக்கத் அலி தலைமையில் அகில இந்திய கிலாபத் கமிட்டி கூட்டம் நடைபெற்றது. தொடர்ந்து

பஞ்சாப் மாகாண கிலாபத் மாநாடு நடைபெற்றது. அதில் உரையாற்றிய மௌலானா முகமதலி,

'ஒவ்வொரு சமூகமும் பிற சமூகத்தாரின் மீது குற்றஞ் சாட்டுவதற்கு இது நேரமல்ல. ஒவ்வொருவரும் தத்தம் சமூகத்தைச் சேர்ந்தவர்களைக் கண்டித்து உணர்த்துவதுதான் உசிதமானது. ஆதலால் ஹோகட் இந்து – முஸ்லிம் கலவரத்தில் முஸ்லிம்கள் மீது எவ்வளவு பொறுப்பு ஏற்படுகிறதோ, அதற்காக நான் அவர்களைக் கண்டிக்கிறேன்' என்று குறிப்பிட்டார்.

இதனால் மௌலானா முகமதலிக்கு முஸ்லிம்களிடையே செல்வாக்கு குறைய ஆரம்பித்தது. அதோடு மாகாண சட்டசபைக்கு காங்கிரஸ் சுயராஜ்ஜியக் கட்சியின் பெயரால் செல்ல அனுமதித்தது. ஆனால் மௌலானா முகமதலி கிலாபத் கமிட்டியினர் தங்களது சொந்தப் பலத்தின் அடிப்படையிலே சட்டசபைக்கு செல்லலாம், கிலாபத் கமிட்டி சார்பில் செல்லக் கூடாது என்று கூறினார். மௌலானா முகமதலியின் இத்தகைய போக்கினால் அவருடன் இருந்தவர்கள் பிரிய ஆரம்பித்தனர். எதிரிகளுடன் சேரவும் செய்தார்கள்.

பண்டித மோதிலால் நேரு வழக்கறிஞர் தொழிலில் ஆர்வங்காட்டினார். சி.ஆர்.தாஸ் சுயராஜ்ஜியக் கட்சியின் சர்வாதிகாரியாக இருந்தார். டாக்டர் கிச்லு தன்ஜீம் இயக்கத்தை துவங்கினார். அவருடன் மௌலானா அப்துல் மஜீத், மௌலானா நிசார் அகமது முதலியவர்கள் கிலாபத் இயக்கத்தை விட்டுப் பிரிந்து தன்ஜீம் இயக்கத்தில் பணியாற்றினர்.

மௌலானா முகமதலி விரும்பியிருந்தால் தாம்பே, சுரேந்திரநாத் பானர்ஜி, பிபின் சந்திரபாலர், சங்கரன் நாயர் போன்றவர்களை போல் அரசிடம் சென்று செல்வாக்கு பெற்றிருக்கலாம். ஆனால் மௌலானா முகமதலி காங்கிரசில் உறுதியாக இருந்தார். "தலைவர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். காந்தியடிகள் வாய் பொத்திக் கொண்டார். தலைவர்கள் முரசை (நகரா) எடுத்துக் கொண்டு அடிக்கவும் ஆரம்பித்து விட்டார்கள். நாங்கள் வாய் பொத்தி இருக்கவில்லை. ஒரு புதிய வழியை எடுத்துக் கொள்ள ஆரம்பிக்கவுமில்லை. எங்களது உரையைக் கேட்க வருபவர்கள் குறைந்து விட்டார்கள் என்பதற்காக நாங்கள் கொஞ்சமேனும் கவலை கொள்ளவில்லை. ஐரோப்பாவின் ஏகாதிபத்தியத்தின் வேரைப் பிடுங்கி எறியவும், இந்தியாவையும் இஸ்லாமிய நாடுகளையும் அதன் பிடியிலிருந்து விடுவித்திடவும் போராடுவோம்' என்றார். 24.12.1924இல் அகில இந்திய கிலாபத் மாநாடு பெல்காமில் டாக்டர் செய்புதீன் கிச்சலு தலைமையில்

நடைபெற்றது. மௌலானா குத்புதீன் சேர்மனாக இருக்க 300 பேர்கள் அம்மாநாட்டில் கலந்து கொண்டனர். மாநாட்டில் பீ அம்மா மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. ஆனால் மாநாட்டிற்கு முதல் நாள் நடந்தது என்ன தெரியுமா?

1924களில் கூடிய இந்து மகாசபை, முஸ்லிம் லீக், ஆரிய லீக், தன்ஜீம் மகாசபை போன்றவைகள் பிரசங்கங்கள் மூலம் சம்பந்தப்பட்ட மக்களைத் தூண்டி விடுபவையாக இருந்தன. பெல்காம் கிலாபத் மாநாட்டுத் தலைவர் டாக்டர் கிச்லுவின் உரையும் கடின வார்த்தைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அது இந்துக்களின் துவேஷமான போக்கைக் கண்டித்து முஸ்லிம்களும் இவர்களுக்குப் போட்டியாக வரவேண்டுமென்று தூண்டும் வகையில் இருந்தது. இதனைச் சாந்தமாகக் கூறாமல் கடினமாகக் கூறியிருந்தார். எனவே 23.12.1924 இரவில் மௌலானா முகமதலி, டாக்டர் செய்புதீன் கிச்லு மறுநாள் வாசிக்க இருந்த தலைமை உரையை விழித்திருந்து திருத்தி, கடும் சொற்களை நீக்கினார். அந்த அளவிற்கு இந்து – முஸ்லிம் ஒற்றுமைக்காக உழைத்தவர் மௌலானா முகமதலி.

13.4.1925 சீதிலால் தர்மசாலையில் காங்கிரஸ் சார்பாக கூட்டம் ஏற்பாடாகியிருந்தது. கூட்டத்தில் மௌலானா முகமதலி பேசினார். “இன்றைய கூட்டத்திற்கு மிகவும் சொற்ப (குறைந்த அளவே) மக்கள் வந்திருக்கின்றனர். தங்கள் கொள்கையில் அசையாத உறுதி உள்ளவர்கள் இவ்விதமாக அயர்வைக் கண்டு தளர்ந்து விட மாட்டார்கள். தங்களுடைய கொள்கையும் அபிப்பிராயமும் சரியென மதிக்கும் வரை அவர்கள் தங்களது கொள்கையில் உறுதியாக இருப்பார்கள்'' என்று குறிப்பிட்டார்.

இந்திய சட்டசபையில் (மத்திய சட்டசபை) எல்லைப்புற மாகாணத்திற்கு இதர மாகாணங்களுக்கு இருக்கிற சுய உரிமை அளிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்திற்கு விரோதமாக மோதிலால் நேரு பேசினார். அதனை எதிர்த்து கட்டுரை எழுதியதால் மௌலானா முகமதலிக்கும் மோதிலால் நேருவிற்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

''அண்ணல் நபி (ஸல்) மதீனாவிலிருந்து யூதர்களுடன் உடன்படிக்கை செய்து கொண்டு மக்கத்து முஷ்ரிக்குகளை (பல தெய்வ வழிபாடு உடையவர்கள்) எதிர்த்தது போல, உங்களால் இயலுமாயின் கொடிய விரோதிகளை எதிர்க்க சொற்ப விரோதமாகவுள்ள இதர விரோதிகளுடன் உடன்படிக்கை செய்து கொள்ளுங்கள். முடிவான போர்க்களத்தில் பலமான யுத்தத்தையும், சிறிய போர்க்களங்களில் தடுப்பு யுத்தங்களையும் செய்யுங்கள்.

பெரிய போர்க்களத்தில் நீங்கள் வெற்றி பெற்று விட்டால் இதர சிறிய களங்களிலும் நீங்களே ஜெயசீலர்களாக இருப்பீர்கள்" என்று நீண்ட வரலாற்றைச் சொல்லிய பின் முத்தாய்ப்பாக இதனை ஹம்தர்த் பத்திரிகையில் எழுதியவர் மௌலானா முகமதலி.

அகில இந்திய காங்கிரசிற்கு தலைமை தாங்கிய (1920) லாலா லஜபதிராய் 1865 இல் பிறந்தவர். பிரபல வழக்கறிஞர். 1907இல் சிறைவாசத்தை மாண்டலேயில் அனுபவித்தவர். அமெரிக்கா சென்றவர், பாஸ்போர்ட் கிடைக்காததினால் அங்கேயே தங்கினார். (S.A.ரஹீம், காங்கிரஸ் வைர விழா மலர், 1945, சென்னை. பக்கம் 81) அமெரிக்காவில் இருந்த போது 1915 வரையிலான தேசிய இயக்கம் குறித்த நூலை ஆங்கிலத்தில் எழுதி 1916இல் வெளியிட்டார். அரசாங்கம் தடை செய்த அந்த நூல் 1.12.1927இல் லாகூரில் வெளிவந்தது.

Young India an interpretation and a history of the nationalist movement from within by Lajpati Rai with a foreword by Josiah. C. wedgwood, Lahore 1927 விலை ரூபாய் 3. 4வது பதிப்பு) அந்த நூலில் பக்கம் 233இல் அத்தியாயம் 6ல் Indian Nationalism and the World Forces (தேசிய இயக்கமும் வெளி உலகமும்) என்ற தலைப்பில் எழுதுகிறார் பின்னாளில் இந்து மகாசபையை உயர்த்திப் பிடித்த லாலா லஜபதிராய். இதோ அவரது வாசகங்கள்.

Turco – Italian war. Turkey's war with Italy, followed by her struggle with the Balkan states has done wonders in nationalizing the Indian Mohammedans (Muslims). At the present moment some of the Mohammedans (Muslims) perhaps feel even more intensely than the Hindus.

துருக்கிக்கும் இத்தாலிக்கும் நடந்த யுத்தமும் அதைத் தொடர்ந்து துருக்கிக்கும் பால்கன் இராஜ்யங்களுக்கும் நிகழ்ந்த போர்களும் மிக ஆச்சரியமான முறையில் இந்திய முஸ்லிம்களை தேசியவாதிகளாக்கிவிட்டன. தற்சமயம் முஸ்லிம்களில் சிலர் இந்துக்களை விடத் தீவிர தேசிய உணர்ச்சி கொண்டுள்ளார்கள் என்றும் சொல்லலாம்.

(யுவபாரதம் அல்லது இந்திய தேசிய இயக்கத்தின் வரலாறு என்ற பெயரில் வெளியான இதன் மொழிபெயர்ப்பு நூலின் 265ஆம் பக்கத்தில் இச்செய்தி உள்ளது. தமிழாக்கம் கல்கி, மங்களா நூலகம், நுங்கம்பாக்கம் சென்னை 6. 1957 இரண்டாம் பதிப்பு விலை ரூபாய் 5.00)

அதுமட்டுமா? அதே நூலில் பக்கம் 239இல் லாலா லஜபதிராய் எழுதிகிறார். The educated Mohammedans (Muslims), outside

India, are almost to a man identified with Indian Nationalism. So the Indian Mohammedans (Muslims) changed sentiments towards the British are likely to be a source of great strength to the national cause and make the situation more hopeful from the print of view of Indian Nationalism. இது லஜபதிராய் எழுதியது. அதன் தமிழாக்கத்தை முற்கூறிய தமிழ் நூலில் கல்கி தருகிறார். பக்கம் 271 இல் "இந்தியாவுக்கு வெளியிலுள்ள படித்த முஸ்லிம்களில் அநேகமாக எல்லோரும் தேசிய இயக்கத்தை ஆதரிப்பவர்களாவர். எனவே இந்திய முஸ்லிம்களின் மனோபாவத்தில் ஏற்பட்டிருக்கும் மேற்கண்ட மாறுதல் தேசிய இயக்கத்துக்குப் பெரிதும் பலந்தருதல் கூடும். தேசிய நோக்குடன் பார்க்குங்கால் நிலைமை இன்னும் அபிவிருத்தி அடையலாமென்று எதிர்பார்க்க இடமிருக்கிறது".

1925ல் மட்டும் 16 கலவரங்கள் நடந்தன. 1922 – 1927 ஆம் ஆண்டுகளுக்கு இடையே நாட்டில் 112 வகுப்புக்கலவரங்கள் நடைபெற்றன. 450 பேர் உயிரிழந்தனர், 5000 பேர் காயமுற்றனர் என சைமன் கமிஷன் அறிக்கை கூறியது (பிபின் சந்திரா, அமலேஷ் திரிபாதி, பாடுண்டே, சுதந்திரப் போராட்டம், தமிழாக்கம் கா. திரவியம், நேஷனல் புக் ட்ரஸ்ட், புது டெல்லி, 1987, பக்கம் 184)

எனவே டில்லியில் ஒற்றுமை மாநாடு நடத்தப்பட்டது. அதனால் பலன் ஏதுமில்லை. இந்த மாநாட்டில் கலந்து கொண்ட மௌலானா முகமதலி, "துரதிர்ஷ்டம் வாய்ந்த இந்த இந்து – முஸ்லிம் பிணக்கு மாற வேண்டும். அற்ப விஷயங்களுக்காக நாம் ஒருவருக்கு ஒருவர் வாளேந்தி வெளியில் வரக்கூடாது. அவ்வாறு நாம் வந்தால், சுயேச்சையாக மைதானத்தை விட்டு வெகுதூரம் விலகி விடுவோம். அந்நியர் நம்மைப் பார்த்துச் சிரித்து ஏளனம் செய்வர்" என்றார்.

சிரத்தானந்தரும் மதன் மோகன் மாளவியாவும் லாலா லஜபதிராயும் இணக்கத்திற்கு வரவில்லை. இறுதியில் மாநாடு ஒத்திவைக்கப்பட்டது. நாட்டில் அமைதியற்ற நிலை காணப்பட்டாலும், மௌலானா முகமதலி ஒற்றுமையைப் பற்றி விளக்கி நாடெங்கும் பிரச்சாரம் செய்தார்.

காந்தியடிகள் சபர்மதி ஆசிரமத்தில் அமர்ந்துவிட்டார். 1924 நவம்பர் 7இல் ஏழு நாட்கள் உண்ணாவிரதமும் இருந்தார். தொடர்ந்து சிம்லாவில் ஒற்றுமை மாநாடு நடந்தது. மௌலானா சௌக்கத் அலி, ஷுஐப் குறைஷி, டாக்டர் அன்சாரி ஆகியோரை தூதுவர்களாக அனுப்பி இந்து மகாசபைத் தலைவர் டாக்டர் மூஞ்சேயுடன் பேச அனுப்பினார். போபால் பேகம் சாரிபா 'தேசத்திலுள்ள பிளவையும்

வேற்றுமையையும் ஒழிக்க வேண்டிய காலம் வந்துவிட்டது' என்று தந்தி கொடுத்தார். ஒற்றுமையை ஏற்படுத்த பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

மௌலானா முகமதலியின் சகோதரரின் மைந்தர் ஷாஹித் அலி மரணம் அடைந்தார். தனது சிறிய தந்தையைப் பார்க்க வேண்டுமென்ற அவரது ஆசை நிறைவேறாது போயிற்று. மக்களை ஒற்றுமைபடுத்துவதில் மும்முரமாக இருந்ததால் அவரது உடலைக் கூட மௌலானா முகமதலி காணவில்லை. பல வாரங்கள் நடைபெற்ற மாநாட்டால் எந்தப் பிரயோஜனமும் இல்லை. மௌலானா முகமதலி தனது பணியினைத் தொடர்ந்தார். எதிர்ப்புகளை பொறுமையுடன் சகித்தார். சத்தியத்தை ஆதரித்தார். அசத்தியத்தை வெறுத்தார். தமது கொள்கையினின்றும் கொஞ்சம் கூடப் பிசகாமல் உறுதியாக நின்றார் மௌலானா முகமதலி.

1925 நவம்பர் 26,27,28இல் அலிகாரில் நடைபெற்ற ஐக்கிய மாகாண அரசியல் மாநாட்டில் மௌலானா முகமதலி தனது உள்ளத்து வேதனைகளை வெளியிட்டார். "இந்துக்களும் முஸ்லிம்களும் இவ்வளவு தூரம் சண்டையிட்டுக் கொண்டிருந்தால் இந்நாட்டில் நாட்டு மக்களுக்கு எப்போது சுதந்திரம் கிடைக்கும்?" என்று கேள்வி எழுப்பினார். Self Revelation of an All India Leader அகில இந்தியத் தலைவர் சுயரூபம் எனும் தலைப்பில் காம்ரேடு இதழில் காந்தியின் தலைமை குறித்தும், அரசியல் போதனைகளையும் லாலா லஜபதிராய் இந்துஸ்தான் டைம்ஸ் இதழில் எழுதிய 39 கட்டுரைகளுக்கு பதில்களையும் மௌலானா முகமதலி எழுதினார்.

24.12.1925இல் கான்பூரில் அகில இந்திய கிலாபத் மாநாடு நடைபெற்றது.மௌலானா அபுல்கலாம் ஆசாத் தலைமை தாங்கினார். மௌலானா முகமதலி, மௌலானா சௌக்கத் அலி, சென்னை யாகூப் ஹசன், திருச்சி முர்தஸா சாகிப், மகாத்மா காந்தி, சரோஜினி நாயுடு, பி.சீனிவாச அய்யங்கார், ஏ.ரங்கசாமி அய்யங்கார், டி.பிரகாசம், ஹக்கீம் அஜ்மல்கான் ஆகியோர் கலந்து கொண்டனர். 25.12.1925இல் மௌலானா அபுல்கலாம் ஆசாத் வராததால் மௌலானா முகமதலி தலைமை தாங்கினார். 26.12.1925 அன்று மௌலானா அபுல்கலாம் ஆசாத் தலைமையிலும் 27.12.1925அன்று மௌலானா ஹஸரத் மொகானி தலைமையிலும் 28.12.1925இல் மௌலானா ஆஸாத் தலைமையிலும் கூட்டம் நடைபெற்றது. மாப்பிள்ளைமார்களின் பிரச்சினைகள் உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. 26.12.1925இல் கான்பூரில் காங்கிரஸ் மகாசபை கூடியது. சரோஜினி நாயுடு தலைமை வகித்தார்.

மாநாட்டில் மௌலானா முகமதலி பேசுகையில், “இந்த தேசத்தில் அறிவாளர்கள் இல்லை போலும். ஏனெனில் அறிவாளர்கள் நிரம்பிய தேசமாக இருந்தால் இவ்வளவு காலம் இந்த தேசம் ஒரு கைக்குள் மடக்கி விடக் கூடிய ஆங்கிலேயரின் வசம் இருந்திராது. மான்செஸ்டரில் உள்ளவர்களின் சட்டைப்பையில் இருக்கும் 70கோடி ரூபாய் பம்பாய் ஆலைக்காரர்களது சட்டைப்பைக்கு மாற்றும் பாதுகாப்பை காங்கிரஸ் கோரவில்லை.ஆனால் இந்த 70 கோடி ரூபாயும் குறைந்தது 20கோடி ஏழை விவசாயிகளுக்காவது பிரித்துக் கொடுக்கப்பட வேண்டும்” என்று உரையாற்றினார்.

13.01.1926 ஹம்தர்த் இதழில் மௌலானா முகமதலி Test of Loyalty எனும் கட்டுரை தீட்டினார். தொடர்ந்து மௌலானா முகமதலி இந்து – முஸ்லிம் ஒற்றுமை குறித்தும், நாட்டு விடுதலை குறித்தும் எழுதினார்; பேசினார்; கருத்துக்களை எடுத்துவைத்தார்.

24.11.1926 ‘தேஜ்’ பத்திரிகையில் லாலா லஜபதிராய் ‘நானும், பண்டித மதன்மோகன் மாளவியாவும் இந்து. நான் ஒரு அடி முன் சென்று, காங்கிரஸ் இந்துக்களின் சபைதான் என்பதை உறுதிப்படுத்துகிறேன். 1920 – 1922 களில் தான் சில முஸ்லிம்கள் அதில் சேர்ந்து உழைத்தனர். ஆரம்பத்திலிருந்தே காங்கிரஸ் இந்துக்களின் சபை’ என்ற வாதத்தை வைத்தார். ஏற்கெனவே முன்பு சொல்லியதுபோல 24.1.1926இல் காம்ரேட் இதழும் 20.5.1926இல் ஹம்தர்த் இதழும் நின்றது.

1926இல் சுல்தான் இப்னு சஊது மக்காவில் அகில உலக முஸ்லிம் மாநாட்டைக் கூட்டினார். அதில் மௌலானா முகமதலியை பங்கெடுக்கச் சொன்னார். பக்கவாத நோய் தாக்கியது. அங்கு நீண்ட உரையாற்றினார். டில்லி திரும்பிய போது, ரோஸ்நாம்ஷாவில் மாலை நேரத் தொழுகைக்காக (மக்ரிப்) ஜாமிஆ மஸ்ஜிதில் 15,000 அல்லது 20,000 பேர் மௌலானா முகமதலியை வரவேற்றனர்.

1926 மே மாதத்தில் டில்லியில் கிலாபத் விசேஷ மாநாடு மௌலானா செய்யித் சுலைமான் சாகிப் நத்வீ தலைமை தாங்க, ஹக்கீம் அஜ்மல் கான் வரவேற்புக் கமிட்டியில் பணியாற்றினார். மௌலானா முகமதலி இதில் கலந்து கொண்டு அரிய உரை ஆற்றினார். “இது நமது தேசத்திற்கு சோதனைக் காலம். ஆகவே நீங்கள் ஆத்திரமடையக் கூடாது. உங்களுடைய செய்கையாலும் சொல்லாலும் யாரையும் ஆத்திரம் ஊட்டாதீர்கள். அவர்கள் அக்கிரமஞ் செய்தால் நீங்கள் பொறுமையாக இருங்கள்” என்று டெல்லி கிலாஃபத் விஷேச மாநாட்டில் உபதேசித்தார் மௌலானா முகமதலி.

1927இல் அனைத்துக் கட்சி மாநாடு என்ற பெயரால் ஒற்றுமையை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மாநாட்டின் பாதியிலேயே பலர் சென்றுவிட்டனர். மௌலானா முகமதலி இறுதி வரை மாநாட்டில் இருந்து பணியாற்றினார். காந்தி இதில் கலந்து கொள்ளவில்லை. களைப்படைந்த மௌலானா முகமதலி, ''முஸ்லிம்கள் எல்லோரும் ஒரு மனதாக ஒரு முடிவுக்கு வரலாம். அப்பால் அம்முடிவைக் காங்கிரஸில் கூறி நிறைவேற்றிக் கொள்ளலாம். காங்கிரஸ் அம்முடிவை அங்கீகரித்துவிட்டால் அப்புறம் கவலை ஏதுமின்றி தேச விடுதலைக்கான முயற்சிகளில் ஈடுபடலாம்'' என்று எண்ணினார்.

20.3.1927இல் டெல்லி வெஸ்டர்ன் ஹோட்டலில் கூட்டம் நடந்தது. காயிதே ஆஜம் முகமதலி ஜின்னாவும் இதில் சேர்ந்து கொண்டார். வேறு பல முன்னணியினரும் சேர்ந்தனர். எல்லோரும் ஒப்புக் கொள்ளத்தக்க வகையில் 14 அம்சக் கோரிக்கைகள் தயாரிக்கப்பட்டன. ஸ்ரீனிவாச அய்யங்காரும் முகம்மது யாகூபும் கலந்து கொண்டனர். மௌலானா முகமதலி திருப்தியுற்றார். (Ashiq majid Batalvi, Iqbal ke Akhari Do sal. Iqbal Academy Karachi, 1960 உருது நூல் பக். 217) 22.3.1927 டைம்ஸ் ஆப் இந்தியா நாளிதழில் இதன் முழு விவரத்தையும் பார்த்திடலாம். கோரிக்கைகளில் ஒன்றாக இந்து – முஸ்லிம் ஒற்றுமைக்காக 1927இல் பம்பாயில் பொதுக் கூட்டம் ஏற்பாடு ஆயிற்று. சர்தேஜ் இந்து முஸ்லிம் ஒற்றுமை குறித்து ஆற்றிய உரையை 16.7.1927 டைம்ஸ் ஆப் இந்தியா வெளியிட்டுள்ளது. ஹிந்துஸ்தான் டைம்ஸ் இந்துக்களின் நிலையை எழுதியது. அதனை Abdul Hamid, Muslim separatism in India, Lahore 1967 நூலின் பக்கம் 194இல் மேற்கோள்காட்டியுள்ளார்.

1926இல் டிசம்பரில் கௌஹாத்தியில் அகில இந்திய காங்கிரஸ் மாநாடு ஸ்ரீநிவாச அய்யங்கார் தலைமையில் அஸ்ஸாம் மாநிலத்தில் நடைபெற்றது. அப்போதைய முடிவுப்படி 1927இல் டிசம்பர் 26 அன்று சென்னையில் 42வது காங்கிரஸ் மகாசபை கூடியது. முத்துரங்க முதலியார் வரவேற்புக் கமிட்டித் தலைவராக பணியாற்றினார். டாக்டர் எம்.ஏ. அன்சாரி தலைமை தாங்கினார். 'பரிபூரண சுதந்திரமே இந்திய மக்களின் இலட்சியம்' என்ற தீர்மானத்தை இந்த மாநாட்டில்தான் பண்டித நேரு கொண்டு வந்தார். மாநாட்டில் பேசிய டாக்டர் அன்னிபெஸன்ட் பட்டும்படாமலும் பேசினார்.

அடுத்து பேசிய மௌலானா முகமதலி ''எனக்கும் மகாத்மா காந்திக்கும் சிஷ்யராக இருந்த எனது இளைய நண்பர் நேரு இன்று இத்தீர்மானத்தைக் கொண்டு வந்ததற்கு சந்தோஷப்படுகிறேன்.

அவரைப் பின்பற்ற நான் தயாராக இருக்கிறேன். மிஸஸ் அன்னிபெசண்டு இத்தீர்மானம் சாத்தியமற்றது என்று சொன்னார். அவர் இவ்விதம் சொன்னது எனக்கு அதிசயமாயிருக்கிறது. சாத்தியமில்லாதது என்று சொல்லுவது ஆண்டவனுடைய கட்டளை நிறைவேறாமல் வழிமறைப்பதாகும். ஜாலியன் வாலாபாக் படுகொலை நடக்கும் வேளையில் ஐரோப்பிய துருப்புகள் அங்கு இல்லை. இந்தியத் துருப்புகளைக் (இராணுவத்தை அல்லது போலீசை) கொண்டே நம்மைச் சுட்டுத் தள்ளினார்கள். காற்றிலும் நமக்குச் சுதந்திரமில்லை'' என்று மௌலானா முகமதலி ஆவேசமாகப் பேசிக் கொண்டிருந்த போது பண்டித நேரு எழுந்து ‘‘என் தேசத்திற்காக நான் பேசுகிறேன்'' என்றார்.

தொடர்ந்து பேசிய மௌலானா முகமதலி ‘‘காற்றுக் கூட இல்லை என்பது சரிதான். மூடு வண்டியில் காற்று இல்லாமல் பிள்ளைகள், கைதிகள் மடியவில்லையா? பிரிட்டிஷார் நம்மை சுட்டுத் தள்ளினால் எனக்கு அக்கறையில்லை. நாம் சாகத் தயாராக இருந்தால் அதிலும் மேலானது என்ன இருக்கிறது? ஏசுநாதர் (ஈசா(அலை) சாகவில்லையா? ஹுசைன் (ரலி) சாகவில்லையா? அவர்களை ஞாபகப் படுத்திக் கொண்டால் நாம் ஏன் அஞ்சவேண்டும்? சிறிய தேசமாகிய ஆப்கானிஸ்தானம் சுதந்திரம் அடைந்து விட்டது. 33 கோடி மக்களுடைய இந்தியா சுயராஜ்யமடையாதா? ஆயுதம் வேண்டியதில்லை. மனதில் தைரியம்தான் வேண்டும். காங்கிரஸ் காரியக் கமிட்டி இன்று சாகத் தயாராயிருந்தால் ஒரு மாதத்தில் சுயராஜ்ஜியம் கிடைக்கும். காங்கிரஸே சாகத் தயாராயிருந்தால் இப்பொழுதே சுதந்திரம் கிடைக்கும்'' என்று பலத்த கரகோஷங்களுக்கிடையே முழங்கினார்.

அதனைத் தொடர்ந்து பேச வந்த பி.சாம்பமூர்த்தி ‘‘அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி சாகத் தயாராக இருந்தால் ஒரு மாதத்தில் சுதந்திரம் கிடைக்குமென மௌலானா முகமதலி சொன்னார். எல்லா வேலைகளையும் விட்டு விட்டு அதற்கு திட்டத்தைப் போடுங்கள். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியிலுள்ளவர்கள் சார்பாக நாங்கள் சாகத் தயாராக இருக்கிறோம். இந்தியா அகிம்சைக்கு கட்டுப்பட்டிருக்கிறது. அந்த நிலை மாறி பலாத்காரத்தில் இந்தியா இறங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டால் அதற்கு ஜவாப்தாரிகள் ஆங்கிலேயர்களே'' என்றார். பாபு ராஜேந்திர பிரசாத் தீர்மானத்தை எதிர்த்துப் பேசினார். சேலம் விஜயராகவாச்சாரியார் பேசும் போது ‘‘500 லட்சம் மக்கள் செத்தால் பிரிட்டிஷார் இரங்கமாட்டார்களா?'' என்று மௌலானா முகமதலி கேட்டார். 10கோடி பேர் செத்தாலும் அவர்கள் இரங்கமாட்டார்கள் என்று தீர்மானத்தை எதிர்த்தபோது சாம்பமூர்த்தி அதனை ஆட்சேபித்தார். பண்டித மாளவியாவும்

முதலில் தீர்மானத்தை எதிர்த்தார். குடியேற்ற நாட்டு அந்தஸ்து காங்கிரஸின் இலட்சியம் என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது என்றார் பண்டித மதன் மோகன் மாளவியா. உடனே மௌலானா முகமதலி எழுந்து பண்டித மதன் மோகன் மாளவியாவைப் பார்த்து "அப்படி ஒரு தீர்மானத்தையேனும் காட்ட முடியுமா? " என்றார். உடனே பண்டித மாளவியா, "மௌலானா முகமதலி முன்னாள் காங்கிரஸ் தலைவர் என்ற தகுதியை வைத்துக் கொண்டு, தமக்குள்ள அந்தஸ்தை துஷ்பிரயோகம் செய்கிறார். ஒவ்வொருவரும் பேசுகையில் குறுக்கிடுகிறார். மரியாதையாக நடந்து கொள்ளத் தெரிந்து கொள்ள வேண்டும்" என்றார்.

மௌலானா சௌக்கத் அலி எழுந்து, "சுலபமாக என் கண்களில் நீர் பெருகுவதில்லை. ஆனால் சிலர் பேசுவதைக் கேட்கையில் எனது கண்களிலிருந்தும் நீர் தாரை தாரையாக பெருகுகின்றது. இந்த சுயராஜ்யத் தீர்மானத்துக்கு எவ்விதம் ஆட்சேபம் கூற முடியுமென்று எனக்குத் தெரியவில்லை. இந்தியா எப்பொழுதும் பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருக்க வேண்டுமென்று நினைக்காத ஒரு ஆங்கிலேயனாயினும் இருப்பதாக நமக்கு யோசனை சொல்லும் தலைவர்கள் சொல்ல முடியுமா?

பிரிட்டிஷ் படைகளுக்கும் ஆயுதங்களுக்கும் பயப்பட வேண்டியதில்லை. நாம் துணிந்து விட்டால் ஒன்றும் பயமில்லை. பண்டித மாளவியா போர்வீரர். எனக்கும் அவருக்கும் வித்தியாசமில்லை. பண்டிட் மாளவியா ஜி, எவ்வளவு காலம்தான் பொறுத்திருப்பது! உங்களுடைய பழைய வீரத்தைக் காட்டுங்கள். வெள்ளைக்காரர்கள் ஒரு முடிவுக்கு வந்திருக்கையில் நாம் ஒரு முடிவுக்கு வர வேண்டாமா? நமக்குச் சுதந்திரம் கொடுக்காவிட்டால் நாம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குள் இருக்க முடியாது என்று சொல்ல வேண்டாமா? இங்கிலாந்து இங்கிருந்து மரியாதையாக வெளியே செல்ல வேண்டியதுதான் நியாயம். இல்லாவிடில் பிரிட்டிஷார் அவமரியாதைக்கு உள்ளாக வேண்டியிருக்கும்" என்று சௌக்கத் அலி வீர உரையாற்றினார்.

சென்னையில் சேத்துப்பட்டுக்கு அருகில் எழும்பூர் ஏரியில் அமைக்கப் பெற்றிருந்த திலகர் அரங்கில் (காங்கிரஸ் பந்தல்) காந்தியடிகளின் பிரதம சீடரும் வகுப்புவாத எண்ணமேயில்லாத முஸ்லிம் தேசபக்தருமான டாக்டர் அன்சாரி (முக்தார் அகமது அன்சாரி) மாநாட்டிற்கு தலைமை வகிக்க காங்கிரஸ் மகாசபையின் 42வது காங்கிரஸ் மாநாட்டின் முதல் நாள் நிகழ்ச்சி டிசம்பர் 26 பிற்பகல் 2 மணிக்கு கூடியது. (காங்கிரஸ் நூற்றாண்டு மலர், 1885 – 1985 தமிழக காங்கிரஸ் கமிட்டி மலர் 1985, பக்கம் 141)

1927 டிசம்பர் 26 முதல் நாள் காங்கிரஸ் மாநாட்டில் யுத்த அபாயம் குறித்து பண்டித நேரு பேசினார். 28 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அடுத்துத்தான் பரிபூரண சுயேச்சைத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார் நேரு. உடனே வி.எல். சாஸ்திரி தீர்மானத்தை எதிர்த்துப் பேசினார். நேருவின் தீர்மானத்தை தீரர் சத்திய மூர்த்தி ஆதரித்துப் பேசினார். மௌலானா சௌக்கத் அலி பேச எழுந்தார். காங்கிரஸ் மாநாட்டில் உற்சாகமும் பலத்த கரகோஷங்களும் எழுந்தன. அப்போது மௌலானா சௌக்கத் அலி சென்னையில் நடைபெற்ற (1927) காங்கிரஸ் மாநாட்டில் பேசியது இதோ:

'நான் சுயேச்சை (விடுதலை) அடைந்து விட்டதாகவே நினைத்திருக்கிறேன். நான் இவ்வளவு வளர்த்தியாகவும் பெரிய உடலுடன் இருப்பதும் கூட சுதந்திர புருஷன் என்ற எண்ணத்தினால் நான் பெற்றிருக்கும் சந்தோஷமே காரணம் என்பதே எனது அபிப்பிராயம். (சிரிப்பு) பரிபூரண சுயராஜ்யம் என்ற இந்தத் தீர்மானத்தை தொடை நடுங்கிகளும், கோழைகளும் எதிர்த்தால் எனக்கு கோபம் உண்டாகி விடுகின்றது. ஆகையால்தான் நான் கடுமையான வார்த்தைகளை உபயோகிக்க நேரிடுகிறது. முன்னைவிட இப்பொழுது நாம் அதிகம் ஒற்றுமைப்பட்டிருக்கிறோம் என்பதில் சந்தேகமில்லை.

ஆலோசனைக் கமிட்டிக் கூட்டத்தில் நமது தலைவர் முகமது அகமது அன்சாரி அவர்களின் மருமகனைக் கண்டேன். அவர் பாரிஸில் படித்து வருகிறார். அவர் மற்ற சகோதர மாணவர்களுடன் பாரிஸில் பேசிக் கொண்டிருக்கும் போது, அவரவர்கள் தம்நாடு சுதந்திரம் பெற்றிருப்பதைப் பற்றிப் பேசினார்களாம். நமது மாணவர் மாத்திரம் அச்சமயம் தமது தலையைக் கீழே போட்டுக் கொள்ள நேர்ந்ததை என்னிடம் கூறினார். நேருவின் இத்தீர்மானத்தை நாம் நிறைவேற்றிய பின் இனி அவரும் சரி, எவரும் சரி, தமது தலையைக் கீழே போட்டுக் கொள்ள அவசியம் இராது என நான் நினைக்கிறேன்' என்றார் சௌக்கத் அலி. ஸ்ரீமான் சாம்பமூர்த்தி தீர்மானத்தை ஆதரித்துப் பேசினார். அதன் பின்னர் மாநாட்டில் சைமன் கமிஷன் குறித்த தீர்மானம் வந்தது.

சைமன் கமிஷன்

இந்தியாவில் உருவாகி வந்த அரசியல் சூழ்நிலையைக் கவனித்த பிரிட்டிஷ் நாடாளுமன்றம் 1919 இந்திய அரசுச் சட்டப்படி பத்தாண்டு முடிவில் அமைக்கப்பட வேண்டிய ராயல் கமிஷன் 1927, நவம்பர் 26ல் அமைக்கப்பட்டது. இக்குழுவின் தலைவராக பிரிட்டிஷ் லிபரல் கட்சியைச் சேர்ந்த சர் ஜான் சைமன் நியமிக்கப்பட்டார்.

இக்குழுவில் இடம்பெற்ற ஏழு பேரும் ஆங்கிலேயர்கள். பிரிட்டிஷ் பிரபுகள் அவை உறுப்பினரான இந்தியர் சின்ஹா பிரபு கூட இக்குழுவில் இடம் பெறவில்லை. இந்திய விவகாரச் செயலர் பீர்கன் ஹெட் பிரபு இந்தியாவில் உள்ள எல்லா அரசியல் கட்சிகளுக்கும் இடம் கொடுத்தால் சைமன் குழு பெருத்து விடும் என்றும் கூறியது இந்தியத் தலைவர்களை மேலும் சினங் கொள்ளச் செய்தது. எனவேதான் சென்னையில் கூடிய காங்கிரஸ் மகாசபை சைமன் குழுவை கடுமையாகக் கண்டித்தது.

மோதிலால் நேரு அக்குழுவின் நியமனத்தைக் கண்துடைப்பு வேலையென வர்ணித்தார். (வா.மாணிக்கவேலு, இந்திய தேசிய இயக்கத்தின் வரலாறு, சென்னை, 1977, பக்கம் 130)

1927 காங்கிரஸ் மாநாட்டில் சைமன் கமிஷன் பகிஷ்காரத் தீர்மானத்தை ஸ்ரீமான் ஸ்ரீனிவாச அய்யங்கார் கொண்டு வந்தார். டாக்டர் பெஸண்ட் ஆதரித்தார். ஸ்ரீமான் அய்யங்கர் சைமன் கமிஷனை கடுமையாக விமர்சித்தார்.

மௌலானா முகம்மதலி இத்தீர்மானத்தின் மீது பேசியபோது இவ்வாறு குறிப்பிட்டார்:

‘ஒத்துழையாமை இயக்கத்தை நாம் விடாமல் நடத்தியிருந்தால் இம்மாதிரி கமிஷன்களே ஏற்பட்டு இராது. நாமும் நமது தேசத்தினரும் சுயஆட்சிக்குத் தகுதி உடையவர்கள் என்பதை நிரூபிக்க மகாத்மா காந்தியைப் போன்ற ஒருவர் கமிஷன்

முன்பு போய் சாட்சி கூற யாரேனும் எதிர்பார்க்க முடியுமா? நாம் ஒத்துழையாமையைக் கைவிட்டதனால் தான் சட்டசபை வலையில் அகப்பட்டுக் கொண்டோம். சட்டசபைகளில் எனக்கு நம்பிக்கையில்லை என்பது உங்களுக்குத் தெரியும். பரிபூரண சுயேட்சை (முழுவிடுதலை) தீர்மானத்தை நிறைவேற்றிய பின் நான் சட்டசபைக்கு சென்று ராஜ விசுவாசப் பிரமாணம் செய்வேன். ஆனால் அதை விட துரோகம் வேறு எதுவும் இல்லை. சட்டசபைகளில் இடம்பெறுவது மிகவும் கஷ்டமான காரியம் என்று பலர் சொல்கின்றனர். இல்லவே இல்லை. சட்டசபைகளுக்குச் செல்வது சுலபமாயிருக்கிறது. ஆனால் அவற்றை விட்டு வெளியே வருவதுதான் கஷ்டமாயிருக்கிறது. சட்டசபைகளிலிருப்பது ஒரு செம்படவன் (மீன்பிடிப்போர்) ஒரு அருவியில் காலையில் இருந்து மாலை வரையில் மீன்பிடிக்க முயன்று கடைசியில் ஒரு மீன் கூடப் பிடிக்காமல் போன கதையாக இருக்கும்' என்று பலத்த கரகோஷத்திற்கிடையே குறிப்பிட்டார் மௌலானா முகமதலி.

அதன்பின் தீர்மானத்தின் மீது ஆதரித்துப் பேசிய சரோஜினி தேவியார், இந்து – முஸ்லிம் ஒற்றுமையை வலியுறுத்தினார். பின் பாபு ஜகத் நாராயண ராவ், கௌரிசங்கர் மிஸ்ரா ஆகியோர் தீர்மானத்தை எதிர்த்துப் பேசினார். சென் குப்தா தீர்மானத்தை ஆதரித்தார். பண்டித மதன் மோகன் மாளவியா பேச எழுந்ததும் பலத்த கரகோஷம். அவரை ஆங்கிலத்தில் பேசும்படி கூட்டத்தினர் கேட்டார்கள். ஆனால் அவர் ஹிந்தியில் பேசத் தொடங்கினார். 'ஒற்றுமைக்கு பரஸ்பர அன்பு ஏற்பட்ட பிறகு ஒருவரை ஒருவர் நம்ப வேண்டும் என்பதை இந்து, முஸ்லிம், பார்ஸி, சீக்கியர், ஆங்கிலோ இந்தியர் ஆகிய அனைவரும் உணர்ந்து விட்டால் ஒரு நாளைகேனும்ஆங்கிலேயர் இந்தத் தேசத்தில் ஆதிக்கம் செலுத்த முடியுமா? என்றார். ஸ்ரீனிவாச அய்யங்கார் ஸைமன் கமிஷனை அப்படியே கடலில் உதறித் தள்ளுவது நமக்கு சுலபம் என்றார்.

மௌலானா முகமதலி அதனைத் தொடர்ந்து பேசினார்.

மௌலானா முகமதலி பேசுகையில் '1921 இல் நான் சென்னைக்கு காந்தியடிகளுடன் புறப்பட்டு வந்து கொண்டிருக்கையில் வால்டேர் ஸ்டேஷனில்விசாகப்பட்டினம்கலக்டர்என்னைத்தடுத்துநன்னடத்தை ஜாமீன் கொடுக்குமாறு வாரண்டு பிறப்பித்தார். அவர்தான் நன்டைத்தை ஜாமீன் கொடுக்க வேண்டுமென்று நான் அவரிடம் சொன்னேன் (கூட்டத்தில் பலத்த சிரிப்போலி எழுந்தது) இந்தியரை ஜாலியன் வாலாபாக்கில் படுகொலை செய்து, இரத்தம் தோய்ந்த கையுள்ள நீங்கள் ஜாமீன் கொடுப்பதா? ஒத்துழையாமையையும் அகிம்சையையும் கடைப்பிடித்திருக்கும் நான் ஜாமீன் கொடுப்பதா

என்று அவரிடம் நான் கேட்டேன். இத்தீர்மானத்திற்கு முன்னர் இந்துக்கள் முஸ்லிம்கள் தங்களுக்குள் ஜாமீன் கொடுக்குமாறு கேட்டு வந்தோம். இன்றைய தினம் அவ்வழியை விட்டு ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தியுள்ளோம். அதாவது இந்துக்கள் முஸ்லிம்களுக்கும், முஸ்லிம்கள் இந்துக்களுக்கும் ஜாமீன் கொடுக்க வெண்டும். இனிமேல் மதவிஷயமாகவும் இந்துகளின் ஊர்வலத்திற்கும் முஸ்லிம்கள் குர்பானியை கொடுப்பதற்கும் காவல்துறையின் உதவியை தேடப்போவதில்லை. இனிமேல் நமது ஊர்வலம் செல்ல எல்லோரையும் விட பெரிய போலீஸ் கமிஷனரை ஏற்படுத்திக் கொண்டு விட்டோம். அதுதான் நமது மனச்சாட்சி, தர்மம், மனோதிடம்.

இன்று நாம் ஒரு அதிசயமான சொற்பொழிவைக் கேட்டோம். அதுதான் மதன்மோஹன் மாளவியா ஜியுடையது. இன்று நான் மதன் மோகன் மாளவியாஜியிடம் என்னை ஒப்புவித்திருக்கிறேன். அவர் என்னைக் காட்டிக் கொடுக்கமாட்டார் என்று நம்பியே அவ்விதம் செய்கிறேன்' என்று பலத்த, நீடித்த கரகோஷங்களுக்கு இடையே மௌலானா முகமதலி உரையாற்றி அமர்ந்தார்.

சைமன் கமிஷன் தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டது. எல்லோரும் ஒருங்கே எழுந்து நின்று வந்தே மாதரம் என்ற கோஷத்துடன் அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். தலைவர்களும் பிரதிநிதிகளும், ஐந்து நிமிடங்கள் வரையில் வந்தே மாதரம், 'அல்லாஹ் அக்பர்' என்று சந்தோஷ ஆரவாரஞ் செய்தனர். காங்கிரஸ் மண்டபம் முழுவதும் ஒரே குதூகலம் நிரம்பியிருந்தது. (இது 1935இல் சென்னை சுதேசமித்திரன் ஆபிசிலிருந்து வெளியான காங்கிரஸ் மகாசபை சரித்திரம் நூல் மூன்றாம் பாகம் 738 முதல் 781 வரையில் உள்ள பகுதிகளிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளது) 1927இல் தமிழகத்தில் நிலவிய நிலைதான் இன்றும் நீடிக்கிறது. அதனைக் குலைக்க நினைப்பவர்கள் ஏமாந்துபோவார்கள் என்பது எதிர்கால வரலாறு தர இருக்கும் பாடமாகும்.

சென்னை காங்கிரஸ் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் இந்து முஸ்லிம் ஒற்றுமை தீர்மானம், சுயராஜ்ஜியத் தீர்மானம், சைமன் கமிஷன் பகிஷ்கரிக்கும் தீர்மானம் ஆகியன மிக முக்கியமானவை. சி.என். முத்துரங்க முதலியாருக்கும் ராஜராம் பாண்டியாவிற்கும், திருமதி ருக்மணி இலட்சுமி பதிக்கும், கமலா தேவி சடோபாத்யாவிற்கும் ஸ்ரீனிவாச அய்யங்காருக்கும் நன்றி தெரிவிக்கிறேன் என்று தலைவர் அன்சாரி கூறினார். சர் அப்துல் காதிர் சாஹிப் தலைமையில் அகில இந்திய முஸ்லிம் கல்வி மாநாடு இதே காலகட்டத்தில் நடந்தது. சைமன் குழுவை

அமைக்கும் செய்தியை பிரிட்டிஷ் பிரதமர் திடீரென அறிவித்தார். அந்தச் செய்தியை இர்வின் பிரபு எல்லாக் கட்சித் தலைவர்களையும் தம் மாளிகைக்கு அழைத்துச் சொல்லியபோது, காந்தியடிகள் இதற்காகவா எங்களை அழைத்திருக்க வேண்டும். ஒரு அணா போஸ்ட் கார்டில் இதனை அஞ்சல் மூலம் அறிவித்திருக்கலாமே என்று இர்வினிடம் கூறினார்.

இப்போது காங்கிரஸ் மகாசபையில் சைமன் கமிஷனை பகிஷ்கரித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. டில்லியில் ‘சைமனே திரும்பிப் போ’ என்று மக்கள் திரண்டனர். லாகூரில் நடைபெற்ற போராட்டத்தில் லாலா லஜபதிராய் போலீஸ் தாக்குதலில் காயம்பட்டு பின்னர் இறந்தார். இலட்சுமணபுரியில் மக்கள் மீது தடியடி நடத்தப்பட்டது. உத்தர பிரதேசத்தில் நேரு, கோவிந்தவல்லப் பந்திற்கு தடியடி. கோவிந்தவல்லபந் வாழ்நாள் முழுவதும் தலையை அசைத்தபடியே வாழ்ந்தார்.

பாட்னாவில் 50000 மக்கள் அமைதியான ஆர்ப்பாட்டம் நடத்தினர். பம்பாயில் சைமன் வந்த போது அங்கிருந்த 22 ‘சர்’ பட்டம் பெற்றவர்கள் ஒருவரேனும் செல்லவில்லை. பெரும் வியாதிக்காரர்களை போலவே சைமன் குழுவினர் இந்திய நாட்டில் நடமாடி விட்டு தங்கள் தாய்நாடு திரும்பினர் என்பர் அரியலூர் சபாபதி (இந்திய சுதந்திரப் போர், குளித்தலை, 1976, பக்கம் 153)

சென்னையில் நடைபெற்ற போராட்டத்தில் போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் சிலர் இறந்தனர். பலர் காயமுற்றனர். சென்னை உயர் நீதிமன்றக் கட்டிடத்தில் வைக்கப்பட்டிருந்த தியாகி ஒருவரின் உடலுக்கு அஞ்சலி செலுத்தச் சென்ற டி. பிரகாசத்தை போலீசார் துப்பாக்கியால் சுடமுற்பட்டபோது அவர் தனது திறந்த மார்வை தீரத்தோடு காட்டியதால் ஆந்திர கேசரி என்று போற்றப்பட்டார். ஏராளமானவர்கள் கலந்து கொள்ள மதுரையிலும் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நான்கு கழுதைகள் முதுகில் இரண்டு பக்கமும் ‘சைமன் கோ பேக்’ அட்டைகள் தொங்கவிடப்பட்டன. (சி.சு. செல்லப்பா, சுதந்திரதாகம் 1997 எழுத்து பிரசுர வெளியீடு 3 பாகங்கள். முதல் பாகம், மறுபதிப்பு சென்னை 2016, பக்கம் 109)

1929 மார்ச் 31ஆம் நாள் பம்பாயை விட்டு புறப்பட்டுச் சென்றது சைமன் குழு. 1930 மே மாதம் அதன் அறிக்கையை இரண்டு தொகுதிகளாக வெளியிட்டது.

சைமன் கமிஷனை ஆதரிப்பது அத்துடன் ஒத்துழைப்பது என மியான் முஹம்மது ஷஃபீ (பார்கட்லா) அறிவித்தார். ஆதரவாளர்

சிலரோடு லாகூரில் முஸ்லிம் லீக் பெயரில் மாநாடு நடத்தினார். மௌலானா முகமதலி, மௌலானா சௌக்கத் அலி, காயிதே ஆஜம் முகமதலி ஜின்னா போன்ற தலைவர்கள் சைமன் கமிஷனைக் கடுமையாக எதிர்த்தனர். இதன் காரணமாக முஸ்லிம் லீக் பெயரில் இரண்டு மாநாடுகள் நடந்தன. சைமன் கமிஷனை எதிர்த்து கல்கத்தாவில் சர் முஹம்மது யாகூப் தலைமையிலும் கமிஷனை ஆதரித்து லாகூரில் மியான் முஹம்மது ஷஃபி தலைமையிலும் மாநாடுகள் நடந்தன.

1927 டிசம்பர் இறுதியில் கல்கத்தாவில் சர் முஹம்மது யாகூப் தலைமையில் சைமன் கமிஷனை எதிர்த்து நடைபெற்ற மாநாட்டில் மௌலானா முகமதலி, மௌலானா சௌக்கத் அலி, காயிதே ஆஜம் முகமதலி ஜின்னா மற்றும் நாடெங்குமிருந்து தலைவர்கள் பெருமளவில் கலந்து கொண்டார். (எழுத்தரசு. ஏ.எம். ஹனீப், முஸ்லிம் லீக் 1906 2006 நூற்றாண்டு வரலாறு முதல் பாகம், சென்னை, 2008, பக்கம் 194, 195)

முஸ்லிம்களைப் பொறுத்த அளவில் சைமன் குழுவைப் பற்றி ஒன்றுபட்ட கருத்து நிலவவில்லை. 1927 டிசம்பர் கடைசி வாக்கில் அகில இந்திய முஸ்லிம் லீக் இரண்டாக உடைந்தது. (மனோரஞ்சன் ஜா, சுதந்திரப் போராட்டமும் மத்திய சட்டசபையும், தமிழாக்கம் சாலை இளந்திரையன், நேஷனல் புக் டிரஸ்ட், புது டெல்லி, 1974, பக்கம் 159)

1928 மார்ச்சில் அல்வார் மகராஜா டில்லியில் விருந்து ஏற்பாடு செய்தார். அவர் பிரிட்டிஷார் கீழ் மக்கள் துன்பப்படுவதை உருதுவில் கவிதையாக எழுதியிருந்தார். உடல்நலக் குறைவு காரணமாக மௌலானா முகமதலி மருத்துவ சிகிச்சைக்காக உடனே ஐரோப்பா செல்ல வேண்டுமென்று கோரிக்கை வைத்தார். மௌலானா முகமதலியின் மருத்துவ ஆலோசகராக இருந்த டாக்டர் எம்.ஏ. அன்சாரியும் இதற்கு சம்மதம் தெரிவித்தார். 1928 மே மாதம் கிளம்பி சூன் மாதம் இலண்டனுக்கு சிகிச்சைக்காக முகமதலி சென்றார். அப்போது இந்தியாவில் அரசியல் குழப்பங்கள் நிகழ்ந்தன.

நேரு திட்டம்

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி வெளியிட்ட சர்வகட்சி மாநாடு 1928 நூலில் சில செய்திகளை விவரமாய்க் காணலாம் என்று தனது முஸ்லிம் லீக் சரிதை நூலில் (1947) மௌலவி மீ.இ.மு. அபுல் ஹஸன் ஷாதலி சாஹிப் பக்கம் 156 இல் கூறுகிறார்.

மௌலானா முகமதலியும் சிகிச்சைக்காக இலண்டன் சென்று விட்டார். முகமதலி ஜின்னாவும் இங்கிலாந்து சென்றிருந்தார். இந்த நேரத்தில் நேரு திட்டம் உருவானது. இதற்காக கூடிய கூட்டங்களில் ஜெயகர் என்.எம். ஜோஷி கடைசிவரை கலந்து கொள்ளவேயில்லை. ஷுஐப் குரைஷி நேரு கமிட்டி தயாரித்த திட்டங்களில் பலபாகங்களை எதிர்த்து கமிட்டித் தலைவருக்கு கடிதம் எழுதினாரே தவிர அவரும் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

1928 மே 19 இல் பம்பாயில் கூடிய மூன்றாவது அனைத்துக் கட்சி மாநாட்டில் மோதிலால் நேரு தலைமையில் பத்து பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டு, அதில் உறுப்பினராக செயல்பட்ட நேரு தனது அறிக்கையை 10.8.1928இல் தாக்கல் செய்தார். இதுவே நேரு அறிக்கை என்று அறியப்பட்டது. அதில் டொமினியன் அந்தஸ்து உடனடியான குறிக்கோளாகவும் பூரண சுயராஜ்யம் இறுதி இலட்சியமாகவும் இருக்க வேண்டும் என்று இருந்தது. வங்கத்துச் சிங்கம் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் இதனை ஏற்கவில்லை. அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி 4.11.1928, 5.11.1928 ஆகிய தேதிகளில் டில்லியில் கூடி நேரு அறிக்கையைப் பாராட்டியது. கல்கத்தாவில் 1928 டிசம்பரில் 29ல் கூடிய 43வது காங்கிரஸ் கூட்டத்தில் வாதப் பிரதிவாதங்கள் எழுந்தன.

சுபாஷ் சந்திரபோஸ் தீர்மானத்தை திருத்துவற்கு வாக்கெடுப்பு நடத்தக் கோரினார். அவரது கோரிக்கைக்கு ஆதரவாக 973

வாக்குகளும் எதிர்த்து 1358 ஓட்டுகளும் கிடைத்தன. மகாத்மாவின் தீர்மானம் வெற்றி பெற்றது. இலண்டனில் சிகிச்சையில் இருந்த காரணத்தினால் மௌலானா முகமதலியால் இக்கூட்டத்தில் கலந்து கொள்ள இயலவில்லை.

மௌலானா முகமதலி 1928 டிசம்பர் முதல் வாரத்தில் இங்கிலாந்திலிருந்து இந்தியாவிற்கு திரும்பினார். 1927 சென்னை காங்கிரசில் நிறைவேற்றப்பட்ட பூரண சுயராஜ்ய தீர்மானத்திற்கு மாற்றாக 1928 கல்கத்தா காங்கிரசில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதால் காங்கிரசிலிருந்து விலகினார்.

மௌலானா அபுல் கலாம் ஆசாத், டாக்டர் அன்சாரி, டி.ஏ.கே. ஷெர்வானி ஆகியோர் ஓர் அணி, சர் முகமது ஷஃபி, ஆகாகான் இன்னொரு அணி, முகமதலி ஜின்னா பிறிதொரு அணி என முஸ்லிம்கள் பிளவுபட்டுக் கிடந்தனர்.

மௌலானா முகமதலி இலண்டனில் இருந்து தாயகம் திரும்புவதற்கு முன் கான்பூரில் நவம்பர் 4 மற்றும் 5, 1928 தேதிகளில் உத்தரப் பிரதேச சர்வகட்சி முஸ்லிம்கள் மாநாடு நடைபெற்றது. ஹாபிஸ் ஹிதாயத் ஹுசைன் வரவேற்க, மௌலானா சௌக்கத் அலி தலைமையில் இம்மாநாடு நடைபெற்றது. சாலிம்பூர் ராஜா நவாப் ஜாம்சேட் அலிகான், நவாப் இஸ்மாயில் கான், பாசல் இப்ராஹிம் ரஹ்மத்துல்லா, நவாப் அலி ஹசன் கான், நவாப் முர்த் தஸா ஹுசைன்கான், கித்வார், டாக்டர் சாபத் அஹமதுகான், மௌலானா ஷாபி காவூதி ஹஸ்ரத், மொகானி மற்றும் பலர் இதில் கலந்து கொண்டனர்.

இந்த நிலையில் 9.12.1928 இல் பீகார் மற்றும் ஒரிசா சர்வகட்சி முஸ்லிம் மாநாடு பாட்னாவில் கூடியது. மௌலானா முகமதலி தலைமை தாங்கினார். டாக்டர் முஹம்மது ஷா சுபையர் கான், பகதூர் இஸ்மாயில் ஷஃபி, அஹமது அஸாத் சுபானி மற்றும் பலர் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தில் தான் மௌலானா முகமதலி நேரு அறிக்கை குறித்து முதல் முறையாக முறைப்படி கருத்தைத் தெரிவித்தார்.

நேருவின் அறிக்கை நல்லதா, கெட்டதா என்பதல்ல; பிரிட்டிஷ் டொமினியன் அஸ்தஸ்தை நமக்குத் தருவதை நாம் ஏற்றுக் கொள்ள இயலாது என்று தனது கருத்தை பதிவு செய்தார். (In his address, the Maulana Mahomed Ali said whether the Nehru Report was good or bad he would not consent to be under British domination. (A.M.Zaidi, Evolution of Muslim political thought in India, Volume Three, S. Chand company New Delhi 1977, Page 662)

வங்காள முஸ்லிம்கள் சர்வகட்சி மாநாடு கல்கத்தாவில் 23.12.1928இல் ஹெச்.எஸ். மஹ்மூத் சுக்ரவர்தி வரவேற்க சர்அப்துர் ரஹிம் தலைமையில் நடைபெற்றது. 31.12.1928இல் டில்லியில் முஸ்லிம் சர்வகட்சி மாநாடு நடைபெற்றது. ஹக்கீம் அஜ்மல்கான் வரவேற்றார். ஆகாகான் தலைமை உரை ஆற்றினார். ஷாஜகான் கோட்டை பின்புறம் ஜாமிஆ மஸ்ஜித் அருகே இந்த மாநாடு 3000 பேர்களுடன் நடைபெற்றது. ஏ.கே.கஜ்னவி, மஹ்மூத் சுக்ரவர்த்தி, ஜீல்பிகார் அலிகான், முகமது ஷஃபி, முகமது இக்பால், மாலிக் பெரோஷ் கான், நவாப் முகமது யூசுப், முகம்மது இஸ்மாயில் ஷபி தாலுதி, செய்யது ரஜா அலி, குவாலியர் சர்தார் சுல்தான் அகமது, டாக்டர் ஜியாவூதின், மௌலானா ஹஸரத் மொகானி, மௌலவி முஹம்மது யாகூப் சௌத்திரி, ஜபருல்லா ஆகியோருடன் நமது மௌலானா முகமதலியும் மாநாட்டில் கலந்து கொண்டார்கள் (முற்கூறிய ஏ.எம். ஜெய்தியின் ஆங்கில நூல் பக்கம் 665)

மாநாட்டில் மௌலானா முகமதலி உரையாற்றுகையில் 'முஸ்லிம்களை 'ஈ'யின் அந்தஸ்தில் வைத்திட ஆசை கொள்கின்றனர். 'ஈ'யின் குணம் நல்ல ஆகாரத்தின் மீது உட்கார்ந்து அதை அசுத்தப்படுத்தி சாப்பிட, அருந்த அருகதையற்றதாக ஆக்கிவிடுகிறது. ஆம்! அவர்கள் நம்மை ஈக்களாகவே மதிக்கட்டும்! ஆனால் சாதாரண ஈக்களல்லாது தேனீக்கள் போலவே கருதட்டும்! தேனீக்களாகிய நாம் தேன் தயாரித்து அதை அருந்த அவர்களுக்கு அனுமதிக்கிறோம். ஆனால் அந்தத் தேன் அருந்தும் அவர்கள் தேனை அருந்துவதோடு அல்லாது தேனீக்களையும் துன்புறுத்த முற்படும் வேளை நிச்சயம் அவர்கள் தேனீக்களின் விஷக் கொடுக்கிலிருந்தும் பலன் பெறத் தயாராக இருக்கட்டும்' என்று மௌலானா முகமதலி ஆவேசமாக உரையாற்றினார்.

1.1.1929 இல் இரண்டாம் நாளிலும் மாநாடு தொடர்ந்தது மௌலானா சௌக்கத் அலி ஆகாகானுக்கு நன்றி தெரிவித்து உரையாற்றினார்.

அகில இந்திய முஸ்லிம் லீக் கவுன்சில் ஜின்னாவின் தலைமையில் 3.3.1929இல் டெல்லியில் கூடியது. முஸ்லிம் லீக் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஹக்கீம் அஜ்மல்கான், சர் முகம்மது ஷஃபி, மௌலவி ஷஃபி தௌதி, மௌலவி யாகூப், நவாப் இஸ்மாயில் கான், மௌலானா முகமதலி, மௌலானா சௌக்கத் அலி ஆகியோர் பங்கேற்றனர். காயிதே ஆஜம் ஜின்னாவின் 14 அம்சத் திட்டம் குறித்து விவாதிக்கப்பட்டது. விவாதத்தில் ஒருமித்த கருத்து ஏற்படவில்லை. பிரிட்டிஷார் ஜின்னாவின் திட்டத்தையும்,

நேருவின் அறிக்கையையும் நிராகரித்தனர். (டாக்டர். க. வெங்கடேசன், டாக்டர். பி.எஸ். சந்திரபிரபு, இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு, இிராசபாளையம், 2013, பக்கம் 208).

1929 டிசம்பர் 29இல் ராபி ஆற்றின் கரையில் கூடிய அகில இந்திய காங்கிரஸிற்கு பண்டித நேரு தலைமை வகித்தார். 1930 ஜனவரி 26இல் நாடெங்கும் சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது. 1930 மார்ச் 12இல் காந்தியடிகள் தண்டியிலிருந்து உப்புச் சத்தியாக் கிரகப் போரைத் துவக்கினார். அரசின் அடக்குமுறைகள் காரணமாக 1930ல் வருடாந்திர காங்கிரஸ் மாநாடு நடைபெறவில்லை.

30.3.1929இல் அகில இந்திய முஸ்லிம் லீகின் ஒபன் செசன் டில்லியில் நடைபெற்றது. ஜின்னா தலைமை தாங்கினார். மௌலவி முகம்மது யாகூப், மௌலானா ஜாபர் அலி கான், டாக்டர் முஹம்மது ஆலம், மௌலானா ஷாபி தௌதி, மௌலானா முகமதலி, மௌலானா சௌக்கத் அலி, சேத் சொர்வானி, டாக்டர் கிச்சலு, மாலிக் பர்கத் அலி, டாக்டர் ஷபாத் அஹமது ஹசன், அன்வாருல் அஜீம், மௌலவி செய்யது முர்தஸா, நவாப் அப்துல் ஹசன், முப்தி கிபாயத்துல்லா, (ஜாமியா மஸ்ஜித் இமாம்) ராஜா கசன்ஃபர் அலிகான், மௌலானா அபுல் கலாம் ஆசாத், முஹம்மது சித்திக், ஆஷப் அலி ஆகியோர் கலந்து கொண்டனர்.

காயிதே ஆஜம் ஜின்னாவை தலைமை தாங்க மௌலானா முகமதலி முன்மொழிந்தார். மாநாட்டின் இடையிலே தீர்மானங்களில் மௌலானா முகமதலியும் சௌக்கத் அலியும் தங்களது கருத்துகளை எடுத்து வைத்தனர்.

டெல்லி மாநாட்டு முடிவுகளை மௌலவி முகம்மது யாகூப், மௌலானா முகமதலி, மௌலானா சௌக்கத் அலி, நவாப் இஸ்மாயில் கான், பசல் ரஹ்மத்துல்லா, நவாப் முஹம்மது யூசுப் முப்தி ரியாபத்துல்லா, ஹாஜி அப்துல்லா ஹாரூன், மௌலானா முகம்மது ஷாபி உட்பட 38பேர்கள் கையொப்பமிட்டு பத்திரிகைகளுக்கு அறிக்கை தந்தார்கள்.

பர்மா பயணம்

“ஹுஸைன் கொல்லப்பட்டார்! எனினும் உண்மையில் அழிந்தது யஜீதுதான். ஹுஸைன் எந்த சத்தியத்துக்காக உயிர் கொடுத்தாரோ, அது அழிந்ததா? இல்லை. இஸ்லாமிய சரித்திரம் அளிக்கும் படிப்பினை என்ன? ஒவ்வொரு கர்பலாவிற்குப் பின் இஸ்லாம் புத்துயிர் பெற்று எழுந்தது என்பதே” என்று முழங்கிய மௌலானா முஹமதலி ஜவஹர் 1929 மார்ச்சில் பர்மா (மியான்மர்)விற்குச் சென்றார்கள். அவர்களை முஸ்லிம்கள் பெருமையோடு வரவேற்றனர். இரங்கூன் மஸ்ஜிதில் ‘இஸ்லாத்தின் புத்தமைப்பு’ எனும் தலைப்பில் அவர்கள் ஆற்றிய ஆங்கிலச் சொற்பொழிவு அடங்காத உணர்ச்சிக் கொந்தளிப்பின் பிரவாகம்.

மறுநாள் இரங்கூன் டெய்லி நியூஸ் ஏட்டில் அந்த வீரஉரையை வேகம் குறையாமல் பிரசுரித்தவர் அல்லாமா கரீம் கனி. அப்போது அவருக்கு வயது பதினெட்டு. மறுநாள் அவரை அன்போடு அழைத்து அணைத்துக் கொண்டு, போற்றினார் முஹம்மது அலி. தென்னிந்திய முஸ்லிம்களின் தலைவர் வி.மீ. அப்துல் ரஹ்மான் அம்பலம் வீட்டில் மௌலானா முகமதலி தங்கியிருந்த காலம் வரை ஓர் ஊழியரைப் போல தொண்டு செய்தவர் கரீம் கனி. இது என் வாழ்நாளில் கிடைத்த பெரும் பேறு’ என்று அவர்கள் சொல்லியுள்ளார்கள் (அல்லாமா கரீம் கனி வரலாறும் கடிதங்களும் மௌலவி, கே. முஹம்மது அப்துஸ் ஸலாம் ஜமாலி, துவரங்குறிச்சி 1992 பக்கம் 26, 27)

தனது மகளின் உடல்நிலை மோசமாக இருந்த காரணத்தினால் பர்மாவில் இருந்து திரும்பினார் மௌலானா முகம்மது அலி. எலும்புருக்கி நோயால் பாதிக்கப்பட்ட மௌலானாவின் மகள் 1929 சூலையில் மறைந்தார். மௌலானாவிற்கு மொத்தம் ஏழு பெண் மக்கள். அவரின் உடல் டில்லியில் அடக்கம் செய்யப்பட்டது. 11.3.1924ல் ஏற்கெனவே ஒரு மகள் மரணமடைந்து அலிகாரில் அடக்கம் செய்யப்பட்டார். அப்போது துருக்கியின் முஸ்தபா கமால்

பாட்சா கலீபா பதவியை தடை செய்த வேளை. அதற்காக நீண்ட தந்தியினை தயாரித்துக் கொண்டிருந்த மௌலானா முகமதலி.

காங்கிரசில் இருந்த அபுல்கலாம் ஆசாத், அன்சாரி, மஜீத் காஜா, காலிக் ஜமான், செய்புதீன் கிச்சலு போன்ற மௌலானாவின் தோழர்கள் காங்கிரசில் பணியாற்றினார்கள். மௌலானா முகமதலியை விட்டு விலகினார்கள்.

லார்டு இர்வின் 12.5.1930 அன்று மௌலானா முகமதலியை நீண்ட நேரம் சந்தித்து உரையாடினார். (Private papers of Lord Irwin Nehru Committee Report 1926 & 1931, MSS Eur. Vol. V) இர்வின் வெட்ஜ் உட் பென்னுக்கு எழுதிய கடிதத்தில் இதனைத் தெரிவித்துள்ளார். மௌலானா முகமதலியுடன் உரையாற்றிக் கொண்டிருந்தேன். அவர் தங்கு தடையின்றி சொற்பொழிவாற்றுகின்ற சிறப்பியல்பு கொண்டவர் என்று இர்வின் எழுதியுள்ளார் (Dr. Afzal Iqbal, Life and Times of Mohamed Ali, New Delhi, 1978, Page 374)

1930 சூன் மாதத்தில் முற்றிலும் பாதிக்கப்பட்டு, நடமாட இயலாத நிலையில் சிம்லாவில் மருத்துவமனையில் சிகிச்சைக்காக மௌலானா அனுமதிக்கப்பட்டார். நீரிழிவு மற்றும் பலவிதமான உடல் பாதிப்புகளால் அவதியுற்ற மௌலானா முகமதலியால் நடக்கவோ, படிக்கவோ, எழுதிடவோ முடியாத நிலை. இந்நிலையில் பிரிட்டிஷாரால் 1930 நவம்பர் 12ல் இலண்டனில் வட்டமேஜை மாநாடு நடத்த தீர்மானிக்கப்பட்டது. காங்கிரஸ் தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்த வேளை. பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து பல கட்சிகளின் பிரதிநிதிகள் 57 பேர்களும் இந்திய சமஸ்தானங்களில் இருந்து 16 பேர்களும் இங்கிலாந்து அரசியல் கட்சிகள் சார்பாக 16 பேர்களும் என வட்டமேஜை மாநாட்டில் 89 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். காங்கிரஸ் தலைவர்கள் கலந்து கொள்ளவில்லை. ராம்சே மெக் டொனால்டு வட்டமேஜை மாநாட்டிற்கு தலைமை தாங்கினார்.

டாக்டர் மூஞ்சே, ஜெயகர் ஆகியோர் வட்டமேஜை மாநாட்டிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். மௌலானா முகமதலி கடுமையாக நோய் வாய்ப்பட்டிருந்த நிலையில் தமது நோக்கங்களையும் கொள்கைகளையும் வட்டமேஜை மாநாட்டில் எடுத்துரைக்க சந்தர்ப்பம் வாய்த்ததால் இலண்டன் செல்ல விரும்பினார். படுத்த படுக்கையாக இருக்கும் நிலையில் இலண்டன் செல்ல முடிவெடுத்தார். தனது வாழ்நாளின் அனைத்து நிலைகளிலும் உறுதுணையாக இருந்த தனது மனைவியையும் அழைத்துச்

செல்ல விரும்பினார் மௌலானா. இதற்காக மூவாயிரம் அல்லது நான்காயிரம் ரூபாயை பிச்சையெடுத்தோ அல்லது கடனாகவோ ஏற்பாடு செய்யுமாறு கூறினார்.

... to beg or borrow some three to four thousand rupees in order to take my wife along. She has been my companion in all the stages of life... (Abdul Majid Darya badi Muhamed Ali, Dhati Diary, Azamgarh, 2 volumes, 1954 & 1956, Volume II, P 156.

மௌலானா முகமதலி லார்டு இர்வினுக்கு தான் வட்டமேஜை மாநாட்டில் கலந்து கொள்ள வருகிறேன் என்று 11.9.1930ல் நீண்ட கடிதம் எழுதினார்.

(1926 & 1931 MSS. EurC.152/25: Private papers of Lord Irwin Nehru committee, report no. 6186, India office library)

குளிர் சூழ்நிலை, இடது கண் சிலவேளையில் முற்றிலும் பார்வை இழந்து விட்ட நிலை; வலது கண் ஆபத்தான நிலை. படிக்கவோ எழுதவோ முடியாத நிலை. இலண்டன் பயணம் மிக ஆபத்தானது என்று எனது துணைவியாரும் எனது சகோதரரும் எச்சரித்த நிலையிலும், மருத்துவர்கள் அறிவுரையையும் மீறி நான் இலண்டன் வருகிறேன் என்று எழுதினார்.

மௌலானா முகமதலியின் இலண்டன் பயணத்தை காங்கிரசார் பலமாக ஆட்சேபித்தனர். அவரை தேசத்துரோகி என்றனர். சமூகத்தைக் காட்டிக் கொடுத்தவர் என்றும் குறை கூறினர். பம்பாயிலுள்ள காங்கிரசார் வட்டமேஜை மாநாட்டிற்குச் செல்லும் பிரதிநிதிகளை கருப்புக் கொடி பிடித்து வழியனுப்ப வேண்டும் என்று தொண்டர்களை ஏற்பாடு செய்திருந்தனர். இது பம்பாயில் மௌலானா முகமதலியின் ஆதரவாளர்களுக்கு தெரியவந்தது.

அவர்கள் தங்களது ஒப்பற்ற தலைவரை மலர்களாலும், மலர் மாலைகளாலும், ‘அல்லாஹ் அக்பர்’ என்ற முழக்கத்தாலும் வழியனுப்ப எண்ணி தொண்டர்களைத் திரட்டினர். இதனையறிந்ததும் கருப்புக் கொடி காட்ட முடிவெடுத்த கூட்டத்தார் அத்திட்டத்தைக் கைவிட்டனர். எனினும் கருப்புக் கொடிகள் காட்டப்பட்டன. தொண்டர்களின் இதயங்களிலிருந்து வெளிவரும் உண்மைப் பிரார்த்தனைகளுடன் மௌலானா இலண்டன் புறப்பட்டார்.

டில்லியிலிருந்து பம்பாய்க்கு புறப்படும் முன் தனது நண்பர் ஒருவருடன் பேசும்போது ‘அந்தோ என்னை முஸ்லிம் தலைவர்கள் மதிக்கவில்லை. இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள் உயிருடன் இருப்பவர்களைப் போற்றுவதில்லை. இறந்தவர்களையே

போற்றுவார்கள். நான் இறந்த பிறகுதான் என்னை நினைத்துப் பார்பார்கள். நான் அவர்களால் மிகுந்த கஷ்டத்திற் குள்ளாக்கப்பட்டு விட்டேன். அடிமை இந்தியாவில் நான் இறக்கும் நிலை வரக் கூடாது என்று எண்ணுமளவிற்கு கொடுமைப்படுத்தப்பட்டு விட்டோம். அடிமை இந்தியாவில் எனக்கு மரணம் வராமல் இறைவன் என்னைக் காப்பாற்ற வேண்டும்' என்று கண்ணீரோடு கூறினார்.

1914 முதல் 1919 வரை சிறைவாசத்தை மௌலானா முகமதலி அனுபவித்தபோது 'ஜௌஹர்' என்ற புனைப் பெயரில் பல கவிதைகளை எழுதியுள்ளார். அதில் ஓர் கவிதை "ஜௌஹர்! உயிரோடிருக்கும் வரை நீ ஒன்றையும் சரிவரக் காட்டினாயில்லை. ஆயினும் நீ இறந்த பின்னரேனும் உனது யதார்த்தச் சுடரொளி கதிர் விட்டும் பிரகாசிக்கவே செய்யும்" என்று தம்மைப் பற்றி பாடியுள்ளார்.

மௌலானா முகமதலியின் பிரயாணக் காட்சி கல்மனதையும் கரைய வைத்தது. அவரைக் கட்டிலில் படுக்க வைத்து பம்பாய் கடற்கரையிலிருந்து 1930 அக்டோபர் மத்தியில் 'வைசிராய் ஆஃப் இந்தியா' கப்பலுக்கு தூக்கிச் சென்ற போது அங்கிருந்தவர்களின் கண்கள் கண்ணீரால் குளமாயின. மௌலானா முகமதலி பார்வைக்கு உயிருடன் இருந்த பிரேதம் போலவே காணப்பட்டார்.

கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் கராச்சி துறைமுகத்தில் இருந்து கப்பல் ஏறினார் என்று குறிப்பிட்டுள்ளர். பம்பாய் துறை முகமா? கராச்சி துறைமுகமா? எப்படியோ இலண்டனுக்கு மௌலானா முகமதலி பயணமாகி விட்டார்.

துறைமுகத்தில் மௌலானா முகமதலியிடம் ஹாஜி ஜமால் முகம்மது சாகிபு (பிரபல தொழில் அதிபர்) நீங்கள் இப்போது இந்த உடல் நிலையிலும் போக வேண்டுமா? என்றும் தங்கள் உயிர் எங்களுக்கு மிகவும் அருமையானதாயிற்றே என்றும் கூறினார். அதற்கு மௌலானா முகமதலி, ஆமாம் ஜமால் சாகிபு என் உயிர் அருமையானதாக இருப்பதால்தான் நான் போக வேண்டியதாக இருக்கிறது. நான் இப்போது போய்த்தான் ஆக வேண்டும்' என்று நெஞ்சை உருக்கும் முறையில் மௌலானா கூறியதை காயிதே மில்லத் தனது காதுகளாலேயே கேட்டார். அதுமட்டுமா? அப்போது மௌலானா முகமதலி சொல்லாமல் சொன்னார். "நான் போகப் போகிறேன்; இந்த அடிமை நாட்டை விட்டு, இனி இங்கு திரும்பமாட்டேன்'. அந்த வீரஉருவம் கப்பலில் ஏறி அந்த மகா பெரிய அறிஞனின் நினைவு என் நினைவில் இன்னும் புதிதாகவே உள்ளது' என்றார் காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப்.

தென்னிந்தியாவின் வர்த்தக இளவரசர் சென்னையின் வள்ளல் ஹாஜி எம். ஜமால் முஹம்மது சாஹிப் பகதூர் (1882 - 1949) 1930ல் மௌலானா சௌக்கத் அலி சென்னை வந்த போது தனது காரில் ஏற்றி ஜமாலியாவிற்கு அழைத்து வந்ததையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். (எம்.கே. ஜமால் முஹம்மது முப்பெரும் வள்ளல்கள் 2008, சென்னை பக்கம் 6)

மௌலானா முகமதலி பிரிட்டிஷாரையும் இந்துக்களையும் முஸ்லிம்களையும் ஒரே நேரத்தில் எதிர்த்து போர்க் குரல் கொடுக்க வேண்டிய நிலையிலேயே இலண்டனுக்குப் பயணமானார்.பயண வழியில் உடல்நிலை சீர்கேடானது. அவரது இரத்த அழுத்தம் 190ஆனது, நுரையீரல்கள் வலியினைத் தந்தன. நீரிழிவு நோய் வேறு. பாரிஸில் இறங்கினார். அவரது பழைய துருக்கிய நண்பர் டாக்டர் பெஹ்சாட் வக்பி அவருக்கு சிகிச்சை அளித்தார். 6.11.1930 இல் மரணப் படுக்கையில் இருந்த மௌலானா முகமதலி தனது மகளுக்கு அங்கிருந்து கடிதம் எழுதினார். ''எதிலும் சிரமத்திற்கு இடையேதான் வெற்றி உள்ளது'' என்று அதில் எழுதினார். இறைவன் துணை புரிவான். இந்தியாவின் அடிமைநிலை மறைய வேண்டும் என்ற தனது ஆதங்கத்தையும் அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். (அப்துல் மஜித் தாரியாபதி, முற்கூறிய ஆங்கில நூல் தொகுதி இரண்டு, பக்கம் 173)

1930 நவம்பர் மத்தியில் பாரிஸிலிருந்து இலண்டனை அடைந்தார் மௌலானா முகமதலி. அங்கு ஏற்கெனவே ஆகாகான், ஜின்னா, பஸ்லி ஹுசைன் போன்றவர்கள் வந்திருந்தனர்.

19.11.1930 இலண்டன் தூய ஜேம்ஸ் அரண்மனை நான்காவது முழுமையான (Plenary) கூட்டத்தில் மௌலானா முகமதலி ஆற்றிய உரை ஆங்கிலத்தில் 13 பக்கங்கள் உள்ளது. விடுதலை அல்லது வீரமணம் என்ற அடிப்படையில் மௌலானா ஆற்றிய உரையின் சில பகுதிகள் மட்டும்...

(Afsal Iqbal, selected writings and speeches of Maulana Mohamed Ali, Lahore, 1944, page 460)

நான் நோயாளி என்பதால் உட்கார்ந்து கொண்டே பேசலாமா? எனக்கு தேசத் துரோகி எனும் பட்டம் கிடைத்துள்ளது. பணமுடையால் டெய்லி ஹெரல்டு பத்திரிகை தவித்த போது அதற்கு உதவினேன். இன்று பத்து இலட்சம் பிரதிகள் அது விற்பனையாகிறது. அந்த பத்திரிகை எனது படத்தைப் பிரசுரித்து 'மாறியவன்' (Convert) என்ற பெயரையும் எனக்குச் சூட்டியுள்ளது.

தேசாபிமானமிருந்து தேசத் துரோகத்திற்கு மாறியவன் என்பது அதன் அர்த்தம் போலும்.

பர்க் என்பவரின் பேச்சைக் கேட்டிருந்தால் அமெரிக்கா உங்கள் கையை விட்டு சென்றிருக்காது. 'சாப்பாட்டு மணி' "dinner bell" என்று அவருக்கு காமன்ஸ் சபையில் பெயர் சூட்டினார்கள். அவர் பேச எழுந்ததும் யாவரும் சென்று விட்டீர்கள். பர்க்கை போன்றவர்களிடம் இன்னமும் அவ்வாறே நடந்து கொள்கிறீர்கள். பர்க் சொல்வதைப் போல மனிதர்கள் அளவைகள் அல்ல (Men no Measures)

இந்தக் கிழவனுக்கு என்ன நோய்? என்கிறார்கள். எனக்கிருக்கிற நோய் உள்ளவன் ஏழு மைல் கூட போகமாட்டான். நீரும் நிலமும் சேர்ந்து ஏழாயிரம் மைல் கடந்து வந்துள்ளேன் என்று பேசி விட்டு முத்தாய்ப்பாக 'எனது கையில் சுதந்திரம் என்னும் பொருளோடு, சுதந்திரத்தின் சாரத்துடனேயே நான் என் நாட்டிற்குத் திரும்ப ஆசைப்படுகிறேன். இஷ்டப்படுகிறேன். இல்லையேல் நீங்கள் எங்களுக்கு விடுதலை அளிக்காவிடில் இங்கே அது அன்னிய தேசமாயிருந்தாலும், நான் இங்கு உயிர் நீப்பதே மேல். நீங்கள் சுதந்திர நாட்டிலேயே என்னை அடக்கஞ் செய்ய வேண்டும்' என்று வீர முழக்கமிட்டார் மௌலானா முகமதலி.

பைத்துல் முகத்தஸ்ஸில் மௌலானா முகமதலி உடல் நல்லடக்கம் செய்யப்பட்டபோது சிலர் தங்களது மன உணர்வை வெளிப்படுத்தினர். அப்போது அஹ்மது ஜக்கி பாஷா தனது இரங்கற் உரையில், "தனது தேசத்தின் விடுதலைக்காக அநேக ஜிகாத்களை செய்தார். ஜிஹாதிற்கு செய்ய வேண்டிய கடனை நிறைவேற்றிவிட்டார். நிகரற்ற கல்விமான். இவர் மீது இறைவனின் கருணை உண்டாவதாக" என்றார்.

எகிப்து அரசாங்கத்தின் தர்ம பரிபாலன இலாகா மாஜி மந்திரியும் எகிப்து சுயேட்சைக் கட்சித் தலைவருமான முஹம்மது அலி பாஷா தனது இரங்கல் உரையில், 'பலம் சத்தியமாக ஆகி விடாது. ஆனால் சத்தியம் பலமாக ஆகிவிடும் என்பது மௌலானா முகமதலியின் எண்ணத்திலும் சிந்தையிலும் குடி கொண்டிருந்தது. கண்ணியம் வாய்ந்த வழிப் போக்கரே கஷ்டம் பளுவானது. ஆனால் பொறுமையினால் பலனுண்டு என்பதை கவனிக்கிறோம்.

நீங்கள் இறக்கவில்லை. மேலும் நீங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்குப் பின் எங்களுக்கு ஆறுதல் அளிக்க வல்லது உங்களது பணிகள்தான். அவை எப்பொழுதும்

இருந்து கொண்டிருக்கும். நீங்கள் செல்வதற்கு முன்பு உமது செயல்கள் முன்னால் சென்றிருக்கின்றன. அவைகள் உமக்காக சுவர்க்க லோகத்து தலைவாசல்களைத் திறந்து வைத்திருக்கின்றன. உமது நண்பர்களுக்காக, உறவினர்களுக்காக மௌலானா முகமதலியே நீங்கள் பெருமைகளை விட்டுச் சென்றிருக்கிறீர்கள்' என்று பேசினார்.

டில்லி நகரசபை மண்டபத்தில் மௌலானாவின் படம் தொங்கவிடப்பட தீர்மானிக்கப்பட்டது; பம்பாய் மாநகராட்சி பம்பாய் நகரில் இரண்டு சாலைகளுக்கு முகமதலி சாலை என்று பெயரிட்டது. அலகாபாத் நகர சபை முகமதலி பூங்காவையும், முகமதலி சாலையையும் அமைத்தது. அஜ்மீரில் பியாதர் என்ற இடத்தில் முகமதலி நினைவு உயர்நிலைப் பள்ளி பிர்ஜா அப்துல் காதிர் எம்.ஏ. எல்.எல்.பீ. முயற்சியால் துவங்கப்பட்டது.

7.1.1931இல் தமிழ் மணக்கும் நவசக்தியில் தமிழ்த் தென்றல் திரு.வி. கல்யாண சுந்தர முதலியார் 'சிங்கம் வீழ்ந்தது' என்ற நீண்ட கட்டுரையை எழுதினார்.

"பாரத மாதாவின் அடிமைத் தளையை உடைத் தெறியப் பிறந்தவர்களில் மௌலானா முகமதலியும் ஒருவர். முகமதலி உரிமை விதையில் தோன்றியவர். உரிமைப் பாலை உண்டவர். உரிமைக் காற்றில் வளர்ந்தவர்; அவர் எண்ணியது உரிமை; அவர் பேசியது உரிமை; அவரது வாழ்வே உரிமை வாழ்வாக விளங்கிற்று. அவர் இறுதிக்காலத்தில் கூறியதென்ன? உரிமை இந்தியாவிற்கே செல்வேன்; இல்லையேல் இங்கிலாந்தில் உயிர் துறப்பேன்' என்றார். அவரது உரிமை வேட்கையை என்னவென்று இயம்புவது! அரிய உரிமைச் செல்வத்தை நாடு இழந்தது.

அவரது உரிமை வேட்கையையும் அஞ்சா நெஞ்சையும் சிங்கநோக்கையும் பீடு நடையையும் மின்னொளியைப் போல கோடை இடியையும் பெரும் புயலையும் ஒருங்கே திரட்டி எழுப்பவல்ல பேச்சையும் விடுதலைப் போரையும் நாடு இனி எங்கே கேட்கும்? எங்கே காணும்? எங்கே பெறும்?

மௌலானா முகம்மது செல்வஞ் சிறந்த குடும்பத்தில் பிறந்தார். தேசத்தின் பொருட்டு அச்செல்வத்தை இழந்தார். இழந்துஞ் சலிப்புறாது தேச சேவை செய்தார். இத்தியாக மூர்த்தியை அகாலத்தில் இழக்க நேர்ந்தமை குறித்து எவரே வருந்தார்? மௌலானா முகமதலியின் பிரிவு குறித்து பாரத நாடே வருந்துகிறது. முஸ்லிம் உலகம் வருந்துகிறது. எல்லோரும் வருந்துகிறார்; எல்லாம் வருந்துகின்றன' என்று திரு.வி.க. சூட்டினார்.

1921களில் கிலாபத் இயக்கம், ஒத்துழையாமை இயக்கம் ஆகியவை தமிழகத்தில் தீவிரமாக செயல்பட்ட போது, இந்தியத் திருநாடே அலறிய போது, தமிழகத்தை சேர்ந்த கவிஞர் ஒருவர் மௌலானாவின் புகழ் பாடினார்.

முத்தமிழ் சேத்திர மதுரகவி பாஸ்கரதாஸ் (30.6.1892 – 20.12.1952) இந்திய விடுதலைப் போராட்டச் செய்தியை வெகுமக்களிடம் வீதி வீதியாகக் கொண்டு சென்ற பணியினை சிறப்பாகச் செய்தவர். ச. முருக பூபதி கொடுத்த அவரது நாட்குறிப்புகள் 719 பக்கங்களில் 2009இல் வெளிவந்துள்ளது. மதுரகவி பாஸ்கரதாஸ் வாழ்வும் பணியும் க. அய்யாசாமி அவர்களால் தொகுத்து 78 பக்கங்களில் 2016இல் வெளிவந்துள்ளது. அந்த நூலில் பக்கம் 14, 15இல் அவரது தேசப்பக்திப் பாடல்களில் 33 தலைப்பினைத் தந்துள்ளார்கள். அதில் கவனமாக மௌலானா முகமதலியை விட்டு விட்டார்கள். மதுர கவி பாஸ்கரதாஸ் இயற்றிய இந்து தேசாபிமானிகளின் செந்தமிழ்த் திலகம் எனும் நூல் 1922 இல் இ. ராமசாமிக் கோனாரால் அச்சிடப்பட்டு ஆறு அனா (36 பைசா) விலையில் வெளிவந்துள்ளது. அதில் பக்கம் 16, 17 இல் உள்ள பாடல்கள், மௌலானா அவர்கள் மீது பாடியது, இதோ:

அலி சகோதர ஸ்ரீமான்கள்

16 மயிலே உன் சாயல் கொண்ட என்ற மெட்டு

கிராகம் இந்துஸ்தான் தோடி – தாளம் – ஆதி

(பல்லவி)

சுதேச மகம்மதலி சோதர ஷவுக்கத் அலி

(அநு பல்லவி)

இதோ ப்தேசஞ் சொலி

இசையல்லாகு அக்பரு ராலி

(சரணம்)

மதாபிமான சித்தர்

மாறாத தேசபக்தர்

வாஞ்சைக் கிலாபத்தின் போர்

தாஞ் செய்யுஞ் ஜீவன் முத்தர்

அஞ்சாத இந்திய மாதாவின் நேத்திரம்

ஆகவே வந்த புஸ்யர்

அவனிமேல் நமக்காகச் சிறையேகி மீண்டதோர்

அவதார புருஷ கண்யர்

17. கவுன மிஸியாரா என்ற மெட்டு

இராகம் செஞ்சுருட்டி தாயும் – ஆதி

(பல்லவி)

முகம்மதலி ஷவுக்கத் அலி மொழி கேட்பாய் செவியே முயல்
மான்கள் குலப் பாங்கதனை தாங்குமதி ரவியே

(ரவி = சூரியன்

மதி = சந்திரன்)

மாட்சிமை சேர்புவியே சுய
ராச்சிய உதவியே நாம்
மாஹப் பெற்றேங்கச் செயும்
மகிபரைக்க குவியே
துருக்கி சுல்தான் தனைக் குருவாய்ச்
சொல்லும் வேத மந்திரன் ஒரு
தோஷமில்லாத் தேசபக்த
நேச ராஜ தந்த்ரன்
சோபித நிரந்தரன்
கிலாபத்திற்கேயந்தரன் மலர்
தூஷப் பலர் கூவிப் புகழ்
ஜீவிய நரேந்த்ரன்

காந்திமஹான் ஒத்துழையாமைக் கட்டளைப் ரகாரன்
வெகுகவனமுடன் புவன மெல்லாம் பவனி செய்ப் ரசாரன் (பிரசாரன்)

கண்ணிய வித்தாரன் திட
காத்திரவு தாரன் மணங்
கமழ் மதுரபாஸ்கரன் சொல்
தமிழ் பெறுங் கம்பீரன்

என்று மொலானா முகமதலி ஷவுக்கத் அலியை மதுரகவிபாஸ்கர தாஸ் போற்றிப் பாடியது வரலாறு.

1920களில் காந்தியும் மௌலானா முகமதலியும் சௌக்கத் அலியும் ஈரோடு வந்தபோது கூடியிருந்த மக்களை பார்த்து காந்தியடிகள் 'ஷௌக்கத் அலி முகமதலிக்கு ஜே' என்று

கோஷமிடுமாறு வேண்டுகோள் விடுத்தார். அதன்படியே மக்கள் கோஷமிட்டனர். விண்ணுக்கு எட்டும் வகையில் அந்தக் கோஷத்தை மக்கள் முழங்கினர்.

1920இல் திருச்சி சவுக் மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்தில் 'வந்தார் காந்தி இப்புறம் முகமதலி, அப்புறம் ஷௌகத் அலி.. விஜயனும், பீமனும் போல தொடர்ந்தனர்' என்று இந்தக் காட்சியை நேரில் பார்த்த கவியோகி சுத்தானந்த பாரதியார் வர்ணித்துள்ளார் (வி.என்.சாமி, விடுதலைப் போரில் முஸ்லிம்கள், மதுரை 2009, பக்கம் 364, 365) என்று தமிழகம் 1920 முதல் 1931 இல் அவர் மறைவு வரை மௌலானாவின் புகழைப் பாடிக் கொண்டே இருந்தது. இன்று இளைய தலைமுறை அறியும் பொருட்டு மீண்டும் நினைவூட்டவே இதனைத் திரும்பவும் ஞாபகம் படுத்தியுள்ளேன்.

பேகம் சாஹிபா

மௌலானா முகமதலி மறைவிற்குப் பின் காயிதே ஆஜம் முகமதலி ஜின்னா, மௌலானாவின் மனைவி பேகம் சாஹிபாவை முஸ்லிம் லீக் காரியக் கமிட்டி உறுப்பினராக நியமித்து கௌரவித்தார். காரியக் கமிட்டியில் மௌலானா முகமதலியின் துணைவியாரின் ஆலோசனைகள் மிகவும் போற்றத்தக்கதாக இருந்தன. நம்பிக்கையின் இருப்பிடமாகவும் அவர் திகழ்ந்தார். ஒரு சமயம் முக்கியப் பிரச்சனை குறித்த விவாதத்தில் அவரும் கலந்து கொண்டார். இது குறித்து யாரிடமும் எதுவும் கூறக்கூடாதென உறுப்பினர்கள் அறிவுறுத்தப்பட்டனர். கூட்டம் முடிந்து பேகம் முகமதலி வெளியே வந்தபோது ஜின்னாவின் சகோதரி பாத்திமா ''கூட்டத்தில் என்னென்ன முடிவுகள் எடுக்கப்பட்டன?'' என்று கேட்டபோது, பேகம் சாஹிபா சிரித்துக் கொண்டே, ''ஏன் தங்கள் சகோதரரிடம் (ஜின்னாவிடம்) கேட்டுக் கொள்ளக் கூடாதா?'' என்றார். கணவரைப் போலவே மிகவும் திறமையுடன் பணியாற்றினார் பேகம் சாஹிபா. (அப்துற் றஹீம், விடுதலை வீரர் மௌலானா முஹம்மது அலி ஜவ்ஹர், சென்னை, 1979, பக் 37, 38)

''பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பிடரி மயிரைப் பிடித்து உலுக்குவதற்கு என்னிடம் இரு சிங்கங்கள் இருக்கின்றன'' என்று மகாத்மா காந்தியால் பெருமையாகப் பேசப்பட்டவர்கள் மௌலானா முகமதலி, மௌலானா சௌக்கத் அலி.

1931 கராச்சி காங்கிரசில் பண்டித மோதிலால் நேருவிற்கும் மௌலானா முகமதலிக்கும், மௌலவி மஷ்ருல் ஹக்கிற்கும் இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழகத்தில் 1932இல் மௌலானா சௌக்கத் அலியின் உரையை 9 பைசா விலையில் சே.கா. ஷாஹுல் ஹமீது ராவுத்தர் (பேட்டை) அச்சிட்டு வெளியிட்டார். மௌலானா முகமதலியின் உரையை 1945ல் ஒன்றரை அனா விலையில் கடையநல்லூர் முஸ்லிம் யூனியன் வெளியிட்டது.

Santimoy Ray, Freedom Movement and Indian Muslims நூலில், (புதுடில்லி 1983, பக்கம் 48ல் 59இல்) இந்திய அரசியலில் அலி சகோதரர்கள் முக்கியப் பங்கு வகித்ததை குறித்து எழுதியுள்ளார்.

1929இல் வட்டமேஜை மாநாட்டிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்பட்டவர் சௌக்கத் அலி. மௌலானா சௌக்கத் அலி 1935இல் மத்திய சட்டசபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றினார். 1938 நவம்பர் 26இல் மௌலானா சௌக்கத் அலியும் இவ் மண்ணுலக வாழ்வைத் துறந்தார். (C. Purushotam Mehra, Dictionary of Modern Indian History 1707 - 1947, Calcutta, 1985, page 657)

ஒத்துழையாமை இயக்கத்தால், அலி சகோதரர்கள் வருகையால் காங்கிரஸ் புத்தெழுச்சி கொண்டது என்பதை India's struggle for Independence என்ற பிபன் சந்திரா மற்றும் நால்வர் எழுதிய நூலில் பக்கம் 187இல் காணலாம். (புதுடில்லி 1999) துணிச்சல் மிக்க வீரர்கள் கிலாபத் இயக்கத்திற்கு தலைமை தாங்கினார்கள் என்று மௌலானா முகமதலியையும் மௌலானா சௌக்கத் அலியையும் பெர்சிவில் ஸ்பயர் புகழ்கிறார். (Percival Spear, The Oxford History of Modern India 1740 - 1975 Third Edition, Delhi, 1988. page 342)

'அடிமையிற்சாகேன்' என்றே ஆர்ப்பரித்தார்; மேலை நாட்டில் விடுதலை முழக்கங்காட்டி ஆவியை விட்ட அண்ணல் பிடிசாம்பல் பெறுக! வெள்ளைப் பேயனே! என்ற தீரர் திடமுறும் சிதம்பரங்கள் தேசத்தில் தோன்ற வைத்தார்; பன்மொழிப்புலவர்; பேச்சுப் பாவலர்; சிறையில் நைந்தும் நன்னெறி வகுத்த சிங்கம் நானிலத் தாய் கொஞ்சும் செல்வம்; முன்மறை வடிவத் தோராம் முஹம்மதலி சாகவில்லை. அன்னவர் போல் ஓர் சூரர் அவனியில் பிறப்பதுண்டோ? என்று அறிஞர் மதனீ பாடியது நினைவிற்கு வருகிறது. அலி சகோதரர்கள் புகழ்பாடுவோம் அவர்களது வரலாற்றை இளையத் தலைமுறை அறியச் செய்வோம்!

மறைக்கப்பட்ட வரலாறுகளை மீண்டும் வெளிச்சத்திற்கு கொண்டு வரும் தமிழ் வரலாற்றாய்வாளர்களில் செ. திவான் முன்னணியில் இருக்கிறார். திரிக்கப்பட்ட வரலாற்றை, அதன் உண்மை வடிவத்தில் மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற ஆவலின் வெளிப்பாடே அவரின் எழுத்துக்கள். தனது எழுத்துக்கள் அனைத்தையும் ஆதாரப்பூர்வமாக நிறுவுவது செ. திவான் அவர்களின் தனித்துவமாகும்.

மௌலானா முஹம்மது அலி சிறந்த பத்திரிகையாளர் என்பது நிச்சயம் பலருக்கும் புதிய தகவலாகத்தான் இருக்கும். இதுபோன்ற பல சுவாரஸ்யமான செய்திகள் விரிவாகவே இந்த நூலில் கொடுக்கப்பட்டுள்ளன.

முஸ்லிம்களின் அடையாளங்கள் இடங்களின் பெயர்களிலும், சாலைகளின் பெயர்களிலும் இருக்கக் கூடாது என்று கட்டுக்கடங்காத மதவெறி கொண்ட கும்பல் ஆட்சியில் அமர்ந்து வரலாற்றை மறைப்பதிலும் திரிப்பதிலும் மும்முரமாக செயல்பட்டு வரும் சூழலில், அலி சகோதரர்களின் வரலாற்றை அறிந்து கொள்வது இந்தியர்களின் கடமையாகும்.

ILAKKIYACHOLAI
இலக்கியச்சோலை

₹ 90.00

ISBN 978-81-936643-2-2

9 788193 664322